# தமிழில் பிற துறைக் கோட்பாட்டாய்வுகள்

## -வரலாறும் மதிப்பீடும்



முனைவர் ம. மதியழகன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# தமிழில் பிறதுறைக் கோட்பாட்டாய்வுகள்
## வரலாறும் மதிப்பீடும்

முனைவர் ம. மதியழகன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை-600 113

கலைநிலயம் டி.என். சேஷாசலம் அறக்கட்டளைச் சொற்பொழிவு

(அறக்கட்டளை நிறுவியவர் திருமிகு பரணீதரன்)

வரிசை எண் : 7 நாள் : 25-1-2005

---

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tamilil Piraturaik Kōṭpāṭṭāyvukaḷ - Varalāṟum Matippīṭum |
| Author | : | Dr. M. Mathiyazhagan<br>Associate Professor<br>Department of Tamilology<br>Pondicherry University, Pondicherry. |
| General Editor | : | Dr. S. Sivakami<br>Associate Professor<br>International Institute of Tamil Studies |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113.<br>Ph: 22542992 |
| Publication No. | : | 530 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2005 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | vi + 74 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 25/- (Rupees Twenty Five Only) |
| Printed by | : | United Bind Graphics<br>189 (101-D), Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004. |
| Subject | : | Literary Criticism |


---

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துக்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

## அணிந்துரை

தமிழ் மொழி இலக்கண இலக்கிய வளம் செறிந்தது. இவ்விலக்கிய இலக்கண வளம் மொழியின் தொன்மையையும், அம்மொழியின் இன்றைய நிலைப்பாட்டையும் தெளிவுறக் காட்டுவனவாகும். ஓர் இலக்கிய உருவாக்கத்திற்குரிய வடிவம், பாடுபொருள், பாடும் முறை ஆகியவற்றைக் கொண்டு ஒரு படைப்பைத் திறனாய்வு செய்யும் நிலை பெரிதும் வளர்ந்துள்ளது. இத்தகு ஆய்வு ஒரு படைப்பில் பல்துறை ஆய்வுகளைக்கொண்டு செய்வதாகவும், பிறமொழிப் படைப்புகளோடு ஒப்பிட்டு ஆய்வு செய்வதாகவும் விரிவடைந்துள்ளது. இத்திறனாய்வு என்பது இன்று தனித்துறையாகவும் வளர்ந்துள்ளது. இவ்வகையில் இலக்கியத் திறனாய்வுக்கென என இந்நிறுவனத்தில் அமைக்கப்பட்ட கலாநிலயம் டி.என்.சேஷாசலம் பெயரில் அமைந்த அறக்கட்டளை வரிசையில் இப்பொருண்மையில் தொடர்ந்து சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன. இச்சொற்பொழிவு வரிசையில் 7ஆம் சொற்பொழிவு **தமிழில் பிற துறைக் கோட்பாட்டாய்வுகள் -வரலாறும் மதிப்பீடும்** என்ற தலைப்பில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சொற்பொழிவைப் புதுவைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் ம. மதியழகன் அவர்கள் வழங்கியுள்ளார். பிறதுறைக் கோட்பாட்டு ஆய்வுகளையும் அவற்றால் தமிழ் இலக்கியம் பெற்ற சிறப்பையும் மதிப்பீடு செய்யும் நோக்கில் இச்சொற்பொழிவு சிறப்பிடம் பெறுகின்றது. புதுவைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் பல ஆண்டுகள் பணியாற்றிய அனுபவத்தில் இலக்கியத் திறனாய்வைத் தன் ஆய்வுப் புலமாக எடுத்துக்கொண்டு இலக்கிய ஆய்வில் முழுவதுமாகத் தோய்ந்த நிலையில் சிறப்பாகப் பணியாற்றிவருகின்ற முனைவர் ம. மதியழகன் அவர்கள் குறித்தகாலத்தில் இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவு எழுத்துருவை வழங்கியமைக்கு நிறுவனத்தின் சார்பில் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவு நூலை வெளிக்கொணர்வதற்குப் பொறுப்புடன் செயல்பட்ட இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கு நன்றியும் பாராட்டுகளும்.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் **திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,** அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் **திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளி அச்சுக்கோப்புச் செய்த திருமதி பி.கௌசல்யாவுக்கும், அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை
22-01-2005

இயக்குநர்

## ஆசிரியர் அறிமுகம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | ம. மதியழகன் |
| பிறந்த நாள் | : | 16-12-1955. |
| பணி மற்றும் பணியாற்றுமிடம் | : | இணைப்பேராசிரியர், தமிழியற்புலம், புதுவைப்பல்கலைக் கழகம், புதுச்சேரி - 605014. |
| முனைவர் பட்டம் | : | 'மலேசியத் தமிழ் நாவல்கள்'(1984) அண்ணாமலைப் பல்கலைக்கழகம் |
| எழுதியுள்ள நூல்கள் | : | தமிழியல் ஆய்வு வரலாறு<br>நவீன இலக்கியச் சிந்தனைகள்<br>உள்ளிட்ட ஆறு நூல்கள் |
| பரிசுபெற்ற நூல்கள் | : | விடுதலைக்குப்பின் தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி (மெய்யப்பனார் அறக்கட்டளை) |
| சிறப்பு ஆய்வுப்பகுதி | : | நவீன இலக்கியம், இலக்கியத் திறனாய்வு. |
| சென்று வந்த நாடுகள் | : | மலேசியா, சிங்கப்பூர், இலங்கை. |
| ஆய்வுத் திட்டங்கள் | : | பல்கலைக் கழக நல்கைக் குழுவின் இரு திட்டக் கட்டுரைகள் ( Two Minor U.G.C. Projects) முடிக்கப்பட்டுள்ளன. |
| இல்லமுகவரி | : | 40, 2வது குறுக்குத் தெரு,<br>எவரெஸ்ட் வீதி, குறிஞ்சிநகர்,<br>புதுச்சேரி - 605008.<br>☎ 2255263. |

# நன்றியுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ள கலாநிலயம் டி.என். சேஷாசலம் அறக்கட்டளையின் சார்பில், நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களின் வேண்டுகோளை ஏற்றுத் '**தமிழில் பிறதுறைக் கோட்பாட்டாய்வுகள் வரலாறும் மதிப்பீடும்**' (The History and Review of Interdisciplinary Research in Tamil) என்ற தலைப்பில் நூலினை எழுதும் முயற்சியை மேற்கொண்டேன்.

இயக்குநரும் நண்பருமான முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்கள் பலமுறை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நினைவு படுத்தியிருக்காவிடில், இதனை என்னால் உரிய நேரத்தில் முடித்திருக்க முடியாது. எனவே, இயக்குநர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன். அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் ச.சிவகாமி அவர்களுக்கும் உளங்கனிந்த நன்றி.

ம. மதியழகன்

# உள்ளே


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 1 |
| படைப்பும் திறனாய்வுக் கோட்பாட்டு வளர்ச்சியும் | 13 |
| தமிழில் பிறதுறைக் கோட்பாட்டு நூல்கள் | 19 |
| பிறதுறைக் கோட்பாடுகளைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்ட நூல்கள் | 36 |
| அ. மார்க்சிய ஆய்வுகள் | 36 |
| ஆ. அமைப்பியல், பின் அமைப்பியல் ஆய்வுகள் | 52 |
| இ. தலித்திய ஆய்வுகள் | 59 |
| ஈ. பெண்ணிய ஆய்வுகள் | 65 |
| முடிவுரை | 72 |

# முன்னுரை

தமிழில் தொன்று தொட்டு இலக்கியம், இலக்கணம் பற்றிய சிந்தனைகள் இருந்து வந்துள்ளதை இலக்கண முயற்சி, தொகுப்பு முயற்சி, உரை முயற்சி மூலம் உணர்ந்து கொள்ளலாம். இத்தகு முயற்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட சிந்தனைகளே அன்றைய இலக்கியத் திறனாய்வுக் கருத்துகளாகும். தற்பொழுது, ஆங்கிலக்கல்வி மற்றும் மேலை நாட்டுச் சிந்தனைகளின் தாக்கத்தினால் பல்துறைக் கல்விமுறை பெருகிவந்துள்ளது. இதனால் மானிடவியல், சமூகவியல், உளவியல், நாட்டுப்புறவியல், மொழியியல் போன்ற புதிய துறைகள் நமக்கு அறிமுகமாயின.

இலக்கியத் திறனாய்வு என்ற புதிய நெறிமுறை அல்லது துறை 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து தொடங்கினாலும், இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு இலக்கியத்தை உள்ளடக்கிய நிலையிலேயே அதன் பல்வேறு கூறுகளையும் விளக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அஃதாவது, இலக்கியத்தை விட்டு வெளியே செல்லாத திறனாய்வு முயற்சிகளே செய்யப்பட்டன. ஓர் இலக்கியத்தில் இடம்பெற்ற உள்ளடக்கச் சிறப்புகள், உத்திச்சிறப்புகள், வடிவச்சிறப்புகள் போன்றவற்றை எடுத்துரைத்து இலக்கிய நயம் கூறுதலே இலக்கியத்திறனாய்வு என்ற நிலை தொடக்கநிலையில் அதிகமாகக் காணப்பட்டது; இன்று அருகிக் காணப்படுகின்றது.

இப்போக்கில் பண்டிதத் திறனாய்வும், பாராட்டுமுறைத் திறனாய்வும் இடம்பெற்றன. மரபைப் பின்பற்றி இலக்கியத்தையோ ஆசிரியரையோ குறைகூறாது பாராட்டும் முறையிலேயே அஃதாவது 'திருவள்ளுவமாலை' போன்ற திறனாய்வு முயற்சிகளே பெரும்பாலும் வெளிப்பட்டுள்ளன என்பதைத் தமிழ்த் திறனாய்வு வரலாற்றைக் கூர்ந்து நோக்கும் போது அறியமுடிகிறது. இந்நிலையில், மானிடவியல், உளவியல், சமூகவியல் போன்ற துறைகள் தனித்தனியே வளர்ச்சியுற்றிருப்பினும், இலக்கியத் திறனாய்வு முயற்சிகளில் அத்துறையின் பயன்பாடு குறித்த சிந்தனைகள் எழவில்லை.

இலக்கியத் திறனாய்வைப் பொறுத்த வரையில், ஒப்பியல் இலக்கியம் (Comparative Literature) அறிமுகப்படுத்தப்பட்டபோதே, பிறதுறை பற்றிய கருத்துகளை இலக்கியத் திறனாய்விற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிற போக்கு உருவாகத்

தொடங்கியது. ஒப்பியல் இலக்கியம் உருவான போதுகூட இலக்கியத்தோடு பிற இலக்கியத்தை ஒப்பிடுதலே பெரும்பான்மையாக வெளிப்பட்டது எனலாம். இலக்கியத்தோடு பிறதுறைகளைப் பயன்படுத்தி ஆய்வு செய்கின்ற போக்கு 1950களுக்குப் பின்னரே எழுந்தது.

இலக்கியத்தை இலக்கியத்தோடு ஒப்பிடல் என்பது வ.வே.சு. ஐயரின் Kambaramayana A Study (1921) மூலம் உருவானது எனலாம். தொடக்க காலங்களில் (20ஆம் நூற்றாண்டின் முற்பகுதிகளில்) தமிழாய்வு என்பது வரலாற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. அரசியல் வரலாறு (Political History) எழுதப்பட்டது போல இலக்கிய வரலாறுகளும் எழுதப்படலாயின. மேலும், இலக்கிய வரலாறு எழுதுவதற்குக் காலநிரல் பட்ட இலக்கியங்களின் தொகுப்பு தேவையாயிற்று. இதனால் இலக்கியங்களின் காலம் பற்றிய ஆய்வுகள் அதிகப்படலாயின. பெ. சுந்தரம்பிள்ளை தொடங்கி எஸ். வையாபுரிப் பிள்ளை வரையில் பலதிறப்பட்ட தமிழறிஞர்களும், வரலாற்றாசிரியர்களும் கால ஆய்வுப் பணியை மேற்கொண்டனர். எனவே, வரலாறு என்ற துறை இலக்கியக் கால ஆய்வுக்கும், இலக்கிய வரலாறு உருவாக்கத்திற்கும் பயன் கொள்ளப்பட்டிருந்தது. பிடி. சீனிவாச அய்யங்கார் தொடங்கிச் சதாசிவ பண்டாரத்தார் வரை வரலாற்றாசிரியர்களின் பங்களிப்பும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கதாகும். மனித வாழ்க்கையின் பல்வேறு நிகழ்வுகளை, எண்ணங்களை, அரசியல் செயற்பாடுகளை, சமுக வழக்காறுகளை, பண்பாட்டு விழுமியங்களை, பழக்க வழக்கங்களை வெளிப்படுத்தி வருவன இலக்கியங்கள். அவ்விலக்கியங்களைத் திறனாய்வு செய்கின்ற போது, இலக்கியத்திற்குரிய இலக்கண விதிகளை மட்டும் கொண்டு பார்க்கின்ற மரபுப் பார்வையினின்றும் மாறி, மனித வாழ்க்கையை விவரித்து விளக்கம் கூறும் அறிவுத்துறைகள் அனைத்தையும் தழுவியதாகக் கொண்டு நோக்குகின்ற முறை ஏற்படலாயிற்று. எனவே, இலக்கியத் திறனாய்வு என்ற துறை வரலாறு, சமூகவியல், மானிடவியல், உளவியல், மொழியியல், தத்துவவிய ல் போன்ற துறைகளின் செல்வாக்கையும் கொண்டிலங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. (தற்போது பின்நவீனத்துவச் சிந்தனையின் விளைவாக, மொழியே பல்துறை அறிவுகளின் அடையாளங்களைத் தன்னகத்தே கொண்டு பல்வேறு பனுவல்களாக வெளிப்பட்டுள்ளது என்ற கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது. இத்தகு சிந்தனைகள் கோட்பாடு நிலையிலேயே உள்ளதால் இங்கு அக்கருத்துகள் விரிவாகப் பேசப்படவில்லை).

இவ்வாறு பிற துறைகளைச் சார்ந்தும் தனித்தும் இயங்கும் இப்பண்பே நவீன இலக்கியத் திறனாய்வை முற்கால இலக்கிய ஆய்வுகளிலிருந்து வேறுபடுத்துகின்றது[1]. இன்றையத் திறனாய்வுப் போக்கைக் கவனிப்பின், காரல்மார்க்ஸ், சிக்மண்ட் பிராய்டு, பெர்டினன்ட் டி சசூர், லெவிஸ்டராஸ் போன்ற பிறதுறை அறிஞர்களின் கருத்துகள் (சமூகவியல், உளவியல், மொழியியல், மானிடவியல்) இடம்பெற்றிருப்பதைக் காணலாம். இத்தகு திறனாய்வுக் கோட்பாடுகள் எழுவதற்குமுன் பண்பாட்டியல், கல்வெட்டியல், அகராதியியல் போன்ற துறைகளில் நிகழ்ந்த ஆய்வுகளைச் சுட்டும் போது அவற்றைத் 'தமிழியல்' (Tamil Studies) என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளமையையும் நோக்க வேண்டும். 'தமிழியல்' என்ற சொல்லாட்சி இலக்கியத்தோடு தொடர்பில்லாத பிறதுறைகளையும் உள்ளடக்கிய ஆய்வுகளைக் கொண்ட கருத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது[2]. 'தமிழியல்' என்பது தனித்தனியான துறைகளாக நிற்கக் கோட்பாட்டாய்வுகள் அல்லது ஒப்பிலக்கிய ஆய்வுகள் என்பன இலக்கியத்தோடு பின்னிப் பிணைந்தனவாக வெளிப்பட்டன.

ஒரு துறையின் உண்மைப் பகுதிகளை வெளிப்படுத்த பிறிதொரு துறையின் கூறுகளை அல்லது கோட்பாடுகளைப் பயன்படுத்தும் முறைக்கு ஒருதுறைக் கோட்பாட்டாய்வு (Inter-disciplinary Research) என்றும், ஒரு துறை ஆய்வுக்குப் பல்துறைக் கோட்பாடுகளைப் பயன்படுத்தும் போக்கிற்குப் பல்துறைக் கோட்பாட்டாய்வு (Multi-disciplinary Research) என்றும் பெயரிடுவர். இஃதன்றி, ஒரு துறையில் உருப்பெற்ற கோட்பாடுகள் அல்லது அணுகுமுறைகள் முதலியவை மற்றொரு துறையின் காரணிகளை ஒத்திருக்கும்போது அத்துறையால் அக்கோட்பாடுகளும் அணுகுமுறைகளும் கையாளப்படும் முறைக்கு மாற்றக் கோட்பாட்டாய்வு (Trans-disciplinary) என்று கூறுவர். தமிழைப் பொறுத்தவரையில் ஒருதுறைக் கோட்பாட்டாய்வுகளே நிகழ்ந்துள்ளன எனலாம். குறிப்பாக, மார்க்சியக் கோட்பாட்டாய்வுகள் தமிழில் மேலோங்கி இருந்தன என்றும் கூறலாம். இலக்கிய ஆய்விற்குப் பலதுறைகளையும் பயன்படுத்தும் போக்கு, கோட்பாட்டளவில் கூறப்பட்டுள்ளதே ஒழிய பயன்பாட்டளவில் (Application Method) நிகழ்த்தப் பெறவில்லை என்லாம். இத்தகு கோட்பாட்டாய்வுகளை அணுகுமுறை ஆய்வுகள் (Approaches) என்றும் குறிப்பிடலாம். அணுகுமுறை கொண்ட ஆய்வுகள் சிலவற்றில் குறிப்பிட்ட கோட்பாடுகளை மையமிடாமல் செய்யப்பட்டவையும் உண்டு. மூன்றவதாகிய மாற்றக் கோட்பாட்டாய்வு என்பது சசூரின் மொழியியல் அணுகுமுறையை (அமைப்பியல் கருத்தை) லெவிஸ்ட்ராஸ் மானிடவியலுக்குப் பயன்

கொண்டதைச் சான்றாகக் கொள்ளலாம். சார்லஸ் டார்வினின் கூர்தலறக் கோட்பாட்டைச் சமூகவியல் ஆய்வுக்குப் பயன்படுத்துவதும் இத்தகு ஆய்வுமுறையைச் சார்ந்ததேயாகும்.

தமிழில் ஒருதுறைக் கோட்பாட்டாய்வு இன்றைக்குப் பல்கிப் பெருகி வந்திருப்பினும், அவை பற்றிய மதிப்பீடுகள் இன்னமும் செய்யப்படவில்லை. மார்க்சிய எதிர்ப்பாளர்களால் ஓரளவிற்கு மதிப்பீடு செய்யப்பட்டதேயன்றி (க. கைலாசபதியின் ஆய்வுகளை வெங்கட்சாமிநாதன் விமரிசனம் செய்தது) அவற்றை முழுமையான மதிப்பீடுகளாகக் கொள்ளமுடியாது. இன்றைக்குப் பின்நவீனத்துவச் சிந்தனைகளின் விளைவாக மார்க்சியமே மறுபரிசீலனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றது. (தமிழவன், அ.மார்க்ஸ் போன்றோரின் அண்மைக்காலக் கருத்துகள்)

இலக்கியத்தை உள்ளடக்கிய திறனாய்வுகளே மிக்கிருந்த காலத்தில், பிறதுறைக் கோட்பாடுகளைக் கொண்டு அணுகிய பார்வைகள் வேறுபட்டு நின்றன. தமிழ் நாவல்கள் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகள் குறித்துப் பேசிய நா.வானமாமலை,

> **'இக்கட்டுரைகள் இலக்கிய விமர்சனங்கள் அல்ல. இலக்கிய ஆய்வுக்கட்டுரைகள். இவற்றை எழுதப் பல்துறை அறிவும் உருவ அமைப்பின் ஆராய்ச்சிக்குத் தேவையான அழகியல் அறிவும் பயன்படுத்தப்பட்டன'**

என்கிறார்[3]. இதன்மூலம் இலக்கியத் திறனாய்வுக்கும், பிறதுறைகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட ஆய்வுகளுக்கும் வேறுபாடுண்டு என்பது தெளிவாகிறது.

உளவியல், மானிடவியல் போன்ற துறைகளில் மிகக் குறைந்த விழுக்காடே ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. உளவியல் என்பதை உளக்குறிப்பு அறிந்து நடத்தல் என்ற சாதாரண பொருள் அடிப்படையில் இலக்கியங்களை அணுகுகின்ற முறை தொடக்கத்தில் இருந்து வந்தது. பிராய்டு, யங், அட்லர் போன்றோரின் உளவியல் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் ஒரு சிலவே வந்துள்ளன. அவையும் பாலியல் தொடர்பான உளவியலை வெளிப்படுத்துவனவாகவே அமைந்துள்ளன. உளவியலில் பல்வேறு பகுதிகள் இருப்பினும் இலக்கியத் திறனாய்விற்குப் பாலியல் தொடர்பான விளக்கங்கள் மட்டுமே தமிழில் நிகழ்த்தப்பட்டுள்ளன[4]. எனினும், தமிழில் அத்தகு முயற்சிகள் புதுவரவுகள் என்ற நிலையில் வரவேற்கத்தக்கனவே. அதேபோல் மானிடவியல் ஆய்வுகள் தமிழில் மிகக்குறைந்த அளவிலேயே வெளிப்பட்டுள்ளன. பக்தவச்சல பாரதியின்

'பண்பாட்டு மானிடவியல்', 'தமிழர் மானிடவியல்' போன்ற நூல்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை[5]. மொழியியல் தனித்ததொரு துறையாகத் தமிழில் வளர்ந்திருப்பினும், அம்மொழியியலைக் கொண்டு இலக்கியத்தை அணுகுகின்ற போக்கு குறைந்தே காணப்படுகின்றது[6]. மொழியியல் ஆய்வால் தமிழ் இலக்கணங்கள் புதிய பரிமாணங்களைத் தொட்டிருக்கின்றன. மொழியியலின் பிரிவுகளான சமூக மொழியியல், நடையியல் போன்றவற்றைக் கொண்டு இலக்கியங்கள் அணுகப்பட்டால் இலக்கிய வரலாற்றிலும், சமூக வரலாற்றிலும் சில தெளிவுகளைப் பெறலாம்.

1980களில் அமைப்பியல் என்ற சிந்தனை தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழவனால் அறிமுகப்படுத்தப்பட்ட அமைப்பியல் என்ற சிந்தனை கோட்பாட்டளவில் இடம் பெற்றது. அவ்வாறே, பின் அமைப்பியல், பின் நவீனத்துவம் போன்றவையும் கோட்பாட்டளவிலேயே அறிமுகமாயின. 1990களில்தான் அக்கோட்பாடுகளைக் கொண்டு அணுகுகின்ற போக்கு ஏற்படலாயிற்று. பின்நவீனத்துவச் சிந்தனைகள் எற்படுவதற்கு முன்னரே பெண்ணியம், தலித்தியம் போன்றவை தமிழில் எழுந்திருப்பினும், பின்நவீனத்துவச் சிந்தனைகளின் பின்னணியில் அவை மேலும் எழுச்சி பெற்று வளரலாயின. பின்நவீனத்துவம், கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளத் தயங்குவதோடு அக்கோட்பாடுகளின் பின்னுள்ள அரசியலையும் வெளிப்படுத்தியது. எனவே, கோட்பாடுகளை மறுக்கின்ற இச்சிந்தனைகளைக் கொண்டு இலக்கியங்களை அணுகலாமா? என்ற கேள்வி எழுகின்றது. இச்சிந்தனைகள் இன்று அறிமுகநிலையிலேயே இருப்பதால் இத்தகு சிக்கலுக்குள் நுழையாமல் இதுவரையில் தமிழில் எழுதப்பட்ட அமைப்பியல், பின் அமைப்பியல், பெண்ணியம், தலித்தியம் போன்றவற்றின் கோட்பாடுகளையும் அக்கோட்பாடுகளைக் கொண்டு அணுகப்பட்ட ஆய்வுகளையும் தொகுக்கும் முயற்சியும், அவற்றை மதிப்பீடு செய்கின்ற முயற்சியும் இங்கு மேற்கொள்ளப் பெறுகின்றன. இந்நூலில் பிறதுறைக் கோட்பாடுகளைக் கூறுகின்ற நூல்கள், கட்டுரைகள் பிறதுறைக் கோட்பாடுகளைக் கொண்டு அணுகிய நூல்கள், கட்டுரைகள் என்ற இரு பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## ஆய்வு முன்னோடிகள்

1950கள் வரை திறனாய்வுப் போக்கில் இலக்கியத்தோடு இலக்கியத்தை ஒப்பிடுதலே பெரும்பான்மையாக வெளிப்பட்டது. தமிழ் இலக்கிய ஆய்வில் மார்க்சிய அணுகுமுறை என்பதே பிறதுறைக் கோட்பாட்டாய்வாக (Inter-disiciplinary Approach) வெளிப்பட்டது. இதற்குப் பின்னணிகளாகச் சிலவற்றைச் சுட்டலாம்.

ஒப்பியல் இலக்கியம் கோட்பாட்டு ரீதியாக அறிமுகப்படுத்தப்பட்டு, அணுகுமுறையிலும் பயன்படுத்தப்பட்டது. குறிப்பாக, இலங்கைத் திறனாய்வாளர் க. கைலாசபதி 'ஒப்பியல் இலக்கியம்' (1969) என்ற கோட்பாட்டு நூல் எழுதியதும் 'Tamil Heroic Poetry' (1968) என்ற தலைப்பில் கிரேக்க சங்க இலக்கியங்களை ஒப்பிட்டு ஆய்வை மேற்கொண்டதும் இப்பின்னணியில் சுட்டப்படவேண்டிய செய்திகளாகும். இத்தகு முயற்சிக்கு முன்னும்பின்னுமாகத் தமிழக, இலங்கைப் பகுதிகளில் பஜீவானந்தம் தொடங்கி நா.வானமாமலை, சிதம்பர ரகுநாதன், கைலாசபதி, கா. சிவத்தம்பி போன்றோர் மார்க்சியக் கண்ணோட்டத்தில் இலக்கியங்களை அணுகிய போக்கு, தமிழில் மார்க்சிய அணுகுமுறை வளர்வதற்கும் ஒப்பியல் இலக்கியம் ஓங்குவதற்கும் வழிவகுத்தது எனலாம்.

மார்க்சியக் கண்ணோட்ட ஆய்வுகளுக்குச் சமூகவியல், மானிடவியல், மொழியியல் போன்ற துறைகளின் கருத்துகளும் தேவைப்பட்டன. நா.வானமாமலை நடத்திய 'ஆராய்ச்சி' இதழ் இத்தகு ஆய்வுக் கண்ணோட்டங்களுக்கு முதன்மை கொடுத்திருப்பதை அவ்விதழில் இடம்பெற்ற கட்டுரைகள் காட்டுகின்றன. அவ்வகையில், இலங்கையின் யாழ்ப்பாண பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடாக 1977இல் வந்த 'ஆக்க இலக்கியமும் அறிவியலும்' என்ற நூல் குறிப்பிடத்தக்கது. இந்நூலில் மானிடவியல், உளவியல், சமூகவியல், மொழியியல் உட்பட 10 துறைக் கோட்பாடுகளும் அவற்றை எங்ஙனம் இலக்கியத்தோடு பொருத்திப் பார்க்கவேண்டும் என்ற முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது[7].

1980இல் அ.அ.மணவாளன் 'இலக்கியத் திறனாய்வில் ஐவகைப் பார்வைகள்' என்ற கட்டுரையை எழுதியுள்ளார். இது வில்பர் ஸ்காட் (Wilber Scot) எழுதிய (Five approaches to Literary criticism) என்ற கட்டுரையின் மொழிபெயர்ப்பாகும்[8]. இதில் உருவவியல், சமூகவியல், அறவியல், உளவியல், தொல்படிமவியல் ஆகிய ஐந்து அணுகுமுறைகள் விளக்கப்பட்டுள்ளன. இன்று இவ்வைந்தில் உளவியலும், சமூகவியலும்தான் துறைசார்ந்த கோட்பாடுகளாகும். தொல்படிமவியல் என்பது உளவியல் துறையின் ஒரு பகுதியாகும். உருவவியல் (Formalism) அறவியல் (Moralism) இரண்டும் தனித்த துறைகளல்ல. வில்பர் ஸ்காட் எழுதிய காலத்தில் இத்தகு அணுகுமுறைகள் பெரிதாகப் பேசப்பட்டிருக்கலாம். இன்று ரஷ்யாவின் உருவவியல் அமைப்பியலுக்கு வித்திட்ட செய்திகள் பற்றிய கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன[9].

1982இல் 'எழுபதுகளில் கலைஇலக்கியம்' என்ற நூலில் 'எழுபதுகளில் தமிழில் பிற துறைகள்' என்ற தலைப்பிலான இரு

கட்டுரைகளைச் சாரு நிவேதிதா, இ. அண்ணாமலை ஆகிய இருவரும் எழுதியுள்ளனர். இக்கட்டுரைகளில் எழுபதுகளில் வெளிவந்த எஸ்.வி. ராஜதுரையின் 'அந்நியமாதல்' 'எக்ஸிஸ்டென்ஷியலிசம்- ஓர் அறிமுகம்', குணாவின் 'மார்க்சிய இயங்கியல்', எஸ். இராமநாதனின் 'சிலப்பதிகார இசை நுணுக்க விளக்கம்', வெங்கட் சுவாமிநாதனின் 'கலை அனுபவ வெளிப்பாடு' போன்ற நூல்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 'பிறதுறைகள்' என்ற தலைப்பின் கீழ் இசை, நாடகம் போன்ற கலைகள் பற்றி அறிமுகப்படுத்தியிருப்பது துறையோடு பிற கலைகளையும் வேறுபடுத்திப் பார்க்காமல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. துறைக் கோட்பாடுகளும் கலைக் கோட்பாடுகளும் ஒப்பியல் இலக்கியத்தின் வெவ்வேறு பிரிவுகள் என்பது குறிப்பிடத்தக்கது. பிறதுறைகள் என்ற தலைப்பின்கீழ் கலைகளைக் குறிப்பிடுவது பொருந்துவதாகத் தோன்றவில்லை[10].

1989இல் கு. பகவதியைப் பொதுப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்த 'திறனாய்வு அணுகுமுறைகள்' என்ற நூல் குறிப்பிடத்தக்கது. இதில் சில கட்டுரைகள் பிறதுறைக் கோட்பாட்டு நெறிகளாகவும், சில கட்டுரைகள் கோட்பாட்டு நெறிகளை இலக்கியத்தோடு பொருத்திக்காட்டும் ஆய்வுகளாவும் திகழ்கின்றன. உளவியல் தொடர்பான சில கட்டுரைகளும், கட்டமைப்பு நீக்கவியலில் (Deconstruction) சில கட்டுரைகளும் சரியான புரிதல்கள் அடிப்படையில் அமையவில்லை என்பதைச் சுட்டியாக வேண்டும்[11].

1994இல் 'தமிழும் பிறதுறைகளும்' என்ற நூல் விலங்கியல், வேதியியல்,உயிரியல்போன்ற அறிவியல் முறைகளை உள்ளடக்கி அத்துறைக் கருத்துகள் இலக்கியத்தில் இடம்பெறும் தன்மையினைக் காட்டும் பெரும்பாலான கட்டுரைகளையும் இலக்கியத்தோடு எப்படி இத்துறைக் கருத்துகளை ஒப்பிட்டுக் காணலாம் என்ற முறையினை வெளிப்படுத்தும் நோக்கில் சில கட்டுரைகளையும் கொண்டிருக்கிறது.[12] இத்தகு கட்டுரைகளை இலக்கிய ஆய்வுக்கட்டுரைகளாகக் கொள்ளமுடியாது. இத்துறைக் கோட்பாடுகளைக் கொண்டு இலக்கியங்களை அணுகின்ற பார்வைகளே இந்நூலில் மையப்படுத்தப்படுகின்றன. இலக்கியத்தில் பிறதுறைக் கருத்துகள் எங்ஙனம் இடம்பெற்றுள்ளன? பண்டைய புலவர்களில் அறிவியல் பார்வைகள் என்ன என்பது பற்றிய நூல்களும் கட்டுரைகளும் தமிழில் இதுபோன்று வெளிவந்துள்ளன[13]. அத்தகு நூல்களும் இங்குச் சுட்டப்படும் என்ற பிறதுறைக் கோட்பாட்டாய்வுக்கும் தொடர்பு கிடையாது. ஓர் இலக்கியத்தில் இடம்பெற்ற அறிவியல் கருத்துகள் என்ன என்று காண்பதற்கும், ஓர் இலக்கியத்தை அறிவியல் கண்ணோட்டத்தில்

அணுகுவதற்கும் வேறுபாடுண்டு. இவற்றுள், இரண்டாவது பிரிவில் செய்யப்பட்ட முயற்சிகளே இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளன.

1995இல் வெளிவந்த 'கலை இலக்கியக் கோட்பாடுகள்' என்ற நூலில் பெண்ணியக் கோட்பாடுகளும் அக்கோட்பாடுகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட ஆய்வுகளும் இடம்பெற்றுள்ளன[14]. அதே ஆண்டில் அ.அ.மணவாளன் எழுதிய 'இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள்', என்ற நூல் குறிப்பிடத்தக்கது. இந்நூல் புதுத்திறனாய்வு, அமைப்பியல், பின் அமைப்பியல், உளப்பகுப்பாய்வுக் கோட்பாடுகள் மற்றும் லக்கானின் கோட்பாடுகள் பற்றிய விளக்கங்களை உள்ளடக்கிய நூலாகும்.

1999இல் பொ.நா. கமலா எழுதிய 'நவீன கோட்பாட்டு ஆய்வுகள்' என்ற நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் தனிப்பட்ட ஒருவரின் முயற்சியால் எழுந்தவை என்ற வகையில் குறிப்பிடத்தக்கன. உளவியல், மூலப்படிவத் திறனாய்வு, குறியியல், சிதைவாக்கத் திறனாய்வு, மானுடவியல் போன்ற பிறதுறைகளின் கோட்பாடுகளைக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாகும் இந்நூல்[16]. அதே ஆண்டில் வெளிவந்த மமதியழகனின் 'விடுதலைக்குப் பின் தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி' (1999) என்ற நூலில் திறனாய்வுக் கோட்பாட்டு நூல்கள் என்றும் திறனாய்வுக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி எழுந்த நூல்கள் என்றும் இரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன[17].

1999இல் புதுவைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறையில் பணிக்கப்பெற்ற 'தமிழில் மார்க்சியத் திறனாய்வு வரலாறு' என்ற இளமுனைவர் பட்ட ஆய்வேட்டில் மார்க்சியக் கோட்பாட்டு நூல்களும் மார்க்சியக் கோட்பாட்டைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட ஆய்வுகளும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

2003இல் 'கோட்பாட்டியல் ஆய்வுகள்' என்ற நூலில் சமூகவியல், அமைப்பியல், கட்டவிழ்ப்பு முறையியல், பெண்ணியக் கோட்பாடுகளைக் கொண்டு பார்க்கப்பட்ட ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன[18]. இத்தகு நூல்களன்றிச் சில நூல்கள் இலக்கியத்திறனாய்வு என்ற பெயரில் மார்க்சியம், உளவியல், அமைப்பியல் போன்றவற்றின் கோட்பாடுகளையும் அவற்றை இலக்கியத்தோடு அணுகிப் பார்க்கின்ற முறைமையினையும் அறிமுகப்படுத்தியுள்ளன[19]. சிறுபத்திரிகைகளில் கோட்பாடுகள் பற்றிய அறிமுகமும், கோட்பாடுகளைப் பயன்படுத்திய திறனாய்வுகளும் அதிகம் வெளிப்பட்டுள்ளன. அவை தனித்ததோர் ஆய்வுக்களத்தில் விவாதிக்கப்பட வேண்டியனவாகும்.

மேற்குறிப்பிட்ட நூல்களும் கட்டுரைகளும் குறிப்பிட்ட துறைக் கோட்பாடுகளை விளக்குவதாகவோ, குறிப்பிட்ட துறைக்கோட்பாடுகளைக் கொண்டு இலக்கிய ஆய்வு செய்வனவாகவோ அமைந்துள்ளன. இந்நூல் மேற்குறிப்பிட்ட இருநிலைகளையும் கால நிரல்படி விளக்குவதோடு அவ்வாய்வுகள் எங்ஙனம் நிகழ்த்தப்பட்டன? எத்தகு சூழலில் நிகழ்த்தப்பட்டன? அதனால் தமிழியல் ஆய்வுப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன? போன்றவற்றைத் தமிழ் ஆய்வுச் சூழல் பின்னணியில் விளக்க முற்படுகின்றது.

## கருதுகோள்கள்

1. திறனாய்வு முறையில் இலக்கியத்தின் அகச்சான்றுகளைவிட புறச்சான்றுகளுக்கு முதன்மை அளிக்கும் போக்கு ஏற்பட்டுள்ளது.

2. இலக்கியத்தினின்றும் கோட்பாடுகள் உருவாகின்ற நிலைமாறிக் கோட்பாடுகளை முன்னிறுத்தி இலக்கியப் படைப்புகள் உருவாகியுள்ளன.

3. இத்தகு திறனாய்வுப் பார்வைகள் மூலம் பழைய இலக்கியங்கள் பற்றிய கருத்துகள் மாற்றங்கள் பெறுவதோடு புதிய இலக்கியங்கள் உருவாவதற்கான வழித்தடங்களும் ஏற்பட்டு வருகின்றன.

## ஆய்வு வரையறை

இந்நூலில் மார்க்சியம், அமைப்பியல், பின் அமைப்பியல், தலித்தியம், பெண்ணியம் ஆகியவற்றின் கோட்பாடுகளை வெளிப்படுத்துகின்ற தமிழில் எழுந்த கோட்பாட்டுக் கட்டுரைகளும், நூல்களும் அத்துறைக் கோட்பாடுகளை இலக்கியத்தோடு பயன்படுத்திப் பார்க்கின்ற பயன்பாட்டுக் கட்டுரைகளும் நூல்களும் உள்ளடங்கியதாக வரையறுக்கப்பட்டுள்ளன. சிறுபத்திரிகைகளில் கோட்பாடுகளும் பயன்பாட்டு ஆய்வுகளும் மிகுதியும் வெளிப்பட்டுள்ளன. அத்தகு முயற்சிகள் இவ்வரையறைக்குள் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## அணுகுமுறை

இந்நூலில் விளக்கமுறைத் திறனாய்வு முறையே பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலவிடங்களில் பயன்பாட்டு ஆய்வுகளின் நிறை, குறைகளைச் சுட்டுகின்ற போது மதிப்பீட்டு முறையும் கையாளப்பட்டுள்ளது.

## இயல் பகுப்புமுறை

இந்நூல் முன்னுரை, முடிவுரை நீங்கலாக,

1. படைப்பும் திறனாய்வுக் கோட்பாட்டு வளர்ச்சியும்
2. தமிழில் பிறதுறைக்கோட்பாட்டு நூல்கள்
3. பிறதுறைக் கோட்பாடுகளைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்ட நூல்கள் என்ற இயல்களையும்

மூன்றாவது இயலின் உட்பிரிவுகளாக,

அ. மார்க்சிய ஆய்வுகள்

ஆ. அமைப்பியல் - பின் அமைப்பியல் ஆய்வுகள்

இ. தலித்திய ஆய்வுகள்

ஈ. பெண்ணிய ஆய்வுகள்

என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டும் வகுக்கப்பட்டுள்ளது.

இந்நூலில், இயல்களின் முடிவுகளில் நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளதால், துணை நூற்பட்டியல் என்பது தனியாக இடம்பெறவில்லை.

### அடிக்குறிப்புகள்

1. க. கைலாசபதி., 'ஆக்க இலக்கியமும் அறிவியலும்', (யாழ்ப்பாண பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடு, யாழ்ப்பாணம், 1977
2. Xavier. S. Thaninayagam., 'A reference guide to Tamil Studies: Books' (University of Malaya, Kuala Lumpur, 1966)
3. நா. வானமாமலை 'தமிழ் நாவல்கள் ஒரு மதிப்பீடு' 'நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1977' பக்9.
4. அ. இரா. மனுவேல், 'தற்காலத் தமிழ்ச் சமூக நாவல்களில் பாலுணர்வு' , திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி, 1986.

   ஆ. சு. சண்முகசுந்தரம், 'நாட்டுப்புறவியலில் உளவியல் பார்வை', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1991.

   இ. அரங்க, நலங்கிள்ளி, 'இலக்கியமும் உளப்பகுப்பாய்வும், வாணிதாசன் பதிப்பகம், புதுவை, 1992.

   ஈ. து. சிவராஜ், 'சங்க இலக்கியத்தில் உளவியல்', சிவம் பதிப்பகம், வேலூர், 1994.

உ. அரங்க, நலங்கிள்ளி, 'பிராய்டின் கலை இலக்கிய உளப்பகுப்பாய்வு', வாணிதாசன் பதிப்பகம், புதுவை, 1999.

5. அ. கப. அறவாணன், 'தமிழரின் தாயகம்', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984.

ஆ. சீ. பக்தவத்சல பாரதி, 'பண்பாட்டு மானிடவியல்', மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990.

இ. சீ. பக்தவத்சலபாரதி, 'தமிழர் மானிடவியல்', மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2002.

6. செ.வை. சண்முகம், 'இலக்கியமும் மொழியமைப்பும்', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1998.

7. அ. சண்முகதாஸ், (பதிப்), 'ஆக்க இலக்கியமும் அறிவியலும்', யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு, யாழ்ப்பாணம், 1977.

8. அ.அ. மணவாளன், 'இலக்கியத் திறனாய்வியல் ஐவகைப் பார்வைகள்' தமிழாய்வு (தொகுதி-2), பக்.12-25, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1980.

9. ந. முத்துமோகன், 'அமைப்பியல்-பின் அமைப்பியல்', (காவ்யா, பெங்களூர், 1998.

10. இ. அண்ணாமலை, சாருநிவேதிதா, 'எழுபதுகளில் தமிழில் பிறதுறைகள்' எழுபதுகளில் கலை இலக்கியம் காவ்யா, பெங்களூர், 1982.

11. கு. பகவதி, (பதிப்), 'திறனாய்வு அணுகுமுறைகள்', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1989.

12. ந. கடிகாசலம் (பதிப்.) 'தமிழும் பிறதுறைகளும்', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1994.

13. ச. அகத்தியலிங்கம், இராமசுந்தரம், (பதிப்.) 'வளர்தமிழில் அறிவியல்', அனைத்திந்திய அறிவியல், அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம், தஞ்சை, 1988.

14. அ. நடராசன், (பதிப்), கலை இலக்கியக் கோட்பாடுகள், ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம், மதுரை, 1995.

15. அ.அ. மணவாளன், இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1994.

16. பொ.நா. கமலா, நவீன கோட்பாட்டு ஆய்வுகள், காவ்யா, பெங்களூர், 1999.

17. ம. மதியழகன், விடுதலைக்குப்பின் தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1999.

18. ம. மதியழகன், ஆ.திருநாகலிங்கம், (பதிப்..), கோட்பாட்டியல் ஆய்வுகள், சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவை, 2003.

19. அ) தி.சு. நடராசன், 'திறனாய்வுக் கலை', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1996.

ஆ) சி.இ. மறைமலை, இலக்கியக் கொள்கைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1976.

# படைப்பும் திறனாய்வுக் கோட்பாட்டு வளர்ச்சியும்

ஒரு படைப்பு எழுகின்றபோதே திறனாய்வுச் சிந்தனையும் முகிழ்க்கத் தொடங்கி விடுகின்றது. படைப்பாளி தான் படைக்கத் தொடங்கும்போது, தன் படைப்பு சிறப்பதற்காகச் சிந்திக்கின்ற சிந்தனைகளின் வெளியீட்டைத் திறனாய்வு என்கிறார் டி.எஸ். எலியட்ஸ்[1] தொன்மையான இலக்கியங்கள் எழுவதற்கு முன்னரே சில இலக்கிய மரபுகள் (Literary convention) பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். எழுதப்படாத இலக்கணங்களான (unwritten grammar) அந்த இலக்கிய மரபுகளும் அக்காலத் திறனாய்வுச் சிந்தனைகளேயாகும். சங்கப்பாக்கள் பல்வேறு புலவர்களால் பல்வேறு காலங்களில் பல்வேறு நிலப்பகுதிகளிலிருந்து பாடப்பெற்றவை. அச்சங்க அகப்பாடல்களில் ஒருவரின் இயற்பெயர் சுட்டப்பெறுதல் கூடாது என்கிற எழுதப்படா இலக்கணமாகிய இலக்கிய மரபு பின்பற்றப்பட்டுள்ளதைக் காணலாம்.

இலக்கிய மரபுக்கு அடுத்து, இலக்கியப் பாடுபொருளின் மாற்றமும் திறனாய்வுச் சிந்தனையின் வளர்ச்சிப் போக்கேயாகும். அகம், புறம் என்கிற சங்ககாலப் பாடுபொருள்கள் வள்ளுவர் காலத்தில் அறம், பொருள், இன்பம் என்று மாறிய நிலை திறனாய்வுச் சிந்தனையின் வளர்ச்சியையே சுட்டும். இப்பாடுபொருள் மாற்றங்கள் சமூகவளர்ச்சியின் பல்வேறு காரணிகளால் உருவாயினும், அவற்றை உள்வாங்கிக் கொண்டு படைக்கும் படைப்பாளனின் திறனாய்வுச் சிந்தனைகளாகவே கொள்ள வேண்டும். கால, சமூக மாற்றங்களினால் அறத்தை (நீதியை) மட்டும் வலியுறுத்தும் நீதி இலக்கியங்கள் எழுந்ததும், பக்தியை உள்ளடக்கமாகக் கொண்டே சமய இலக்கியங்கள் எழுந்ததும், சமூகச்சிந்தனை மாற்றங்களோடு அதனை உள்வாங்கி வெளியிட்ட படைப்பாளிகளின் திறனாய்வுச் சிந்தனைகளையே வெளிப்படுத்துகின்றன.

படைப்பாளரின் இலக்கியக் கொள்கைகளும் அவர்தம் படைப்புகளை வரையறை செய்வதோடு, அவர்தம் திறனாய்வுச் சிந்தனைகளையும் வெளிப்படுத்துகின்றன.

"சுவைபுதிது பொருள் புதிது வளம்புதிது
சொற்புதிது சோதிமிக்க நவகவிதை"[2]

என்ற பாரதியின் கூற்று பாரதியின் இலக்கியக் கொள்கையை வெளிப்படுத்துவதோடு, கவிதைக்கு எளிமை தேவை என்கிற திறனாய்வுச் சிந்தனையையும் காட்டுகின்றது. புதுமைப்பித்தன் தன் சிறுகதைகள் குறித்து,

'இந்தக் கதைகள் யாவும் கலை உத்தாரணத்திற்கென்று கங்கணம் கட்டிக்கொண்டு செய்த சேவை அல்ல. இவை யாவும் கதைகள். உலகை உய்விக்கும் நோக்கம் எனக்கோ என் கதைகளுக்கோ சற்றும் கிடையாது'

என்று கூறுதலும்[3] படைப்புக்குரிய இலக்கியக் கொள்கைகளை வரையறை செய்துவிடுதலைக் காட்டுகின்றன. எனவே, இலக்கிய மரபும், படைப்பாளனின் இலக்கியக் கொள்கையும் படைப்புக்கு முன்னும் படைப்போடு இணைந்தும் உருவாகிய திறனாய்வுச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றன எனலாம்.

இதற்கடுத்து, இலக்கணம் திறனாய்வு வரலாற்றில் இடம்பெறுகின்றது. இலக்கண உருவாக்கத்திற்குரிய காரணத்தைக் கூறும் செ.வை. சண்முகம்,

'இலக்கிய வளர்ச்சி பாடுபொருள் மாற்றம், யாப்பு மாற்றம் அதனால் இலக்கியவகை மாற்றம் இவைகளுக்குப் பின்புலமாகச் சமூக மாற்றம் ஏற்படும்போது இலக்கிய ஆராய்ச்சி தோன்றும். அந்த ஆராய்ச்சி இன்னொரு மொழிச்சமூகத்தோடு தொடர்பு ஏற்படும்போது இன்னும் தீவிரம் அடையும். அந்த ஆராய்ச்சியின் பலனாக, அந்த இலக்கியக் கல்விக்கு உறுதுணையாக இலக்கணம் உருவாகும்'[4]

என்று கூறுவதை நோக்கும்போது, திறனாய்வு வளர்ச்சியின் இரண்டாவது நிலையில் இலக்கணம் இடம்பெறுகின்றது. தொல்காப்பிய இலக்கணம் மொழிக்குரிய இலக்கணமாகவும் (Grammar of Language) இலக்கியத்திற்குரிய இலக்கணமாகவும் (Grammar of Literature) விளங்குகின்றது. எழுத்தும் சொல்லும் மொழிஇலக்கணம் பற்றிப் பேச, பொருள் இலக்கிய இலக்கணம் பற்றிப் பேசுகின்றது. எனவேதான் தொல்காப்பியப் பொருளதிகாரம் பாவியல் (Grammar of Literature) என்றழைக்கப்படுகின்றது. அக்காலப் பேச்சு, இலக்கியத் தரவுகளைக் கொண்டும் இலக்கிய மரபுகளை அடியொற்றியும், வடமொழியிலிருந்து மாறுபட்ட

கருத்துகளைக் கூறியும் தொல்காப்பியத்தில் திறனாய்வுச் சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இலக்கணத்திற்கடுத்துத் தமிழ்த் திறனாய்வு வரலாற்றில் தொகுப்பு முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. குறிப்பிட்ட கோட்பாடுகள் (திணை, துறை), வரையறைகள் (பா, அடி, எண்ணிக்கை) கொண்டு சங்கப்பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அவ்வரையறைகளை அக்காலத் திறனாய்வுச் சிந்தனைகளாகக் கொள்ளலாம்.

> **'மேல்கணக்கு, கீழ்க்கணக்கு என்று சில விதிகளைத் தழுவிப் பாகுபாடு செய்திருப்பது அவர்களது விமரிசனப் பண்பை எடுத்துக் காட்டுகிறது'[5]**

என்று ஏ.வி. சுப்பிரமணிய அய்யர் கூறியிருப்பது இங்குச் சிந்திக்கத் தக்கது.

தொகுப்பு முயற்சிக்குப்பின், உரையாசிரியர்களின் உரையோடு கூடிய ஆய்வுக்குறிப்புக்கள் திறனாய்வு வரலாற்றில் முக்கிய இடம்பெறுகின்றன. இலக்கண, இலக்கிய உரைகள் இவற்றுள் அடங்கும். உரைகள், ஓர் இலக்கிய இயக்கத்தின் விளைவே என்று கருதப்படுகின்றது. வடமொழிச் செல்வாக்கினால் தமிழும் தமிழ் இலக்கிய மரபும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் அவற்றை மீண்டும் நிலைநாட்ட முயன்றதின் விளைவாகவே இவ்வுரைகள் வெளிவந்தன என்று ஏ.வி. சுப்பிரமணிய அய்யர், எஸ்.வையாபுரிப்பிள்ளை, வி.செல்வநாயகம் போன்றோர் குறிப்பிட்டுள்ளனர். வடமொழியோடு தமிழை ஒப்பிட்டுக் கூறும் முறையும் 'பாடபேதம்' என்ற குறிப்பும் மூலபாடத்தைக் குறைகூறாத பாராட்டுமுறைத் திறனாய்வும் உரையாசிரியர்களால் பின்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு இலக்கணம், தொகுப்புமுயற்சி, உரைமுயற்சி போன்றவை திறனாய்வு வரலாற்றில் ஒரு தெளிவான பாதையில் சென்றிருப்பதைக் காணலாம். அதாவது, படைப்பை, ஆசிரியனை விட்டு வெளியே செல்லாத திறனாய்வுப் பாதை எனலாம். உரையாசிரியர் கையாண்ட பாராட்டுமுறைத் திறனாய்வின் உச்சகட்டமாகத் "திருவள்ளுவமாலை" எழுந்ததை இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும். திருவள்ளுவர் அல்லது திருக்குறள் பற்றி பாராட்டுமுறைத் திறனாய்வாக இது வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட திறனாய்வு முறையைப் பின்பற்றி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (ஆங்கிலக்

கல்விக்குப்பின்னும்) பல ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டிருப்பதைக் காணலாம். மு.வ., அ.ச.ஞா, ரா.பி. சேதுப்பிள்ளை போன்றோர் இலக்கியங்களைக் கொண்டு திறனாய்வு செய்ததும் சிலம்பு - இளங்கோ, பெரியபுராணம் - சேக்கிழார், கம்பராமாயணம் - கம்பன், குறள் - வள்ளுவர் என்ற நிலைகளில் ஆசிரியன் - படைப்பு இரண்டையும் தாண்டிச்செல்லாத திறனாய்வுகளை வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கது. இத்தகுமுறையை அமெரிக்காவில் நிலவிய இத்தகு புதுத்திறனாய்வோடு (New criticism) நாம் இணைத்துப்பார்க்கலாம். 1920களில் தோன்றிய திறனாய்வுகள் 1950களில் உச்சகட்டத்தை எய்தின. ஒரு படைப்பு தான் தாங்கிய கருத்தைத் தன்வடிவ அமைப்பாலேயே வெளிப்படுத்தும் ஆற்றலுடையது. இதன் பொருண்மை வெளிப்பாட்டிற்குப் பிற புறக் கூறுகளின் துணை தேவையில்லை. இலக்கிய வடிவமும் பொருண்மை போன்ற கருத்துகளும் புதுத்திறனாய்வில் முதன்மையுடையன. கலை கலைக்காகவே என்ற கொள்கை 1930களில் எழுந்த மணிக்கொடி எழுத்தாளர்களிடமும் பின் எழுத்து, கசடதபற, கணையாழி இதழ்களின் படைப்பாளர்களிடமும் வெளிப்பட்டதைக் காணலாம். இலக்கியங்களைப் பிற கோட்பாடுகளின் அளவுகோல்கள் கொண்டு பார்க்கக்கூடாது என்றும் கூறினர். க.நா.சு., சி.சு. செல்லப்பா போன்றோரின் திறனாய்வுகள் இவ்வழியிலேயே சென்றவை என்பதும் லா.ச. ராமாமிருதம் போன்றோரின் படைப்புகள் இத்தகுநிலையில் உருவானவை என்பதும் குறிப்பிடத்தக்கன.

அடுத்ததாக, இலக்கணத்திலிருந்து இலக்கியம் உருவாதல் என்றநிலை ஏற்பட்டுள்ளது. இலக்கணத்தை அடியொற்றியும் அதனை மீறாத நிலையிலும் படைப்புகள் வெளிவந்துள்ளன. நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பியல், தண்டியலங்காரம் போன்றவற்றில் எடுத்தாளப்பட்டுள்ள மேற்கோள் பாடல்கள் இலக்கணத்திற்கேற்ற இலக்கியங்கள் என்பதைக் காட்டுகின்றன. இலக்கணத்திற்கேற்ற இலக்கியங்கள் என்பதுபோல இலக்கணத்திற்கேற்ற உரை என்பதும் அடுத்தக்கட்ட வளர்ச்சி எனலாம். அதிலும் மூல ஆசிரியனே உரை எழுதும் வழக்கம் உண்டு என்பதை இறையனார்களவியல் உரையில் காணலாம்.

இலக்கணத்திலிருந்து இலக்கியம் உருவாதல் போல, மேலைநாட்டு இலக்கிய இயக்கங்களாலும் பிற சிந்தனைகளாலும் இலக்கியங்களைப் பிறதுறைக் கோட்பாடுகள் மூலம் அணுகும் திறனாய்வுமுறை ஏற்படலாயிற்று. ஒப்பிலக்கியம் என்பது இந்நிலையில் குறிப்பிடத்தக்க திறனாய்வு முயற்சி எனலாம். இலக்கியத்தை இலக்கியத்தோடு ஒப்பிடுதல், இலக்கியத்தைப்பிற

துறைக்கோட்பாடுகள் கொண்டு அணுகுதல் மற்றும் இலக்கியத்தைப் பிறகலைகளோடு ஒப்பிடுதல் என்ற மூன்று நிலைகளும் ஒப்பிலக்கியமாகக் கருதப்பட்டன. இங்குதான் இலக்கியத்தை விட்டு வெளியே செல்கின்ற திறனாய்வுமுறை உருவாகத் தொடங்குகிறது.

தமிழில் தோன்றிய பதிப்புகள் மற்றும் இலக்கிய வரலாறுகள் தமிழ்த் திறனாய்வு முயற்சியில் முக்கியப்பங்களிப்பை நல்கியுள்ளன. பதிப்புகளில் இலக்கியம் பற்றிய குறிப்புகள் மட்டுமல்லாமல் இலக்கியங்களில் இடம் பெற்ற கருப்பொருள் பற்றிய விளக்கங்கள், வரலாற்றுச் செய்திகள் போன்றவை விளக்கப்பெற்றன. பதிப்புகள் மூலம் உருவாகிய இலக்கியவரலாறு எழுதும் முயற்சி இலக்கியத் திறனாய்வோடு இலக்கியக் கொள்கைகளையும் வெளிப்படுத்துகின்றன. உள்ளடக்கப் பகுப்புகள் (சமயரீதியானவை, வரலாற்று ரீதியானவை, இலக்கிய வகைமை ரீதியானவை) இலக்கிய வரலாறு, அரசியல், சமயம் போன்ற புறக்காரணிகளால் பார்க்கப்பட்ட பார்வையை வெளிப் படுத்துகின்றன. எனவேதான், இலக்கியத்தின் வரலாறு என்று உருவாகி இலக்கியவழி வரலாறாக மாறிவந்துள்ளது.

இந்நிலையில்தான் படைப்பைவிட்டு வெளியே செல்லும் திறனாய்வுப்போக்கு எழுகின்றது. சர்ரியலிசம் என்பது இலக்கியக் கோட்பாடாகவும் பின்னர் இலக்கிய இயக்கமாகவும் வெளிப்பட்டது. பின்னர், சர்ரியலிசக் கோட்பாட்டைப் பின்பற்றிப் பல இலக்கியங்கள் உருவாகத் தொடங்கின. அவ்வாறே ப்ராய்டின் உளவியல் கொள்கைகளையும், மார்க்சின் பொருளாதாரக் கோட்பாடுகளையும் கொண்டு இலக்கியங்கள் எழலாயின. இப்போக்கினால், இலக்கியப் படைப்பு இரண்டாம் நிலைக்கும் திறனாய்வுக் கோட்பாடுகள் முதன்மை நிலைக்கும் சென்றன. இத்தகு திறனாய்வுக் கோட்பாடுகள் வளர்ச்சியுற்றதன் விளைவாக, இன்றையநிலையில் பிறதுறைக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி இலக்கியங்கள் அணுகுகின்ற போக்கு அதிகரித்துள்ளது.

இலக்கியத்திலிருந்து இலக்கணம், பின் இலக்கணத்திலிருந்து இலக்கியம் என்ற தமிழகத் திறனாய்வு முறையிலிருந்து இலக்கியத்திலிருந்து திறனாய்வு பிறகு திறனாய்வுக் கோட்பாடுகளுக்கு ஏற்ற படைப்புகள் என்ற மேலைத் திறனாய்வு முறை எழுந்ததை உணர முடிகின்றது. முதல் நிலையில் படைப்பும் படைப்பாளனும் முதன்மைபெற, இரண்டாவது நிலையில் திறனாய்வாளரும் திறனாய்வுக் கோட்பாடுகளும், முதன்மை பெறுகின்றனர்.

I. இலக்கியம் > இலக்கணம் } படைப்பு, ஆசிரியன் முதன்மை
இலக்கணம் > இல்க்கியம் } பெறுதல், படைப்பை விட்டு
விலகிச் செல்லாத திறனாய்வுகள்

II இலக்கியம் > திறனாய்வு }
திறனாய்வு > இலக்கியம் }

III திறனாய்வுக் கோட்பாடுகள் } வாசகன் முதன்மை பெறுதல்
முதன்மை பெறுதல் } படைப்பைவிட்டு வெளியே
செல்லும் திறனாய்வுகள்

இரண்டாவது படிநிலையான திறனாய்வுக் கோட்பாடுகள் முதன்மைபெறுதலின் உச்சகட்டமாக, அமைப்பியல், பின்அமைப்பியல், தலித்தியம், பெண்ணியம், பின்நவீனத்துவம் போன்றவை உருவாயின. பின் நவீனத்துவம் கோட்பாடுகளை மறுதலிக்கிறது என்றாலும் அம்மறுதலித்தல் என்பதும் ஒரு கோட்பாடாகவே உருவாகியுள்ளது. அவ்வகையில்தான், கட்டுடைத்தல் என்ற நெறிமுறையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பின் நவீனத்துவக் கோட்பாடுகளுக்கேற்ற இலக்கியப் படைப்புகள் என்ற நிலையினை இன்றைய தலித்திய பெண்ணியப் படைப்புகளும் அந்நேர்கோட்டுப் படைப்பு முயற்சிகளும் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

## அடிக்குறிப்புகள்

1. க. பஞ்சாங்கம், தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, ப.21.
2. பாரதியார், சீட்டுக்கவி.
3. புதுமைப்பித்தன், காஞ்சனை (சிறுகதைத்தொகுப்பு) முன்னுரை.
4. செ.வை. சண்முகம், மொழிவளர்ச்சியும் மொழி உணர்வும், ப.190.
5. ஏ.வி. சுப்பிரமணிய அய்யர், தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, ப.83.

# தமிழில் பிறதுறைக் கோட்பாட்டு நூல்கள்

இத்தலைப்பே இலக்கியமல்லாத பிற துறைகளின் கோட்பாடுகளைக் குறிக்கும் சிறப்புடையது. இலக்கியம் என்பதும் மொழி என்பதும் கூட, பிறதுறைகளின் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டிருக்கின்ற அல்லது வெளியிடுகின்ற ஊடகங்களாகவும் கருத்துகளை உருவாக்குகின்ற, சமூகத்தைக் கட்டமைக்கின்ற இயந்திரங்களாகவும் செயல்படுகின்றன என்ற கருத்து பின் நவீனத்துவச் சிந்தனையின் விளைவாக ஏற்பட்டுள்ளது[1]. இக்கருத்தை நாம் ஏற்றுக்கொண்டால் பிறதுறைக் கோட்பாடு என்பதைப் பிரித்துக் காணவேண்டிய தேவையே ஏற்படாது. இக்கருத்தாடல்கள் இந்நூலுக்கு அப்பாற்பட்டதால் அதனை விடுத்துப் பிற துறைக் கோட்பாட்டு நூல்கள் இதுவரையில் தமிழில் எங்ஙனம் உருவாயின? அவற்றின் வளர்ச்சிநிலை என்ன? என்பதை இவ்வியல் மையமிட்டுக் காணமுற்படுகின்றது.

முன்னுரைப் பகுதியில் குறிப்பிட்டுள்ளபடி இலக்கிய வரலாறு எழுதும் முயற்சியிலும், இலக்கியக் கால ஆய்விலும் வரலாற்றுத்துறை பின்னிப் பிணைந்து வந்திருக்கின்றது. ஆனால், வரலாற்றுக் கோட்பாடுகளை முன்னிறுத்திய இலக்கியத் திறனாய்வாக அமையாமல், வரலாற்று முறையியல் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. மெய்ப்பொருள் என்கின்ற தத்துவம் சமய ரீதியாகவும் (வேதாந்தம், சித்தாந்தம்) இலக்கிய ரீதியாகவும் (பக்தி இலக்கியங்கள்) உருப்பெற்று வந்திருப்பினும், தத்துவம் என்ற துறைக்கோட்பாடுகள் வழி இலக்கியங்களை அணுகுகின்ற முறை நம்மிடையே முகிழ்க்கவில்லை. வேதாந்த, சித்தாந்த கருத்துகள் இலக்கியங்களில் எங்ஙனம் வெளிப்பட்டுள்ளன என்ற நோக்கில்தான் ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளனவேயன்றித் தத்துவவியல் துறைக் கோட்பாடுகளைக் கொண்டு அணுகின்ற முறை தமிழில் மிகக் குறைந்த அளவிலேயே செயற்பட்டுள்ளது என்று கூறிவிடலாம். அவ்வாறில்லாமல், சமூகவியலையும், பொருளாதாரவியலையும் அடிப்படையாகக் கொண்டெழுந்த சிந்தனையாக உருவாகிய மார்க்சியம் மட்டுமே இலக்கியம் பற்றிய புரிதலுக்குப் பயன்படுத்தப்பட்டது.

கல்வியாளர்கள் மேலை நாட்டு இலக்கியத்திறனாய்வுக் கோட்பாடுகளைக் கூறிவந்த காலத்தில் (மு.வ.வின் இலக்கியத்திறன் அ.ச. ஞானசம்பந்தத்தின் இலக்கியக் கலை) சிறுபத்திரிகைகளில் மேலைநாட்டுத் திறனாய்வுக் கோட்பாடுகள் குறிப்பாக 1920களில் அமெரிக்காவில் வெளிப்பட்ட புதுத்திறனாய்வு (New-criticism) போன்றவை வெளிப்பட்டன. இத்தகு முயற்சிகளில் சி.சு. செல்லப்பாவின் எழுத்து இதழின் (1959- 70) பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. மிகையதார்த்தம் (surrealism), குறியீட்டியம் (symbolism), படிமவியம் (Imagism) போன்ற இலக்கிய இயக்கக் கோட்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகு இயக்கக் கோட்பாடுகளுக்கு உளவியல், உருவவியல் போன்ற துறைகளின் கருத்துகள் துணை நின்றனவாயினும், இவற்றைப் பிறதுறைக் கோட்பாடுகளாகக் கொள்ள இயலாது. புதுத்திறனாய்வாளர்கள் இலக்கியப் படைப்புகளுக்கே முதன்மை தந்தனர். மேலும், புறநிலைக் கருத்துகளைக் கொண்டு இலக்கியப் படைப்பை விளக்குவதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

### மார்க்சியக் கோட்பாட்டு நூல்கள்

இலக்கியத்தின் பல்வேறு நயங்களையும் இலக்கியம் காட்டுகின்ற சமூதாயச் சூழல்களையும் வெளிப்படுத்துகின்ற நெறியில் அமைந்த திறனாய்வுப் போக்கிலிருந்து மாறுபட்டு, இலக்கியம் தோன்றுகின்ற சமுதாயத்தையும் அச்சமுதாயத்தின் ஓர் உறுப்பினராக உள்ள படைப்பாளனையும் மற்றும் பிற (அரசியல், பொருளாதாரம், சமூகம்) பின்னணிகளையும் கொண்டு இலக்கியத்தை அணுகுகின்ற போக்கினை மார்க்சியத் திறனாய்வாளர்களே முன்வைத்தனர்.

பாரதி, திரு.வி.க., எம். சிங்காரவேலு போன்றோர் பொதுவுடைமைக் கருத்தை உணர்ந்தும், வெளிப்படுத்தியும் காட்டியிருப்பினும், இலக்கியத்தோடு கோட்பாட்டு நிலையிலும், பயன்பாட்டு நிலையிலும் தொடர்புப்படுத்திக் காட்டியவர்களில் முதன்மையானவர் ப.ஜீவானந்தம் ஆவார். தான் தொடங்கி வைத்த தாமரை (1958) இதழில் 'இலக்கியத்தில் சோஷலிஸ்ட் எதார்த்தவாதம்' பற்றிய கோட்பாட்டுச் சிந்தனையைக் கட்டுரைகளாக எழுதினார். இப்பெயரில் அமைந்த கட்டுரை 1963இல் வெளிவந்தது.

1950களில் வெளிவந்த பொதுவுடைமைச் சித்தாந்தம் தழுவிய சிறுபத்திரிகைகளான சாந்தி (1954), சரஸ்வதி (1955), தாமரை 91958) மற்றும் செம்மலர் (1970) போன்றவை மார்க்சியக்

கோட்பாட்டுச் சிந்தனைகளுக்கு முதன்மையளித்துப் பல்வேறு கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தன.

ப.ஜீவானந்தம், ரகுநாதன், ஆர்.கே. கண்ணன் போன்றோர் மார்க்சியக் கண்ணோட்டத்தில் இலக்கியங்களை அணுகி வந்த காலத்தில் கோட்பாடுகள் பற்றிய நூல்கள் மிகக் குறைந்தே வெளிப்பட்டன. அவ்வாறு வெளிவந்த நூல்களில் மார்க்சியத் தத்துவம் தொடர்பான நூல்களும் இலக்கியத்தோடு தொடர்புடைய கோட்பாட்டு நூல்களும் குறிப்பிடத்தக்கவை.

கலை, இலக்கியம் சார்ந்த மார்க்சிய நோக்கு 'சோசலிச யதார்த்தம்' என்னும் கோட்பாட்டால் அறியப்படுகிறது. இது வாழ்வை இயக்கவியல் பொருள்முதல்வாத நோக்கிலும், வரலாற்றியல் பொருள்முதல்வாத நோக்கிலும் அணுகுகின்றது. அதாவது வாழ்வைத் தனிமனிதச் செயல்பாட்டின் நிகழ்வாகப் பார்க்காமல் சமூகச் செயல்பாட்டின் நிகழ்வாகப் பார்ப்பதும், வாழ்வு மனித விருப்பு, வெறுப்புகள் சார்ந்து நிகழ்வு கொள்வதாக நோக்காமல் வரலாற்றின் புறநிலை அம்சங்களைக் கொள்வதாக நோக்குவதும் இதன் சாரம் எனலாம். இத்தகு கலை, இலக்கியத்தோடு தொடர்புகொண்ட கோட்பாட்டு நூல்களைவிட, அரசியல் தளம் சார்ந்த (மார்க்சியத் தத்துவம் சார்ந்த) நூல்களே அதிகம் வெளிப்படலாயின. மார்க்சியம் பற்றிய புரிதல்கள் ஆழமான தமிழ் வாசகர்களைக் கூடச் சென்றடையவில்லை. ஆங்கில நூல்கள் மூலமாகவே மார்க்சியக் கருத்துகளைத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலை இருந்தது. இந்நிலையை மாற்றியமைக்கும் முயற்சியில் சில மார்க்சியச் சார்பாளர்களால் தாங்களே ஆங்கிலத்தில் படித்து உருவாக்கிய நூல்களும் பிறரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதை அப்படியே தமிழில் மொழிபெயர்த்த நூல்களும் உருவாயின.

1976இல் நா. வானமாமலை எழுதிய 'மார்க்சிய சமூகவியற் கொள்கை' என்ற நூலும், 1978இல் எழுதிய 'இந்திய நாத்திகமும் மார்க்சிய நாத்திகமும்' என்ற நூலும் மார்க்சியக் கோட்பாடுகளை விளக்கும் நூல்களாகும். 1979இல் எஸ்.வி. ராஜதுரை எழுதிய 'அந்நியமாதல்' என்ற நூல் மார்க்சியத்தின் ஒரு பகுதியாகிய சமூகத்தில் நெருக்கடிக்கு ஆளாகும் தொழிலாளர் வர்க்கத்தின் நிலையைத் தத்துவார்த்த அடிப்படையில் விளக்குவதாகும். 1982இல் எம்.வி. சுந்தரம் எழுதிய 'மார்க்சிய நாத்திகம்' என்ற நூலும் அதே ஆண்டில் எஸ். இராமகிருஷ்ணன் எழுதிய 'மார்க்சியப் பொருளாதாரப் பார்வை' என்ற நூலும் மார்க்சியத்தின் இலக்கியச் சார்பில்லாத பகுதிகளின் விளக்கங்களாகும். 1991இல் எஸ்.வி. ராஜதுரை, வ.கீதா இணைந்து எழுதிய 'பிராங்க்பர்ட் மார்க்சியம்'

என்ற நூலும் 1999இல் வெளிவந்த ஆர்.கே. கண்ணன் எழுதிய 'மார்க்சிய மெய்ஞானம்' என்ற நூலும் இலக்கியம், கலைகளுக்கு அப்பாற்பட்ட மார்க்சியக் கோட்பாடுகளை விளக்கும் நூல்களாகும்.

மார்க்சியக் கண்ணோட்ட முயற்சிகளில் தொடக்க காலங்களில் (ப.ஜீவானந்தம் தொடங்கி) இலக்கியங்களை வர்க்கச் சார்புடன் பார்க்கின்ற பார்வை தொடங்கி விட்டது எனலாம். மார்க்சின் கருத்துகளில் இலக்கியம் பற்றிய செய்திகள் என்பனவற்றைக் குறிப்பிடும் போக்கு நா. வானமாமலை, ரகுநாதன் முதற்கொண்டு வளர்ச்சி பெறலாயிற்று. எனவே, மார்க்சிய அணுகுமுறையில் பயன்பாட்டு முறை (Applied criticism) முன்னரும் கோட்பாட்டுக் கருத்துகள் (Theories) பின்னரும் எழுந்தன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

க. கைலாசபதி சமூகவியலும் இலக்கியமும் (1979) போன்ற கோட்பாட்டு நூலை எழுதியிருப்பினும், அவரது அணுகுமுறையில் இலக்கிய அழகியல் அம்சங்கள் முதன்மைப்படுத்தப்படாமல் இலக்கியத்திற்குப் புறம்பான சமூகவியல் பின்புலங்களே விளக்கப்பட்டன. இவருடைய கறாரான மார்க்சியப் பார்வை குறித்த விமரிசனங்கள் குறிப்பிடத்தக்கவை. கோ. கேசவன் இவரது அழகியற் கொள்கை குறித்துப் பேசும்போது,

> **"கைலாசபதியின் அழகியல், முற்போக்கு இலக்கியத்தின் தற்காப்பு அரசியலாகச் சமுதாயச் சார்பற்றவற்றை எதிர்க்கும் அழகியலாக அமைந்ததேயன்றி, முற்போக்குப் படைப்பாளிகளுக்குத் தேவைப்படும் கோட்பாடுகளைப் பரிந்துரைக்கும் பணியை ஆற்றுவதாக அமையவில்லை"**

என்ற மதிப்பீட்டை முன்வைக்கின்றார்[2]. கைலாசபதியின் அணுகுமுறை மார்க்சியம் அழகியல் அம்சங்களை முன்னிறுத்த வில்லையோ என்ற ஐயத்தைத் தோற்றுவித்தது. மேலும், கலை கலைக்காக என்ற கொள்கையினர் இலக்கிய அழகியலுக்கு முதன்மை தந்தனர். எனவே, அழகியல் அம்சங்களுக்கு முதன்மை கொடுக்கும் வகையில் 'மார்க்சிய அழகியல்' (1978) என்ற நூல் நா. வானமாமலையால் எழுதப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொன்னீலனின் மொழிபெயர்ப்பாக 'மார்க்சிய அழகியலின் அடிப்படைகள்' (1984) என்ற நூலும் சுகுமாரனின் மொழிபெயர்ப்பாக 'மார்க்சிய அழகியல் - ஒரு முன்னுரை' (1985) என்ற நூலும் வெளிவந்தன.

1987 முதல் கருத்தரங்காகத் தொடர்ந்து நடத்தி 1989இல் நூலாக வெளிவந்த 'திறனாய்வு அணுகுமுறைகள்' என்ற நூலில்

மார்க்சியம் பற்றிய கோட்பாடுகளை விளக்கும் இருகட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அணுகுமுறைகள் என்ற நோக்கில் அக்கருத்தரங்கை நடத்தியிருப்பினும், எத்தகு அணுகுமுறை எடுத்துக் கொள்ளப்படுகின்றதோ அது பற்றிய கோட்பாட்டு விளக்கங்களும் அக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன.

இதற்கடுத்து, மார்க்சிய இலக்கியத்தோடு தொடர்புடைய கோட்பாட்டு நூல்கள் குறிப்பிடத்தக்கவை. 1948இல் ரகுநாதன் எழுதிய 'இலக்கிய விமர்சனம்' என்ற நூலின் கட்டுரைகளில் சில மார்க்சியக் கோட்பாடுகளை ஆங்காங்கே சுட்டிச்செல்கின்ற முயற்சியைக் காணலாம். 1975இல் கோவை ஞானி எழுதிய 'கலை இலக்கியம் ஒரு தத்துவப் பார்வை' என்ற நூல் மார்க்சியத்தையும் இலக்கியத்தையும் இணைக்கின்ற முயற்சியுடைய நூல் எனலாம்.

அ.மார்க்ஸ் மொழிபெயர்த்த 'மார்க்சிய இலக்கியக் கொள்கை' (1984) என்ற நூல் மார்க்சியம் வெளிப்படுத்தும் இலக்கியம் குறித்த செய்திகளை வெளியிட்டது. ப. ஜீவானந்தம் தொடங்கி 1980கள் வரை நிகழ்ந்த மார்க்சிய வழித் திறனாய்வுகள் பல்வேறு தள வேறுபாடுகளைக் கொண்டிருந்தன. ரகுநாதன், க. கைலாசபதி, கா.சிவத்தம்பி, நா. வானமாமலை, எஸ். இராமகிருஷ்ணன், ஞானி போன்றோரின் மார்க்சியப் பார்வைகளில் ஒருமித்த பார்வை இல்லாததால் மார்க்சிய இலக்கிய விமரிசனம் குறித்த விவாதம் தேவைப்பட்டது. அவ்வகையில் கோ. கேசவன் எழுதிய 'இலக்கிய விமரிசனம் - ஒரு மார்க்சிய பார்வை' (1984) என்ற நூல் குறிப்பிடத்தக்கது. ஓர் இலக்கியப் படைப்பை எங்ஙனம் மார்க்சியப் பார்வையில் அணுகவேண்டும் என்ற கோட்பாட்டை முன்வைத்த நூலிது. இந்நூல் தொடர்பான விமரிசனங்கள் மார்க்சியத் திறனாய்வாளர்களுக்கிடையிலும் மனஓசை, செந்தாரகை, நிகழ், பரிமாணம், புறப்பாடு போன்ற சிறுபத்திரிகைகளிலும் பலத்த சர்ச்சைகளை ஏற்படுத்தின. இவ்விமரிசனங்களுக்கு விடையளிக்கும் வகையில் கோ. கேசவன் 'மார்க்சியத் திறனாய்வுச் சிக்கல்கள்' (1986) என்ற நூலை எழுத முற்பட்டார். இவ்வியலில் எஸ்.வி. இராஜதுரை, எம்.ஏ.நுஃமான், ஞானி போன்றோரது விமரிசனங்களுக்குப் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சி.இ. மறைமலை எழுதிய 'இலக்கியமும் மார்க்சியமும்' (1991) என்ற நூலும் எம்.ஏ. நுஃமானின் மார்க்சியமும் இலக்கியமும்' (1987) என்ற நூலில் ஒரு கட்டுரையும் கோட்பாடுகளைச் சுட்டுகின்றவையாக வெளிப்பட்டன. மார்க்சிய இலக்கியக் கோட்பாடு குறித்து ஞானி குறிப்பிடுகையில்,

"மார்க்சியத்தின் இலக்கியக் கோட்பாடு என்று பேசுவதைவிட இலக்கியக் கோட்பாட்டுக்கு மார்க்சியம்

**தந்த ஆதாயங்கள் அல்லது மார்க்சியத்தின் வழியே இலக்கியம் பெற்ற ஆக்கங்கள் என்று பேசுவதுதான் இன்னும் பொருத்தமாக இருக்கமுடியும்"**

என்று கூறுவது [3]கோட்பாடுகளைக் கொண்டு இலக்கிய வளமையை உணர்வதற்கு ஒருவழி என்பது பெறப்படுகின்றது. எனவே, மார்க்சியக் கோட்பாடுகளின் வளர்ச்சி நிலையைக் காணுதல் என்பது படைப்புகளின் போக்கை உணருவதற்கான அளவுகோல் என்பதையும் உணர்த்துகின்றது.

எண்பதுகளின் இறுதியில் சோவியத் ஒன்றியம் சிதறுண்டதாலும் அமைப்பியல், பின் அமைப்பியல் போன்றவற்றின் அறிமுகத்தாலும் மார்க்சியம் மறுபரிசீலனைக்கு உட்படத் தொடங்கியது. இவ்வகையில், அ. மார்க்ஸின் 'மார்க்சியமும் இலக்கியத்தில் நவீனத்துவமும்' என்ற நூல் (1991) மார்க்சியச் சார்புடையவராக இருந்த அ.மார்க்ஸ் அமைப்பியல் சார்ந்த கருத்துகளை ஏற்று, மார்க்சியத்தை மறுபரிசீலனைக்குட்படுத்தும் கட்டுரைகளை எழுதத் தொடங்கிய முயற்சியைக் காட்டுகின்ற நூலாகும். இவ்வகையில் 1981இல் தமிழவன் எழுதிய 'ஸ்டரக்ச்சுரலிஸம்' என்ற நூலும் தமிழவனின் பின்நவீனத்துவக் கோட்பாட்டுச் சார்புக்கருத்துகளும் குறிப்பிடத்தக்கன.

தமிழவன், மார்க்ஸ் போன்றோர் பார்வைத் தளத்திலிருந்து மாறுபட்டு, மார்க்சியத்தைத் தமிழகப் பண்பாட்டிற்கேற்பப் மாற்றியமைத்து நோக்கவேண்டும் என்ற கோவை ஞானியின் கருத்துகள் குறிப்பிடத்தக்கவை. இவர்களின் சிந்தனைகள் தமிழில் பின்நவீனத்துவக் கருத்துகள் உருவாவதற்கு வழிவகுத்தன எனலாம். 1988இல் 'மார்க்சியமும் தமிழ் இலக்கியமும்' என்ற நூல் பத்தாண்டுக் காலங்களில் பல்வேறு கட்டுரைகளாக ஞானியால் எழுதப்பட்டுத் தொகுக்கப்பட்டதாகும். இந்நூலில் மார்க்சியக் கோட்பாடுகளைக் கொண்டு அணுகிய கட்டுரைகளும் உள்ளன.

1930 தொடங்கி 1964வரை நிலவிய இந்தியப் பொதுவுடைமை இயக்கம் 1964இல் பிரிந்து இந்திய பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்) என்று இரண்டாகச் செயற்படத் தொடங்கியது. இக்கட்சிகள் சார்பில் நடத்தப்பெற்ற ஜனசக்தி, தீக்கதிர் இதழ்களும் இலக்கிய அமைப்புச் சார்பில் நடத்தப் பெற்ற தாமரை, செம்மலர் போன்ற இதழ்களும், இவ்விதழ்களுக்கு முன்னர் வெளிவந்த சாந்தி, சரஸ்வதி, சமரன்

போன்ற இதழ்களும் பொதுவுடைமைக் கட்சிக் கொள்கைகளோடு இலக்கியக் கோட்பாடுகளையும் முன்வைத்துள்ளன. அவை தனியாகத் தொகுத்து ஆராய்தற்குரியன.

எனவே, ப.ஜீவானந்தத்தால் தொடங்கப்பட்ட மார்க்சியக் கோட்பாடுகளின் அறிமுகம் என்பது ரகுநாதன், நா.வானமாமலை போன்றோரால் வளர்க்கப்பட்டுக் கைலாசபதி, கோ.கேசவன், ஞானி, அ.மார்க்ஸ் போன்றோரால் தொடரப்பட்டு, பின்நவீனத்துவச் சிந்தனைகளின் விளைவால் தமிழவன், மார்க்ஸ் போன்றோரால் அம்மார்க்சியத்தை மறுபரிசீலனை செய்யும் புதிய கோட்பாட்டுத் தளங்களுக்குள் தடம் பதிக்கப்பட்டது என்பதும் அத்தகு தடங்கள் வழிதான் இன்றைய திறனாய்வுப் போக்கு சென்று கொண்டிருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

## அமைப்பியல் பின் அமைப்பியல் கோட்பாட்டு நூல்கள்

மார்க்சியம் இலக்கியத்தில் அணுகுமுறையாகப் பயன்படுத்தப்பட்ட பின்னரே, கோட்பாட்டு நூல்கள் அதிகமாக அறிமுகமாயின என்பதற்கு மாறாக, அமைப்பியல், பின் அமைப்பியல் போன்றவை கோட்பாட்டு நிலையில் அறிமுகப்படுத்தப்பட்டு, அதற்கடுத்த நிலையிலேயே பயன்பாட்டு நிலையில் எடுத்தாளப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

1981இல் தமிழவன் அமைப்பியல் குறித்து எழுதிய பின்னர்தான், அமைப்பியல் கண்ணோட்டத்தில் இலக்கியங்களை அணுகுகின்ற முறையை மேற்கொள்ளத் தொடங்குகிறார். (1992இல் 'திருப்பாவை-ஓர் அமைப்பியல் விமரிசனம்' என்ற கட்டுரையை நோக்குக.) இந்திய மொழிகளில் தமிழில்தான் அமைப்பியல் சிந்தனைகள்அறிமுகப்படுத்தப்பட்டன என்பது சிறப்புக்குரிய செய்தியாகும். எனினும், அமைப்பியல், பின் அமைப்பியல் சார்ந்த பின்நவீனத்துவம் என்பதில் கோட்பாடுகளை மறுதலிப்பது என்பதும் கோட்பாடுகளுக்குப் பின்னே அரசியல் இருக்கிறது என்பதும் அதிகாரங்கள் மையப்படுத்தப்படுவதால் அம்மையத்தைக் கட்டுடைப்பது என்பதும் அதன் செயலாகிறது என்ற அடிப்படையில் கோட்பாடுகளை இங்கே சுட்டிக்காட்டுதல் பொருத்தமுடையதா? என்பதும் சிந்திக்கத் தக்கது. இறுதியாகக் கோட்பாடுகளை மறுக்கும் கோட்பாடுகள் என்ற நிலையில் அவற்றைச் சுட்டுதல் இங்கே தேவையாகின்றது.

தமிழவனைத் தொடர்ந்து 1991இல் க.பூரணச்சந்திரன் 'அமைப்பு மையவாதம் பின் அமைப்பு மையவாதம்' என்ற கோட்பாடு நூலை எழுதியுள்ளார். தமிழவன் ஆங்கிலத்தலைப்பில்

'ஸ்டரக்சுரலிஸம்' என்று குறிப்பிடப் பூரணச்சந்திரன் 'அமைப்பு மையவாதம்' என்று தமிழில் குறிப்பிட முயற்சிக்கின்றார். பூரணச்சந்திரனைத் தொடர்ந்து நமுத்துமோகன் 'அமைப்பியல் பின் அமைப்பியல்' (1998) என்ற தலைப்பில் நூலை வெளியிட்டுள்ளார். இந்நூலில் கோட்பாட்டுக் கட்டுரைகளும் கோட்பாட்டைப் பயன்படுத்தி அணுகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இதற்கிடையில் 1995இல் அ.அ. மணவாளன் 'இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள்' என்ற நூலில் அமைப்பியல்வாதம், மீ அமைப்பியல்வாதம் என்ற தலைப்பில் கோட்பாடுகளை விளக்குகின்றார். இவ்வாறு தமிழில் அறிமுகப்படுத்தப்பட்ட இச்சிந்தனைகளின் தாக்கம் கலைச்சொற்களாகப் பெயரளவில் மாற்றம் பெற்று அமைப்பியல், பின் அமைப்பியல் என்ற பெயரில் நிலைத்து விட்டதைக் குறிப்பதோடு, அணுகுமுறை அளவில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் உணர்த்தி நிற்கின்றது எனலாம். அமைப்பியல், பின் அமைப்பியல், பின் நவீனத்துவம் போன்றவற்றின் விளக்கங்களை 1995-2004 அளவில் வெளிவந்த சிறுபத்திரிகைகளில் பரக்கக் காணலாம். தமிழவன், அ.மார்க்ஸ், க.பூரணச்சந்திரன், ந.முத்துமோகன், நாகார்ஜுனன், ஞானி, எம்.டி. முத்துக்குமாரசாமி, பிரேம்ரமேஷ், ரவிக்குமார், ராஜ்கௌதமன் போன்றோரின் கருத்துகளும், மொழிபெயர்ப்புக் கட்டுரைகளும் தொண்ணூறுகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கியுள்ளன. இவர்களுள் அ.மார்க்ஸ், ரவிக்குமார் இருவரும் அரசியல் தளங்களிலும் மற்றவர்கள் இலக்கியத் தளங்களிலும் தங்கள் கண்ணோட்டங்களை முன்வைத்துள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.

ஞானி தனது 'மார்க்சிய அழகியல்' (2002) என்ற நூலில் மார்க்சியம் பற்றியும், பின் நவீனத்துவம் குறித்தும் கட்டுரைகள் எழுதியுள்ளார். யதார்த்தவாதம் செத்துவிட்டது என்று பின் நவீனத்துவவாதிகள் சொல்வதில் தவறொன்றுமில்லை என்கிறார் ஞானி. மார்க்சியம் தனக்கு ஏற்கெனவே இருக்கின்ற கட்டமைப்பைக் கலைத்துக் கொண்டு,சமகால வரலாற்றுச் சூழலுக்கு ஒத்தமுறையில் வேறொரு கட்டமைப்பில் தன்னை உயிர்ப்பித்துக்கொள்ள முடியும் என்று நம்புகிறார் ஞானி. மொழி நம்மைக் கட்டமைக்கிறது. வரலாறு நம்மைக் கட்டமைக்கிறது என்கிற பின் நவீனத்துவச் சிந்தனைகளை ஏற்றுக்கொள்கிறார்.

நவீனத்துவம், பின் நவீனத்துவம் குறித்துப் பேசவருகின்ற ஞானி, அவற்றின் கோட்பாடுகளைத் தமிழ்ப் பண்பாட்டிற்கேற்பப்

புரிந்துகொள்ளச் சொல்கிறார். கோட்பாடுகளில் உள்ள நல்ல கருத்துகளை எடுத்துரைக்கின்றார். அதன் அடிப்படையில் கம்பன் தொடங்கி மௌனிவரை பார்க்கலாம் என்கிறார். எப்படிப் பார்க்கலாம்? அப்படிப் பார்க்கும்போது பெறப்படும் புதிய புரிதல்கள் என்ன என்பன குறித்த பயன்பாட்டு ஆய்வுகளை (Applied Criticism) அவர் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. நவீனத்துவம், பின் நவீனத்துவம் குறித்தும் அமைப்பியல், பின் அமைப்பியல் குறித்தும் விரிவாகப் பேசுகின்ற ஞானி மார்க்சியத்தைக் குறைகூறவில்லை. மார்க்சியத்தைப் பின்நவீனத்துவச் சிந்தனைகளுக்கேற்பப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிய அல்லது மாற்றியமைத்துக் கொள்ள இயலாத மார்க்சியர்களையே சாடுகின்றார்.

பின் நவீனத்துவ எழுத்தின் ஒருபகுதியாகப் பேசப்படும் நேர்கோட்டு எழுத்து, அநேர்கோட்டு எழுத்து (Linear and Non-linear writing) என்ற சொல்லாடல்களை மறுத்து அவற்றைத் தொடரும் எழுத்து தொடர்ச்சியறு எழுத்து என்று குறிப்பிடவேண்டும் என்கிறார் க.பூரணச்சந்திரன்[4]. அவர் எழுதியுள்ள கட்டுரையில் பின்நவீனத்துப் படைப்பாளிகள் என்று கூறப்பட்டுவருகின்ற கோணங்கி, சாருநிவேதிதா, ஸில்வியா, நாகார்ஜுனன், பிரேதா-பிரேதன் போன்றோரின் படைப்புகளை மதிப்பிடுவதோடு பின்நவீனத்துவ எழுத்துகள் தமிழில் உருவாகவில்லை என்று கூறி, அப்படைப்புகளுக்குரிய கோட்பாடுகளைப் பற்றியும் விவாதிக்கின்றார்.

அமைப்பியல், பின் அமைப்பியல் வழிவந்த குறியியல் (semiotics) என்பதும் தமிழவனால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1992இல் 'தமிழும் குறியியலும்' என்ற சிறுநூல் இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. சசூரின் மொழியியல் பற்றிய கருத்துகள் அமைப்பியல் சிந்தனைகளை உருவாக்கிக் குறியியல் போன்றவற்றை வளர்த்தெடுத்து, இறுதியில் கட்டுடைக்கும் நிலைக்கு வந்து நிற்கின்றன.

### பெண்ணிய, தலித்தியக் கோட்பாட்டு நூல்கள்

பின்நவீனத்துவ அறிமுகத்தால் ஏற்கெனவே வளர்ந்துவந்த பெண்ணியம், தலித்தியம் போன்ற சிந்தனைகள் மேலும் புதிய பரிமாணத்தைப் பெறத்தொடங்கின. உலக அளவில் பெண்ணியமும் இந்திய அளவில் தலித்தியமும் வளர்ந்துவர இயக்கப்போக்கின் அடிப்படையிலும் இலக்கியப் போக்கின் அடிப்படையிலும் மாற்றங்கள் ஏற்படலாயின. தொண்ணூறுகளிலும்

இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் எழுந்த நிகழ், நிறப்பிரிகை, உயிர்மை, மீட்சி, புதியகோணங்கி, காலக்குறி, பன்முகம், மேலும், காலச்சுவடு போன்ற இதழ்களின் பங்களிப்பு பின்நவீனத்துவம், பெண்ணியம், தலித்தியம் போன்றவற்றின் கோட்பாடுகளையும் அவற்றின் பின்னணிகளையும் விளங்கிக் கொள்ள உதவின.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே பெண்ணியச் சிந்தனைகள் வெளிப்பட்டிருப்பினும், கோட்பாட்டளவில் மேலைநாட்டுப் பெண்ணிய வரலாற்றையும் பெண்ணியத் திறனாய்வு முறைகளையும் வெளிப்படுத்தும் போக்கு எண்பதுகளிலிருந்தே தொடங்கியது எனலாம். பெண்ணியக் கோட்பாடுகள் அறிமுகம் ஆவதற்கு முன்பே பெண்ணியப் படைப்புகள் (ராஜம்கிருஷ்ணன், அம்பை) உருவாக்கம் பெற்றுள்ளன. எழுபதுகளில் அறிவிக்கப்பட்டு, உலக அளவிலும் இந்திய அளவிலும் கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் ஆண்டும் (1974) தமிழகத்தில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் (1985) உருவாகியதும் பல பல்கலைக்கழகங்களில் மகளிரியல் துறைகள் (Department of women studies) தொடங்கப் பெற்றதும் பெண்ணியச் சிந்தனைகள் வளர்வதற்கான சூழலை உருவாக்கின.

ராஜம் கிருஷ்ணனின் 'காலந்தோறும் பெண்' 1989இல் வெளிவந்தது. வரலாற்று நோக்கில் இந்நூலின் கட்டுரைகள் அமைந்திருப்பினும், பெண்ணியக் கோட்பாடுகள் ஆங்காங்கே சுட்டப்பட்டுள்ளன என்ற வகையில் இப்பகுதியில் அடங்குகின்றது. 1994இல் இராபிரேமா எழுதிய 'பெண்ணியம்' என்ற நூலும் 1995இல் முத்துச்சிதம்பரம் எழுதிய 'பெண்ணியம்-தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலும் பெண்ணியக் கோட்பாடுகளைச் சுட்டுகின்றனவற்றுள் குறிப்பிடத்தக்கவை. பல்வேறு தனியார் அமைப்புகளின் காவ்யாவின் (பெண்ணியம் (1994) முயற்சிகளும், பல்கலைக் கழகக் கருத்தரங்க ஆய்வுகளும் (பெண்கள் படைப்பில் பெண்கள், அன்னை தெராசா மகளிர் பல்கலைக்கழகம்(1986), புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் 'பெண்ணிய ஆய்வுகள்' (1994) பெண்ணியக் கோட்பாடுகளை வெளிப்படுத்தத் தளம் அமைத்துக் கொடுத்தன.

இம்முயற்சிகள் மூலம் மேலை நாட்டுப் பெண்ணியக் கோட்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. தமிழகச் சூழலில் பெண்ணியத்தை எங்ஙனம் முன்னிறுத்த வேண்டும் என்ற சிந்தனைகளும் வெளிப்பட்டன. பெண்கள் பங்கெடுத்து வெளிப்படையாக விவாதிக்கும் கருத்தரங்க அமர்வுகள் நடத்தப்பட்டன. மொழிபெயர்ப்பு முயற்சிகளும் இதன்மூலம்

வெளிப்பட்டன 'மார்க்சியமும் பெண்நிலைவாதமும்' (1988) 'மார்க்சியம்-பெண்ணிய உறவும் முரணும்' (1998) க. பஞ்சாங்கத்தின் 'பெண்ணெனும் படைப்பு' (1994) போன்றன இவ்வரிசையில் குறிப்பிடத்தக்கவை. இந்நூல்களின் கட்டுரைகள் பெரும்பாலும் பெண்ணியக் கோட்பாடுகளை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

பெண்ணியம் என்பது பிற எவற்றோடும் இணைத்துப் பேசமுடியாத, பேசக்கூடாத தனிப்பிரச்சனை என்று கூறிப் பாலியல் நுகர்வு வேட்கையையே பிரச்சனைக்குத் தீர்வாக முன்வைக்கின்ற நவீன ஆணாதிக்க ஆய்வுகளுக்கும், நவீன முதலாளித்துவப் பெண்ணிய வாதிகள் எழுப்பும் கேள்விகளுக்கும் பதில் அளிக்கும் முகமாக பி. இரயாகரன் எழுதிய 'ஆணாதிக்கமும் பெண்ணியமும்' (2004) என்ற நூல் பெண்ணியக் கோட்பாடுகளையும், வரலாற்றையும் எடுத்துரைக்கின்றது.

பெண்ணியத்தோடு இணைந்து வெளிப்பட்ட தலித்தியம் 1980களில் தமிழகத்தில் அறிமுகம் ஆகியது. 1960களில் மராட்டியத்தில் வெளிப்பட்ட தலித்தியச் சிந்தனைகள் (தலித் என்ற சொல்லே மராட்டியச் சொல்) எண்பதுகளில் தமிழில் பதியத் தொடங்கின. 1991இல் நிகழ்ந்த அம்பேத்கர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளும் பினநவீனத்துவச் சிந்தனைகளின் அறிமுகமும் விளிம்புநிலை மக்களின் ஆய்வுகளின் அறிமுகமும் (Subaltern studies) தலித்தியக் கோட்பாடுகளும், படைப்புகளும், படைப்புகளைத் தலித்தியக் கண்ணோட்டத்தில் காணுகின்ற முயற்சியும் ஏற்படுவதற்குப் பின்னணிகளாக அமைந்தன.

தலித்தியமும் பெண்ணியமும் ஒரே தன்மையுடையது என்ற நிலையில் ஒடுக்கப்பட்ட, அமுக்கப்பட்ட (oppressed and suppressed people) 'தலித் பெண்ணியம்' என்ற கோட்பாட்டை உருவாக்கும் அளவிற்குச் சென்றது. தலித் என்ற சொல்லே நொறுக்குண்டவர்கள், குழியில் விழுந்தவர்கள் என்ற பொருளில் வழங்கப்பட, பிற சமுதாயத்தால் அடக்குமுறைக்கு ஆளான தலித் சமுதாயத்திலும் அடக்குமுறைக்கு ஆளானவர்கள் பெண்கள் என்ற கருத்து முன்னிறுத்தப்பட்டது. அதற்கேற்ப 1997இல் 'தலித்பெண்ணியம்' என்ற கோட்பாடு அடங்கிய நூல்வெளிவந்துள்ளது. 1992இல் அர்ஜுன் டாங்களே என்பவரின் மராத்திய நூல் தமிழல் 'தலித் இலக்கியம்' என்ற பெயரில் வெளிவந்தது. அந்நூலில் தலித் இலக்கியக் கோட்பாடுகள் சுட்டப்பட்டுள்ளன. 1998இல் ராஜ்கௌதமன் எழுதிய 'தலித் பண்பாடு' என்பது கோட்பாடு, வரலாறு, விமரிசனம் என்று மூன்று நிலைகளிலும் வெளிப்பட்ட நூலாகும்.

தலித்தியக் கோட்பாடுகள் என்கிறபோது சிலவற்றை உள்வாங்கிக் கொள்ள வேண்டியிருக்கின்றது. மார்க்சியம் என்பது 19-ஆம் நூற்றாண்டில் உருவாகிச் செயல்படுத்தப்பட்டு, இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் மறுபரிசீலனைக்குட்படுத்தப்படும் உலகளாவிய சிந்தனையாகும். தலித்தியம் என்பது 1960களில் உருவான, இந்திய அளவிலான சிந்தனையாகும். தமிழகத்தில் 1980களில்தான் இத்தகு சிந்தனை உருவாகியது. தலித்தியப் படைப்புகள் உருவாகின்றபோது, அவற்றோடு இணைந்து தலித்தியக் கோட்பாடுகளை உருவாக்கும் முயற்சிகளும் தோன்றின. தலித்தியப் பார்வையில் இலக்கியங்களை அணுகுதல் என்பது கோட்பாடுகளின் அடிப்படையில் பார்க்கப்படுதல் என்ற பொருளில் கொள்ளாமல் மரபிலக்கியங்களில் தலித்துகள் எங்ஙனம் படைக்கப்பட்டுள்ளனர் என்றும், மற்ற சாதியினருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இடமும் தலித்துகளுக்குத் தரப்பட்ட இடமும் எப்படி உருவாக்கப்பட்டன என்றும் அணுகப்பட்டன எனினும், தலித் அழகியல் என்பது பற்றிய சிந்தனைகளைத் தலித்தியக் கோட்பாடுகளாகவே கொள்ளவேண்டும்.

தலித்தியக் கோட்பாடுகளை முன்னிறுத்தியவர்களில் ரவிக்குமார், அ.மார்க்ஸ், ப.சிவகாமி, இந்திரன், ராஜ்கௌதமன் போன்றோரும் நிறப்பிரிகை, புதியகோடாங்கி, மனுசங்க, காலச்சுவடு, சுபமங்களா, நிகழ் போன்ற இதழ்களும் குறிப்பிடத்தக்கவை. தலித் அல்லாத திறனாய்வாளர்கள் சிலரும் (வேதசகாயகுமார், சுந்தரராமசாமி, ஞானி, அ.ராமசாமி) தலித்தியச் சிந்தனைகள் குறித்துப்பேசியிருப்பது, தலித்தியக் கோட்பாடுகள் பற்றிய முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும். பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களில் தலித் இலக்கியவரலாறு (புதுவைப்பல்கலைக் கழகம்) பயிற்றுமளவிற்குத் தலித்தியக் கோட்பாடுகள் முதன்மை பெற்றுள்ளன.

கே.ஏ. குணசேகரனின் 'சேரிப்புறவியல்' என்ற கருத்தும்[5], தலித் அரங்கியல் குறித்த விவாதமும் தலித்தியக் கோட்பாட்டிற்குள் கொண்டுசெலுத்துவதோடு, கிராமப்புறவாழ்விலிருந்து சேரிப்புறவாழ்வைப் பிரித்து நோக்கவேண்டும் என்ற நடைமுறைச் சிக்கலையும் வெளிப்படுத்தியுள்ளது.

பல்வேறு தனியார் அமைப்புகளும் (தலித் ஆய்வுமையம், மதுரை. விளிம்பு டிரஸ்ட், கோவை) பதிப்பகங்களும் (விடியல், கோவை, தலித் சாகித்திய அகாதெமி, சென்னை) தலித்திய கோட்பாடுகளுக்கும் தலித்தியப் படைப்புகளுக்கும் உதவி வருகின்றன.

தலித் விவாதங்கள் தொடங்கிய முதல் இரண்டு ஆண்டுகள் (1991-92)களில் நிகழ், சுபமங்களா, மேலும், ஆய்வு, சிலேட் போன்ற இதழ்கள் பங்கெடுத்தன. தலித் படைப்புகள் தலித்துகளால் எழுதப்படுவதா? தலித் அல்லாதவர்களால் எழுதப்படுவதா? என்ற விவாதங்களைத் தாண்டி, தலித் அழகியல் பற்றிய கோட்பாடுகளை முன்வைக்கின்ற போக்கு உருவாகிவிட்டது. தலித் இலக்கிய வரலாறு, தலித் படைப்பாளர்கள், தலித்தியப் பார்வைகள் குறித்துப் பல்வேறு இயக்கச் சார்புடையவர்களும் (சுந்தரராமசாமி, தி.க. சிவசங்கரன், ஞானி, இ. முத்தையா, தே. ஞானசேகரன்) எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட்ட சு.சண்முக சுந்தரத்தின் முயற்சி (தலித்தியம், 1996) குறிப்பிடத்தக்கது. அவ்வாறே, 2000இல் 'தமிழ் இனி' நடத்திய உலகத்தமிழ் இலக்கியக் கருத்தரங்கில் அ.ராமசாமி எழுதிய 'தலித் இலக்கியம்' பற்றிய நீண்ட கட்டுரை (தட்டச்சுப்படி) தலித் இலக்கியத் தோற்றம் பின்னணியைச் சுட்டிச் செல்கின்றது. இக்கட்டுரையிலும் தலித் கோட்பாடு பற்றிய அம்சங்கள் விளக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் கூறப்பட்ட செய்திகள்வழி,மார்க்சிய இலக்கியக் கோட்பாடுகள் வெளிப்படுமுன்னரே, மார்க்சிய அணுகுமுறைக் கண்ணோட்டங்கள் தொடங்கப்பட்டுவிட்டன என்பதும் அமைப்பியல், பின் அமைப்பியல் சிந்தனைகளைக் பொறுத்தவரையில் கோட்பாடுகள் முன்னரும் அணுகுமுறைகள் பின்னரும் ஏற்பட்டன என்பதும் தலித்திய, பெண்ணியச் சிந்தனைகளில் கோட்பாடுகளும் அணுகுமுறைகளும் இணைந்தே தொழிற்பட்டுள்ளன என்பதும் பெறப்படுகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. ஐ. மாலன், 'மொழியும் நிலமும்', (புது மலர் பதிப்பகம், ஈரோடு, 2003), பக்.137-223.
2. கோ. கேசவன், 'பாரதி முதல் கைலாசபதி வரை', ப.129.
3. ஞானி, 'மார்க்சியமும் தமிழ் இலக்கியமும்' தலித்தியம் (காவ்யா, பெங்களூர், 1996, ப.19).
4. க. பூரணச்சந்திரன், 'தொடரும் எழுத்தும், தொடர்ச்சியறு எழுத்தும்', திறனாய்வு சில புதிய தேடல்கள், சித்திரை நிலவுப் பதிப்பகம், மதுரை, 2003, பக்.92-104.
5. கே.ஏ. குணசேகரன், 'சேரிப்புறவியல்', தன்னனானே, சென்னை, 2003.

# பிறதுறைக் கோட்பாட்டு நூல்கள்

## அ. மார்க்சியம்


1. 1975 ஞானி, கலைஇலக்கியம் ஒரு தத்துவப்பார்வை', பரிமாணம் வெளியீடு, கோவை.

2. 1976 எல்.ஜி. கீதானந்தன் மற்றும் மூவர், 'கலை இலக்கிய சோஷலிஸ்டு எதார்த்தவாதம் (கட்டுரைத் தொகுப்பு) முற்போக்கு பதிப்பகம், மாஸ்கோ.

3. 1976 நா. வானமாமலை, 'மார்க்சிய சமூகவியல் கொள்கை', நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்.

4. 1978 நா. வானமாமலை, 'இந்திய நாத்திகமும் மார்க்சிய தத்துவமும்', நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 1990, (இப.)

5. 1978 நா. வானமாமலை, மார்க்சிய அழகியல்', மக்கள்வெளியீடு, சென்னை.

6. 1979 கைலாசபதி, 'சமூகவியலும் இலக்கியமும்' நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

7. 1979 எஸ்.வி. ராஜதுரை, 'அந்நியமாதல்', க்ரியா, சென்னை.

8. 1981 ஸ்டாலின், மார்க்சியமும் தேசிய இனப் பிரச்சனையும்', சென்னை புக்ஸ், சென்னை, 1985 (இ.ப.)

9. 1982 எம்.வி. சுந்தரம், மார்க்சிய நாத்திகம்', நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

10. 1982 எஸ். இராமகிருஷ்ணன், மார்க்சியப் பொருளாதாரப் பார்வை', நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

11. 1984 அ. மார்க்ஸ், 'மார்க்சிய இலக்கியக் கொள்கை' (மொ.பெ.) சிலிக்குயில், குடந்தை.

12. 1984 கோ. கேசவன், 'இலக்கிய விமர்சனம் ஒரு மார்க்சியப் பார்வை', அன்னம், சிவகங்கை.

13. 1984 பொன்னீலன், 'மார்க்சிய அழகியலின் அடிப்படைகள்' (மொ.பெ.) நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

14. 1984 ஜி.ஜான் சாமுவேல், 'இலக்கியத்தில் சமுதாயப் பார்வை', ஐந்திணை பதிப்பகம், சென்னை.

15. 1985 சுகுமாரன், 'மார்க்சிய அழகியல் ஒரு முன்னுரை' (மொ.பெ.) மீட்சி புக்ஸ், ஊட்டி.

16. 1986 கோ. கேசவன், 'மார்க்சியத் திறனாய்வுச் சிக்கல்கள்', புதுமைப் பதிப்பகம், மதுரை.

17. 1986 பெ.சு. மணி, காரல் மார்க்சின் இலக்கிய இதயம், பூங்கொடி பதிப்பகம், சென்னை.

18. 1987 எம்.ஏ. நுஃமான், மார்க்சியமும் இலக்கியமும்', அன்னம், சிவகங்கை.

19. 1988 ஞானி, 'மார்க்சியமும் தமிழ் இலக்கியமும்', பரிமாணம், கோவை.

20. 1989 சி. சிவசேகரன், 'மரபும் மார்க்சியவாதிகளும்', சென்னை புக்ஸ், சென்னை.

21. 1991 வ.கீதா, எஸ்.வி. ராஜதுரை, ஃபிரார்ங்க்ஃபர்ட் மார்க்சியம்', ரோசியா லுக்ஸம்பர்க் படிப்பு வட்டம்.

22. 1991 சி.இ. மறைமலை, 'இலக்கியமும் மார்க்சியமும்', மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

23. 1991 அ.மார்க்ஸ், 'மார்க்சியமும் இலக்கியத்தில் நவீனத்துவமும்', பொன்னி புத்தக மையம், சென்னை.

24. 1996 தி.சு. நடராசன், 'திறனாய்வுக்கலை', நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

25. 1997 ஞானி, 'தமிழில் நவீனத்துவமும் பின்நவீனத்துவமும்', காவ்யா, பெங்களூர்.

26. 1999 ஆர்.கே. கண்ணன், 'மார்க்சிய மெய்ஞானம்' (மொ.பெ.), நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

27. 2002 ஞானி, மார்க்சிய அழகியல், காவ்யா, பெங்களூர், சென்னை.

## 2. தலித்தியம்

1992 - அர்ஜுன் டாங்கனே, 'தலித் இலக்கியம்', தமிழில் தி.சு. சதாசிவம், தாமரைச்செல்வி பதிப்பகம், சென்னை.

1992 - வி. கம்பர் மாணிக்கம், பா. மோகன் லார்பியர், 'தலித் விடுதலை இயல்', தலித் ஆய்வு மையம், மதுரை.

1993 - ராஜ்கௌதமன், 'தலித் பண்பாடு', கௌரி பதிப்பகம், புதுவை.

1997 - அன்புக்கரசி, மோகன் லார்பியர்- 'தலித் பெண்ணியம்', தலித் ஆதார மையம், மதுரை.

1996 - அருணன், 'தலித் : அரசியலும் இலக்கியமும்' அன்னம், சிவகங்கை.

1998 - தணிகைச் செல்வன், தலித்தியம், தமிழியம்', இந்தியம், பல்கலைப் பதிப்பகம், சென்னை.

2003 - கே.ஏ. குணசேகரன், சேரிப்புறவியல்', தன்னனானே, சென்னை.

## 3. பெண்ணியம்

1998 - அபர்னா மஜந்தா, மார்க்சியமும் பெண் நிலைவாதமும்', பொன்னி வெளியீடு, சென்னை.

1994 - இரா. பிரேமா, 'பெண்ணியம்', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

1995 - முத்துச் சிதம்பரம், 'பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்', தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

1997 - அன்புக்கரசி, மோகன் லார்பியர், 'தலித் பெண்ணியம்', தலித், ஆதாரமையம், மதுரை.

1998 - வெ. கோவிந்தசாமி நடராஜ், 'மார்க்சியம் - பெண்ணியம் உறவும் முரணும்', விடியல் பதிப்பகம், கோவை.

1995 - மீனாட்சி முருகரத்தினம், 'இலக்கியத் திறனாய்வில் பெண்ணியக் கோட்பாடுகள்', சு. நடராசன் (பதிப்), கலை இலக்கியக் கோட்பாடுகள், ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம், மதுரை.

1994 - சு. சண்முகசுந்தரம் (தொகுப்பு), 'பெண்ணியமும் கலை இலக்கியப் பிரதிகளும்', காவ்யா, பெங்களூர்.

2001 - பி.இரயாகரன், 'ஆணாதிக்கமும் பெண்ணியமும்', கீழைக்காற்று வெளியீட்டகம், சென்னை.

## 1. அமைப்பியல் - பின் அமைப்பியல்

1981 - தமிழவன், 'ஸ்ட்ரக்சுரலிசம்', பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி.

1991 - க. பூரணச்சந்திரன், 'அமைப்பு மைய வாதம் பின் அமைப்பு மைய வாதம்', நிகழ், கோவை.

1992 - தமிழவன், 'தமிழும் குறியியலும்', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

1995 - அ.அ. மணவாளன், 'இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள்', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

1997 - ஞானி, 'தமிழில் நவீனத்துவமும் பின்நவீனத்துவமும்', காவ்யா, பெங்களூர்.

1998 - ந. முத்துமோகன், 'அமைப்பியல் பின் அமைப்பியல்', காவ்யா, பெங்களூர்.

2001 - ந. ரவீந்திரன், 'பின நவீனத்துவமும் அழகியலும்', தேசிய கலை இலக்கியப் பேரவை, சென்னை (சவுத்விஷன்).

2003 - க. பூரணச்சந்திரன், 'தொடரும் எழுத்தும் தொடர்ச்சியறு எழுத்தும்', திறனாய்வு சில புதிய தேடல்கள், ந. முருகேச பாண்டியன் உள்ளிட்ட மூவர் (பதிப்.ஆ), சித்திரை நிலவுப் பதிப்பகம், மதுரை, பக்92-104.

# பிறதுறைக் கோட்பாடுகளைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்ட நூல்கள்

## அ. மார்க்சிய ஆய்வுகள்

தமிழில் சமூகவியல் கண்ணோட்டத்தில் செய்யப்பட்ட ஆய்வுகள் என்பது பெரும்பாலும் மார்க்சியக் கண்ணோட்ட ஆய்வுகளாகவே வெளிப்பட்டன. எஸ். சிங்காரவேலு எழுதிய 'Social life of the Tamils - (1969) என்ற நூலும் 'தமிழ் நாவல்களில் மதிப்புகள்' என்ற சேதுமணி மணியனின் நூலும் (1990) மார்க்சியக் கண்ணோட்டமல்லாத சமூகவியல் ஆய்வுப்பார்வை கொண்டவையாகும்.

சி.இ. மறைமலையின் 'சமூகவியல் நோக்கில் புதுக்கவிதை' என்ற நூல் மார்க்சியக் கண்ணோட்டமில்லாத ஆய்வுப்பார்வை கொண்டதாகும். இதில் மார்க்ஸ் அல்லாத மாக்ஸ் வேபர், ஹெர்பர்ட் ஸ்பென்சர், எமிலி துர்க்கைம் போன்றோரின் சமூகவியல் கருத்துகள் எடுத்துக்காட்டப் பெற்றிருக்கின்றன.

தமிழ்த் திறனாய்வு வரலாற்றில் ஒரு துறையின் கோட்பாடுகளைக் கொண்டு வெளிவந்த ஆய்வுகள் என்பதில் முதன்மையும் எண்ணிக்கை அளவில் அதிகமும் கொண்டவை மார்க்சிய ஆய்வுகள் எனலாம். வாசகர்களுக்கு மார்க்சியக் கோட்பாடுகள் அதிகம் தெரியாவிட்டாலும், மார்க்சியக் கண்ணோட்டத்தில் இலக்கியத் திறனாய்வுமுறைகள் பெருமளவில் பழக்கமாயின.

சங்க இலக்கியத்தில் சமூகம் என்றும் காப்பியத்தில் சமூகம் என்றும் இலக்கிய மேற்கோள்களைக் காட்டி, அக்காலச் சமுதாயம் என்று கூறிவந்த காலகட்டத்தில் அவ்விலக்கியத்தின் சமூகவேர்கள் என்ன என்பதை மார்க்சிய ஆய்வுகள் வெளிப்படுத்தின. ஓர் இலக்கியத்தின் உள்ளடக்க, உருவ, உத்திச் சிறப்புகளைக் காணுமுன்னர் அவ்விலக்கியம் தோன்றுவதற்கான சமூகப் பின்னணிகள் விளக்கப்பட்டன. அச்சமூகப் பின்னணிகள் மூலம் இலக்கியத்தின் கூறுகள் விளக்கப்பட்டன.

மார்க்சியத் திறனாய்வைப் பொறுத்தவரையில் நூல்வடிவில் வந்த திறனாய்வுகள் (நாவல், சிறுகதை, புதுக்கவிதை என தனித்தனியான துறையில் மேற்கொண்ட ஆய்வுகள்) அறுபதுகளின் இறுதியில்தான் வெளிவந்தன. விடுதலைக்கு முன்பே ப.ஜீவானந்தம் இலக்கியங்களை மார்க்சியக் கண்ணோட்டத்தில் விளக்கினார். 1948-இல் ரகுநாதனின் 'இலக்கிய விமர்சனம்' என்ற நூல் வெளிவந்தது. இந்நூலில் பொதுவான கண்ணோட்டத்தில் நாவல், சிறுகதை போன்ற இலக்கியங்கள் திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இந்நூலுக்குப் பிறகு 'சாந்தி' (1954), 'சரஸ்வதி' (1955), 'தாமரை' (1958), 'செம்மலர்' (1970) போன்ற மார்க்சியச் சார்புடைய இதழ்கள் வெளிவந்தன. இவ்விதழ்களில், ப.ஜீவானந்தம், ரகுநாதன், தி.க. சிவசங்கரன், நா. வானமாமலை, கோ.கேசவன், போன்றோர் மார்க்சியத் திறனாய்வுகளையும், படைப்புகளையும் முன்வைத்தனர்.

இப்பகுதியில் இடம்பெற்ற கட்டுரைகள் மற்றும் நூல்கள் இரண்டு நிலைகளில் எடுத்தாளப்பட்டுள்ளன.

1. இலக்கியங்களில் இடம்பெற்ற மார்க்சியக் கருத்துகளை எடுத்துக்காட்டி விளக்குகின்ற ஆய்வுகள் (ஆ. செகந்நாதன், 'புதிய கவிதைகளில் 'மார்க்சியம்', 1983)

2. மார்க்சியக் கோட்பாடுகளின் கண்ணோட்டத்தில் பல்வேறு இலக்கியங்களை அணுகிய ஆய்வுகள். இவ்விரண்டு நிலைகளில் சில ஆய்வுகளில் தனித்தும் சில ஆய்வுகளில் இரண்டுநிலைகள் கலந்தும் வெளிப்பட்டன. இவை ஆங்காங்கே தொட்டுக் காட்டப்படுவதோடு மதிப்பீட்டிற்கும் உள்ளாக்கப்பட்டுள்ளன.

ஒரு குறிப்பிட்ட இலக்கிய வகையை எடுத்துக்கொண்டு அதன் தோற்றம், வரலாறு, வளர்ச்சியை மார்க்சியக் கண்ணோட்டத்தில் ஆராய்கின்ற போக்கு 'தமிழ் நாவல் இலக்கியம்' (1968) என்ற நூல் மூலமாகத் தொடங்குகிறது எனலாம். இவ்வாறு மார்க்சிய அணுகுமுறையில் இலக்கியங்களை ஆய்வு செய்கின்ற போக்கை இவ்வியல் விளக்குகிறது.

### நாவல் ஆய்வுகள்

1968இல் வெளிவந்த க.கைலாசபதியின் 'தமிழ் நாவல் இலக்கியம்' என்ற நூலில் தமிழ் நாவலின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் இன்றியமையாத வரலாற்றுச் செய்திகளுடன் இணைத்துப்பார்க்கின்ற பார்வையைக் க.கைலாசபதி கையாண்டுள்ளார். இதற்கேற்பக் கால ஆராய்ச்சியும், நாவல் பண்பாய்வும் ஒருங்கே மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ் நாவல்

திறனாய்வு முயற்சிகளில் இது முன்னோடி முயற்சி எனலாம். கி.வா.ஜ.வின் நூல், (தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும் (1966) தமிழ் நாவலின் தோற்றத்தை ஓரளவே கணித்திருக்கக் கைலாசபதியின் நூல், காவியத்திற்கும் நாவலுக்கும் உள்ள தொடர்புகள், தொடர்பின்மைகள், உரைநடையோடு நாவல்கொண்ட நெருக்கம் தனிமனிதவாதம் நாவல் இலக்கியத்தில் இடம்பெற்றமை, சிறுகதை தொய்விற்கும் நாவலின் வளர்ச்சிக்கும் உள்ள காரணங்கள் போன்றவற்றை மார்க்சியக் கண்ணோட்டத்தில் அணுகியிருப்பது, தமிழ் நாவல் திறனாய்வுப் போக்கில் குறிப்பிடத்தக்க முயற்சி எனலாம். இதை அடியொற்றித்தான் கா. சிவத்தம்பி, எஸ். தோதாத்ரி, வெ.கிருஷ்ணமூர்த்தி, ஞானி போன்றவர்கள் நாவல் இலக்கியத்தைத் திறனாயத் தொடங்கினர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

மார்க்சியக் கண்ணோட்டத்தில் இவ்வியல் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள், நாட்டுப்புறவியல், மானிடவியல் போன்ற துறைகளில் கவனஞ்செலுத்திப் பல்வேறு அறிஞர்களின் கட்டுரைகளை வெளியிட்டும், தானே பல கட்டுரைகளை எழுதியும் 'ஆராய்ச்சி' என்ற இதழை 1969 முதல் நடத்தியவருமான நா. வானமாமலையின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அவருடைய ஆராய்ச்சி இதழில் நாவல் இலக்கியம் பற்றிய கட்டுரைகள் தெளிவான ஒரு முறையியலை வகுத்துக் கொடுத்ததோடு, அம்முறையியல் கொண்டு அணுகுமுறைப் பார்வையையும் பலருக்கு நல்கியது. 'ஆராய்ச்சி' இதழ் மூன்று மாதங்களுக்கொருமுறை வெளிவந்த காலாண்டிதழாகும். (சில சமயங்களில் கால அளவில் மாறுதலும் இதழ் வெளியீட்டில் தடங்கல்களும் வந்ததுண்டு). சிறுபத்திரிகைகள் வெறும் விமரிசனங்களாகக் கட்டுரைகளை வெளியிட்ட காலத்தில் ஆய்வு முறையியலைத் தலையாய பணியாகக் கொண்டு வெளிவந்த இதழாகுமிது. இவ்விதழில் எஸ்.தோதாத்ரி, வெ.கிருஷ்ணமூர்த்தி, தி.சு. நடராசன் போன்றோர் நாவல் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

ரகுநாதன், டிசெல்வராஜ், பொன்னீலன், கு. சின்னப்பபாரதி போன்றோரின் நாவல்களைப் போற்றுகின்ற மார்க்சியத் திறனாய்வாளர்கள் கல்கி, அகிலன், போன்ற ஜனரஞ்சக எழுத்தாளர்களையும் க.நா.சு., லா.ச. ராமாமிருதம், சி.சு. செல்லப்பா போன்ற அழகியல் கோட்பாட்டு எழுத்தாளர்களையும் அவர்தம் படைப்புகளையும் பிற்போக்கானவை என்று ஒதுக்கி வந்தனர். எனினும், அவற்றின் குறைபாடுகளை ஆய்வியல் முறையோடு சுட்டிக்காட்ட வேண்டிய முனைப்பை 'ஆராய்ச்சி' இதழ் காட்டியது.

அவ்வகையில் எஸ். தோதாத்ரியின் 'கல்கியும் ஸ்காட்டும்' என்ற கட்டுரை குறிப்பிடத்தக்கது.

கல்கியை ஸ்காட்டோடு ஒப்பிட்டு, கி.வா. ஜகந்நாதன் எழுத, அதனை மறுத்து, இரு நாவலாசிரியர்களின் வரலாற்றுக் கண்ணோட்டம் என்ன என்பதை விளக்கி, நாவல் இலக்கியக் கொள்கையிலும் வாழ்க்கை பற்றிய கண்ணோட்டத்திலும் இருவரும் எவ்வாறு வேறுபட்டு நிற்கின்றனர் என்பதையும் சுட்டி அக்கட்டுரையை எழுதியுள்ளார்.

'க.நா.சு.வின் நாவல்களும் அவற்றின் அடிப்படைத் தத்துவங்களும்' என்ற கட்டுரையை வெ.கிருஷ்ணமூர்த்தி எழுதியுள்ளார். நம்பிக்கை வறட்சி என்ற எதிர்மறைப்போக்கே இவரது நாவல்களில் ஆட்சி செலுத்துகிறது என்றும் வாசகனுக்கும் இலக்கிய ஆசிரியனுக்கும் தொடர்பேதுமில்லை என்றும் வாசகனுக்கு அளிக்கக் கூடிய செய்தி எதுவுமில்லை என்றும் கநாசு. கூறினும், உலக மறுப்புத் தத்துவத்தை வாசகனுக்குக் கூறவே அவர் நாவலைப் பயன்படுத்துகின்றார் என்று இக்கட்டுரையில் குறிப்பிடுகின்றார். அழகியல் கோட்பாட்டை வலியுறுத்தும் அணியினர் வாசகனுக்கு முதன்மையளிக்கும் போக்கும் மார்க்சிய அணுகுமுறையின் மூலம் வெளிப்பட்டுள்ளது என்பதற்கு வெ.கிருஷ்ணமூர்த்தியின் இக்கட்டுரை சான்றாகும்.

'கிருத்திகாவின் இரண்டு நாவல்கள்' என்ற கட்டுரையில் வெ.கிருஷ்ணமூர்த்தி 'வாஸவேச்வரம்', 'புதிய கோணங்கி' ஆகிய இரு நாவல்களை ஆய்வு செய்துள்ளார். உளவியல் கண்ணோட்டத்திலும், பின்நவீனத்துவக் கண்ணோட்டத்திலும் அணுக வேண்டிய இந்நாவல்களை மார்க்சியக் கண்ணோட்டத்தில் விமரிசனம் செய்தார். 'புதிய கோணங்கி' நாவலில் ப்ராய்டிசமும் நவீன ப்ராய்டிசமும் வெளிப்படையாகத் தோன்றுவதால் யதார்த்தத்தை விட்டு, வெகுதூரம் விலகிச் சென்று ஒரு கற்பனை உலகை நிலைக்களனாகக் கொண்டிருக்கின்றது என்று முடிவு செய்கிறார். இன்றைக்கு மாய யதார்த்தம் (Magical Realism) என்ற நிலையில் இந்நாவல் போற்றப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எஸ். தோதாத்ரியின் 'ஜெயகாந்தன் படைப்புகளில் சார்புநோக்கும் சார்பற்ற நோக்கும்' என்ற கட்டுரையில் சிறுகதைகளில் ஜெயகாந்தனிடம் மேலோங்கியிருந்த மனிதாபிமான உணர்வு, நாவல்களில் குறையத் தொடங்குகிறது என்றும் பிந்திய நாவல்களில் யதார்த்தத்திற்குப் புறம்பான மனத்தால் வாழும் கதைமாந்தர்கள் அதிகமாக இடம்பெறுகின்றனர் என்றும் சுட்டியுள்ளார். சரஸ்வதி, தாமரை போன்ற இதழ்களில்

எழுதும்போது (மார்க்சியச் சார்புடையவராகத் திகழும்போது) உன்னத படைப்புகளைத் தந்ததாகப் போற்றப்படும் ஜெயகாந்தன், ஆனந்த விகடனில் எழுதத் தொடங்கியதும் பிற்போக்கு எழுத்தாளராக மாறிவிட்டார் என்று கூறுவது இவர்களது சார்புநோக்கையும் சுறாரான ஆய்வுப்பார்வையையும் காட்டுகின்றன.

எனினும், அணிசாராத எழுத்தாளர்களாகக் கருதப்படும் தி.ஜானகிராமன், நீல.பத்மநாபன், ராஜமய்யர், அ.மாதவையா போன்றோரின் படைப்புகளை நடுநிலையோடு மதிப்பீடு செய்துள்ளனர். ராஜம் அய்யரின் அத்வைத நோக்கிலிருந்தும் வேதநாயகம் பிள்ளையின் அதியற்புத நோக்கிலிருந்தும் மாதவையா வேறுபடுகிறார் என்று 'பத்மாவதி சரித்திரம்' பற்றி எஸ்.தோதாத்ரி கூறிய கருத்து இன்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

நீல. பத்மநாபனின் 'தலைமுறைகள்' 'பள்ளி கொண்டபுரம்' ஆகிய இரு நாவல்களை மதிப்பிட்ட கட்டுரையாளர் பி.எஸ்.கே. பக்தவச்சலன் பள்ளிகொண்டபுரத்தின் அனந்தன் நாயர் அழிந்துபோகும் பழைய தலைமுறையின் கடைசி நபர் என்றும் தலைமுறையின் தெரவியோ முளைவிடும் புதிய சமுதாயத்தின் முதல்கிளை என்றும் கூறுகின்றார். மேலும், சமுதாயத்தால் நசுக்கப்படும் இருவரில் அனந்தன்நாயர் கடைசிவரை எதிர்க்கத் துணியாமல் இருப்பதையும், தெரவி அந்த அமைப்பை உடைத்தெறிய முயற்சிப்பதையும் தெளிவாகச் சுட்டுகின்றார்.

'ஆராய்ச்சி'யில் வந்த நாவல் பற்றிய கட்டுரைகளை நோக்குமிடத்து, மார்க்சிய அணிசார்ந்த ஒருசிலரே கட்டுரைகளை எழுதியிருப்பதும் தம் அணி சார்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளை அதிகம் புகழ்ந்திருப்பதும், எதிரணி எழுத்தாளர்களின் படைப்புகளில் அதிகம் குறைகாண்பதும், அணிசாராத படைப்பாளர்களின் படைப்புகளை நடுநிலையோடு ஆய்வு செய்திருப்பதும் வெளிப்படுகின்றன.

1976இல் எஸ். தோதாத்ரியின் 'ஜெயகாந்தன் ஒரு விமர்சனம்' என்ற நூல் வெளிவந்தது. இந்நூலின் 'ஜெயகாந்தன் படைப்புகளில் சார்பு நோக்கும் சார்பற்றநோக்கும்' என்ற கட்டுரையில் சிறுகதைகளில் ஜெயகாந்தனிடம் மேலோங்கியிருந்த மனிதாபிமான உணர்வு நாவல்களில் குறையத் தொடங்குகிறது என்றும், பிந்திய நாவல்களில் யதார்த்தத்திற்குப் புறம்பான மனத்தால் மட்டும் வாழ்கிற கதாபாத்திரங்கள் அதிகமாக இடம்பெறுகின்றன என்றும் சுட்டியுள்ளார். இந்திரா பார்த்தசாரதியின் மனத்தால் வாழும் கஸ்தூரி போன்றவர்களை ஏற்றுக்கொள்ளும் மார்க்சியச் சார்பு

விமரிசகர்கள் ஜெயகாந்தனின் மனத்தால் வாழும் கதையின் மாந்தர்களை எதிர்கொள்ளத் தயங்குவதாகவே தெரிகிறது. 1970களில் இத்தகு பார்வைகொண்ட எஸ்.தோதாத்ரி 1990-களில் மாறிவிட்டார் என்பதை அவரது அண்மைக்காலத் திறனாய்வுகள் காட்டுகின்றன.

1977இல் 'தமிழ் நாவல் ஒரு மதிப்பீடு' என்ற நூலினை நா. வானமாமலை தொகுத்து வெளியிட்டார். இந்நூல் ஒன்பது கட்டுரைகளின் தொகுப்பாகும். இவற்றுள் எஸ்.தோதாத்ரி நான்கு கட்டுரைகளும், தி.சு. நடராஜன் இரண்டு கட்டுரைகளும் வெ. கிருஷ்ணமூர்த்தி இரண்டு கட்டுரைகளும் பி.எஸ்.கே. பக்தவச்சலன் ஒரு கட்டுரையும் எழுதியுள்ளனர். 'தமிழ்நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலில் கி.வா.ஜகந்நாதன், கல்கியையும் ஸ்காட்டையும் இணைத்துப்பேச க.கைலாசபதி, 'தமிழ் நாவல் இலக்கியம்' என்ற நூலில் கல்கியை ஸ்காட்டுடன் ஒப்பிடுதல் கூடாது என்று மறுக்கின்றார். எஸ். தோதாத்ரியும் க.கைலாசபதியின் கூற்றை ஆதரித்துக் கல்கி ஸ்காட்டைப்போன்று உறுதியான கொள்கையையுடைய விமர்சனக் கண்ணோட்டமுள்ள எழுத்தாளர் அல்லர் என்றும் கல்கி ஸ்காட்டின் கொள்கையிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர் என்றும் தன்னுடைய மதிப்பீட்டினைக் 'கல்கியும் ஸ்காட்டும்' என்ற கட்டுரையின் மூலம் முன்வைக்கின்றார்.

1980இல் எஸ்.தோதாத்ரியின், தமிழ் நாவல் சில அடிப்படைகள் என்ற நூல் அவரது மூன்று கட்டுரைகளின் தொகுப்பு நூலாகும். இந்நூலின் 'தமிழ் நாவலில் பாட்டாளி வர்க்கக் கதாபாத்திரங்கள்' என்ற கட்டுரை 'ஆராய்ச்சி இதழில் 1976-இல் 'தமிழ் நாவலில் கம்யூனிச கதாபாத்திரங்கள்' என்ற தலைப்பில் வெளிவந்தது. தேசிய இயக்கச் சார்புடைய எழுத்தாளர்களின் பாட்டாளி வர்க்கக் கதைமாந்தர்களும், திராவிடஇயக்கச் சார்புடைய படைப்பாளர்களின் பாட்டாளிக் கதைமாந்தர்களும் ஆசிரியர்களின் அணுகுமுறைகளினால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர் அல்லது மாறுபடுகின்றனர் என்பதை ஆராய்ந்துள்ளார். இத்தகு போக்கில் அமைந்த கட்டுரைகள் தமிழில் குறைவு என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நூலின் மற்றொரு கட்டுரையான 'தமிழ் நாவலும் யதார்த்தவாதமும்' என்ற கட்டுரை ஆங்கில வடிவம்பெற்றுத் 'தமிழ் நாவல்கள் சில ஆய்வுகள்' (1988) என்ற நூலில் இடம்பெற்றுள்ளது. அந்நூலில் வானமாமலையின் முன்னுரை இடம்பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. 'தமிழ் வரலாற்று நாவல்கள்' என்ற இன்னொரு கட்டுரை 1973இல் 'ஆராய்ச்சி' இதழில் வெளிவந்தது. கா. சிவத்தம்பியின் 'இலக்கியத்தில் முற்போக்குவாதம்' (1978) 'ஈழத்தில் தமிழ் இலக்கியம்' (1978) 'இலக்கியமும் கருத்து நிலையும்' (1982) ஆகிய நூல்களில் ஓரிரு

கட்டுரைகள் நாவல் இலக்கியம் பற்றிப் பேசுகின்றன. அவருடைய 'நாவலும் வாழ்க்கையும்' என்ற நூலும் கட்டுரைகளின் தொகுப்பேயாகும். இந்நூலில் உள்ள அனைத்துக் கட்டுரைகளும் நாவலுக்கும் மனித சமூகவாழ்க்கைக்கும் உள்ள தொடர்புபற்றியும், பல்வேறு வாழ்க்கைக்கூறுகள் நாவல் இலக்கியத்தில் எங்ஙனம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறித்தும் ஆராயப்பட்டுள்ளன.

கேசவனின், 'இயக்கமும் இலக்கியப் போக்குகளும்' என்ற நூலில் நாவல் தொடர்பான கட்டுரை ஒன்று மட்டும் இடம்பெற்றுள்ளது. சமூக இயக்கத்திற்கு ஏற்ப இலக்கியப் போக்குகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் கேசவன் சுட்டிச் செல்கின்றார். மேற்குறிப்பிட்ட அனைத்து நூல்களுமே மார்க்சின் இயங்கியல் பொருள் முதல்வாதத்தை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டவையாகும்.

1983-இல் கைலாசபதியின், 'இலக்கியச் சிந்தனைகள்' என்ற நூல் வெளிவந்தது. இந்நூல் சில கட்டுரைகளின் தொகுப்பு நூலாகும். இந்நூலில் 'தமிழ் நாவல்களில் மனித உரிமைகளும் மக்கள் போராட்டங்களும்' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று இடம்பெற்றுள்ளது. இக்கட்டுரையில் 'பஞ்சும் பசியும்', 'தாகம், 'கரிசல்', 'மலரும் சருகும்' முதலிய நாவல்களைத் தொட்டுச் சென்றிருக்கிறார். கைலாசபதியின் இக்கட்டுரை 'சமர்' என்ற இதழில் 1980இல் வெளிவந்தது.

1986இல் அமார்க்ஸின், 'படைப்பாளி வாழ்க்கை இலக்கியம்' என்ற நூல் வெளிவந்தது. இந்நூலில் பிற இலக்கியங்களோடு நாவலையும் திறனாய்வு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதே ஆண்டில் த.வே. வீராசாமியின், 'தமிழ் நாவல் இயல்' என்ற நூலில் ஓரிரு கட்டுரைகள் நாவல் பற்றிய திறனாய்வுகளாக வந்துள்ளன. 1988இல் எஸ். தோதாத்ரியின் 'தமிழ் நாவல் சில ஆய்வுகள்' என்ற நூல் நியூ செஞ்சுரி புக் ஹவுசின் வெளியீடாக வந்தது. இந்நூலில் எட்டுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் தற்கால தமிழ் இலக்கியத்தில் நாவல் இலக்கியத்தின் போக்கினைப் பற்றியும், இன்றையத் தமிழ்க் கலாச்சாரத்தின் சில பிரதானமான அம்சங்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. இக்கட்டுரைகள், 'ஆராய்ச்சி', 'தாமரை', 'சுதந்திரம்' (புதுச்சேரி) ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தவை. 1988இல் ஞானியின் 'மார்க்சியமும் தமிழ் இலக்கியமும்' என்ற நூல் வெளிவந்தது. இந்நூலில், 'தமிழ் நாவல் இலக்கியம்' என்ற தலைப்பில் ஆறு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அதில் 'தமிழ் நாவல்கள் யதார்த்தவாதம் கலையியல்'

என்ற கட்டுரையில் மார்க்சிய அழகியல் பார்வையில் அணுகுவதைக் காணமுடிகிறது. அதனைத் தொடர்ந்து ஞானி, 'எண்பதுகளில் தமிழ் நாவல்கள்' என்ற நூலினை 1994இல் வெளியிட்டார். இந்நூலில் 1980களில் வெளிவந்த நாவல்களைப்பற்றிப் பொதுவான மதிப்பீடாக, நாவல் மற்றும் ஆசிரியர் அடிப்படையில் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சிறு பத்திரிகைகளில் நாவல் பற்றிய விமர்சனங்களாக 1960கள் வரை வெளிவந்து கொண்டிருந்த காலத்தில் நாவல் இலக்கியத் தோற்றத்திற்குரிய சமூக, அரசியல், பண்பாட்டுப் பின்னணிகளோடு நாவல் வளர்ச்சியைப் பற்றியும் அதன் போக்குகளைக் குறித்தும் க. கைலாசபதியால் தொடங்கப்பெற்ற ஆய்வுமுறை பல்வேறு மார்க்சியத் திறனாய்வாளர்கள் அம்முறையைப் பின்பற்றி ஆய்வு செய்யத் தூண்டியது. மேலும், பல்கலைக்கழக, கல்லூரி ஆய்வுகளிலும் இத்தகு முறையில் நாவல் இலக்கியத்தை ஆய்கின்ற போக்கும் ஏற்படலாயிற்று. சிறு பத்திரிகை விமர்சனங்கள் முன் வைக்காத ஆய்வு முறையியலை நாவல் இலக்கியம் பற்றி ஆய்வு செய்த மார்க்சிய விமர்சகர்கள் முன் வைக்கத் தொடங்கியது குறிப்பிடத்தக்கதாகும்.

### சிறுகதை ஆய்வுகள்

தமிழ்ச் சிறுகதைகள் பற்றிய மார்க்சியக் கண்ணோட்டத்தில் ரகுநாதன், 'இலக்கிய விமர்சனம்' (1948) என்ற நூலின் மூலம் தொடங்கி இருந்தாலும், சிறுகதை விமர்சனங்கள் மார்க்சியச் சார்புடைய 'சாந்தி', சரஸ்வதி', 'தாமரை', போன்ற இதழ்களின் வழியே 1960கள் வரை வெளிப்பட்டன. 1967இல் கா. சிவத்தம்பியின் 'தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலே தமிழ்ச் சிறுகதையின் வரலாற்றைக் கூறும் முதல் நூலாகவும், மார்க்சியத் திறனாய்வாளர்களால் எழுதப்பட்ட முதல் நூலாகவும் வெளிப்பட்டது. இந்நூலின் தனித்தன்மையை அந்நூலாசிரியரே,

> "இந்நூல் முதல் தடவையாக வெளியிடப்பெற்றபொழுது, தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சி பற்றிய வரலாற்றுப் பூர்வமான நூலாக இதுவே அமைந்தது. அக்காலம்வரை, தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சியில் நிறுவன ரீதியாகப் பணியாற்றிய பத்திரிகைகள், சஞ்சிகைகள் பற்றிய வரலாறு எதுவும் எழுதப்பட்டிருக்கவில்லை. சிறப்பாக, மணிக்கொடிக் குழுவின் வரலாறு பற்றி எதுவும் வெளியிடப் படாதிருந்தமையை இங்குக் குறிப்பிடல் வேண்டும்"

என்று இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டிருப்பது வெளிப்படுத்தும். 1967இல் கா. சிவத்தம்பி குறிப்பிட்ட மணிக்கொடிக்

குழுவின் வரலாறு 1977இல் பி.எஸ். இராமையாவால் 'மணிக்கொடிக் காலம்' என்ற நூல் மூலம் நிறைவேறியது. 1960களில் சிறுகதை விமர்சனங்கள் எழுந்தாலும் தனித்தனிப் படைப்பாளர்கள், அல்லது படைப்புகள் பற்றிய திறனாய்வுகளாகவே இருந்தன. வரலாற்று ரீதியான சிறுகதை வரலாறு சிவத்தம்பியின் முயற்சிக்குப் பின்னரே எழத் தொடங்குகிறது.

இதே ஆண்டில்தான் ச. செந்தில்நாதனின் 'தமிழ்ச் சிறுகதைகள் ஒரு மதிப்பீடு' என்ற நூல் வெளிவந்தது. இந்நூலில் 1966வரை நிகழ்த்தப்பட்ட சிறுகதை விமர்சனங்களைப்பற்றிய மதிப்பீட்டை ஆசிரியர் முன் வைத்துள்ளார். இம்மதிப்பீட்டிற்கு பிறகே சிறுகதை வரலாறு பற்றிப் பேசுகின்றார். செந்தில்நாதனுக்குப் பிறகு சிறுகதை வரலாறு குறித்து மார்க்சியத் திறனாய்வாளர்களால் பெரிதும் எழுதப்படவில்லை எனலாம். 1988இல் கோ. கேசவனின் 'தமிழ்ச் சிறுகதைகளில் உருவம்' என்ற நூல் நீண்ட இடைவெளிக்குப் பிறகு வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. இவர் இந்நூலில் 1917 முதல் 1987 வரை (70 ஆண்டுகள்) தமிழ்ச் சிறுகதை உருவத்தில் ஏற்பட்ட பல்வேறு போக்குகளை (வ.வே.சு. ஐயர் தொடங்கி ஜெயகாந்தன் படைப்புகள் வரை) மதிப்பீடு செய்கின்றார்.

சிறுகதை வடிவ அம்சங்கள், அதன் உள்ளடக்கத்தால், தீர்மானிக்கப்படுகின்றன என்பதை இந்நூல் மூலம் ஆசிரியர் வலியுறுத்துகின்றார். மௌனி, புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், கல்கி போன்றோர்களிடையே உள்ள சிறுகதைகளின் உருவ, உள்ளடக்க வேறுபாடுகளையும் அதன் காரணங்களையும் சுட்டிச் செல்கின்றார்.

புதுமைப்பித்தனோடு நெருங்கிய நட்பு கொண்டிருந்தவரும் படைப்பாளரும் விமர்சகருமாகிய ரகுநாதன், மார்க்சியக் கண்ணோட்டத்தில் பல இலக்கியங்களை ஆய்வு செய்திருப்பினும், சிறுகதைப் படைப்புகளை அதிகம் திறனாயவில்லை எனலாம். 2000இல் அவரால் எழுதப்பட்ட புதுமைப்பித்தன் பற்றிய நூல் (புதுமைப்பித்தன் விமரிசனங்களும் விஷமத் தனங்களும்) புதுமைப்பித்தன் சிறுகதைகளைப் பற்றிய பிற விமர்சகர்களின் கருத்துகளையும் அவற்றில் உள்ள முரண்பாடுகளையும் சுட்டிக்காட்டும் விதத்தில் வெளிப்பட்டுள்ளதேயன்றி, அதனை மார்க்சிய அணுகுமுறை கொண்ட நூலாகக் கொள்ளமுடியாது.

நாவல், புதுக்கவிதைகள் ஆய்வுக்குட்படுத்திய அளவிற்குச் சிறுகதைகளை மார்க்சியத் திறனாய்வாளர்கள் எடுத்துக் கொள்ள வில்லை. நாவல் என்ற இலக்கியவகை மார்க்சிய ஆய்விற்குக் களம் அமைத்துக் கொடுக்கும் வுகையில் சிறுகதை இலக்கியவகை

அமையாமல், கதைமாந்தர்களின் உணர்வுகளுக்கு முதன்மை அளிப்பதால் அவற்றை விளக்குவதில் அத்திறனாய்வாளர்களுக்குச் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கலாம்.

எனவே, சிறுகதைகளைப் பற்றிய மார்க்சிய அணுகுமுறை கொண்ட நூல்கள் அதிகம் வெளிவரவில்லை என்பது புலனாகிறது.

### புதுக்கவிதை ஆய்வு வரலாறு

இவ்விலக்கிய வகை பாரதியாரால் 'வசனகவிதை' என்ற பெயருடன் தொடங்கப்பெற்றது. பாரதியாரால் வசன கவிதை என்று பெயரிடப்படவில்லை என்ற கருத்தும் உள்ளது. 1950களின் இறுதியில்தான் 'புதுக்கவிதை' என்ற நிலையான, பெயரினைப் பெற்றது. இதற்கு முன், இப்பெயர் 1930களில் தோன்றிய 'மணிக்கொடி' இதழில் கவிதையா? வசனகவிதையா? என்ற வாதமே தொடர்ந்து வந்துகொண்டிருந்தது. இந்நிலை 1950களின் இறுதி வரை நீடித்தது. மணிக்கொடிக்குப் பிறகு வந்த பத்திரிகைகளான 'சிவாஜி', 'சூறாவளி', 'கலாமோகினி', 'கிராம ஊழியன்', 'சுதந்திரச் சங்கு' போன்ற இதழ்களிலும் வசன கவிதை பற்றிய விமர்சனங்கள் வெளிவந்துள்ளன.

ஒரு காலகட்டம்வரை (1960கள் வரை) புதுக்கவிதை மார்க்சியச் சார்புடைய திறனாய்வாளர்களால் புறக்கணிக்கப் பட்டிருந்த தருணத்தில் வானம்பாடி இதழ் (1971) வெளிவந்தது. இவ்விதழ் புதுக்கவிதைக்கு முன்னுரிமை கொடுத்தது. கவிதையின் உள்ளடக்க மாறுதலை வரவேற்ற 'தாமரை' இதழ் உருவ மாறுதலை நிராகரித்தது. ஆனால், 'வானம்பாடி' இதழ் உள்ளடக்கத்தோடு உருவத்தினையும் வரவேற்றது. இவ்விதழில் நா. காமராசன், புவியரசு, அக்னிபுத்திரன் போன்றோர் தங்கள் பங்களிப்பை நல்கியுள்ளனர். வானம்பாடிக் கவிஞர்கள் பொதுவுடைமைக் கொள்கை சார்ந்து நின்றதால், புதுக்கவிதை மேலும் வலுப்பெறத் தொடங்கியது. ஜனரஞ்சக இதழ்கள் கூடப் புதுக்கவிதைகளை வெளியிடுமளவிற்கு மக்கள் கவிதையாகப் புதுக்கவிதை உருவெடுத்தது. இதற்குப் பிறகுதான், புதுக்கவிதையை மார்க்சியத் திறனாய்வாளர்கள் (தொ.மு.சி. ரகுநாதன், க. கைலாசபதி, கா. சிவத்தம்பி) ஏற்றுக் கொண்டு, அத்தகு படைப்புகளுக்கு அணிந்துரையும் வழங்க முன் வந்தனர்.

1975இல் நா. வானமாமலை, 'புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும்' என்ற நூலில் புதுக்கவிதையை மார்க்சியப் பார்வையில் விமர்சனம் செய்துள்ளார். இதற்குப் பின்னரே மார்க்சியத் திறனாய்வாளார்கள் மக்கள் கவிதையாக இதனை ஏற்றுக்கொண்டு புதுக்கவிதைப் படைப்பாளர்களின் நூல்களுக்கு

அணிந்துரையும் அளிக்க முன்வந்துள்ளனர் எனலாம். நா. வானமாமலையின் இந்நூல் புதுக்கவிதை ஆய்வு வரலாற்றில் முதல் நூல் என்பதோடு மட்டுமல்லாமல், புதுக்கவிதையை மார்க்சியக் கண்ணோட்டத்தில் செய்த ஆய்வாகவும் அமைகின்றது.

நா. வானமாமலையின் தொடர்பு ஏற்பட்டு மார்க்சிய சிந்தனை உலகிற்கு அடியெடுத்து வைத்த தமிழவன், 1977இல் வெளிவந்த அவரது 'புதுக்கவிதை நாலு கட்டுரைகள்' என்ற நூலிலேயே நா. வானமாமலையிடமும், ப. ஜீவானந்தம் தொடங்கி வைத்த 'தாமரை' யிடமும் தெரிந்து கொண்ட மார்க்சியத்தை மீறி வளரும் துணிச்சல் தமக்குள் இருப்பதைக் காட்டிவிடுகின்றார். தமிழவன், பிற்காலத்தில் அமைப்பியல் திறனாய்வுக்குச் சென்றதால் மரபு சார்ந்த மார்க்சியத் திறனாய்வாளர்களால் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானார் என்பது குறிப்பிடத்தக்கது. 1978-இல் வெளிவந்த ஆ. செகந்நாதனின் 'புதுக்கவிதை ஒரு திறனாய்வு' என்ற நூல் மார்க்சியப் பார்வையில் நோக்கப்பட்டது என்று குறிப்பிடலாம். மார்க்சியச் சார்புடைய திறனாய்வாளர்களால் புதுக்கவிதைத் திறனாய்வு மேலும் வளர்ந்தது. 1978இல் வெளிவந்த து.மூர்த்தியின் 'இக்காலக் கவிதைகள்' என்ற நூலில் ஒரு சில கட்டுரைகள் மார்க்சியக் கண்ணோட்டத்தில் திறனாய்வு செய்யப்பட்டுள்ளன.

1983இல் ஆ. செகந்நாதன் 'புதிய கவிதைகளில் மார்க்சியம்' என்ற நூலில் மார்க்சியக் கோட்பாடுகளைக் கொண்டு புதுக்கவிதைகளை அணுகி ஆய்வு செய்துள்ளார். 1984இல் வீ அரசு எழுதிய 'வானம்பாடிகள்' என்ற கட்டுரையும் குறிப்பிடத்தக்கது. 1988இல் கோவை ஞானியின் 'மார்க்சியமும் தமிழ் இலக்கியமும்' என்ற நூல் பரிமாணத்தின் வெளியீடாக வந்தது. இந்நூலில், 'பழங்கவிதை முதல் புதுக்கவிதை வரை' என்ற தலைப்பில் 15 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 'வானம்பாடிகளின் வெளிச்சங்கள்' என்ற கட்டுரை முதல் 6 கட்டுரைகள் 1980கள் வரை வந்த புதுக்கவிதைகள் பற்றிய விமர்சனங்களாக அமைந்துள்ளன. இக்கட்டுரைகள் மூலம் க. கைலாசபதி போன்றோர் பார்க்க மறுத்த அழகியல் பார்வையை ஞானி முன் வைத்தார். மேலும், தமிழகச் சூழலுக்கு ஏற்பவும் தமிழ்ச் சிந்தனைக்கு ஏற்பவும் மார்க்சியத்தை முன் வைக்க வேண்டும் என்ற கருதுகோளின் அடிப்படையில் அவரது கட்டுரைகள் அமைந்துள்ளன.

1988இல் வெளிவந்த கோ. தான்யாவின் 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம்' என்ற நூல் முனைவர் பட்ட ஆக்கமாகும். இந்நூலில்

இருபதாம் நூற்றாண்டின் முற்போக்கு முன்னோடிக் கவிஞர்களான பாரதியார், பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களில் இடம்பெறுகின்ற தத்துவக் கோட்பாட்டுப் பாடல்களையும், மார்க்சியத்தின் பாதிப்பால் உருவான புதுக்கவிஞர்களையும், ஈழத்துத் தமிழ்க் கவிஞர்களையும் திறனாய்வு செய்கின்றார்.

சு. அரங்கராசுவின் (அக்னிபுத்திரன்) 'தமிழ்ப் புதுக் கவிதை ஒரு திறனாய்வு' என்ற நூல் 1991இல் வெளிவந்தது. இந்நூலும் முனைவர் பட்ட ஆய்வேட்டின் நூலாக்கமாகும். இந்நூலில் சு. அரங்கராசு, 'மணிக்கொடி', 'எழுத்து', 'கசடதபற', 'வானம்பாடி' முதலிய இலக்கியச் சிற்றேடுகளில் வெளிவந்த விமர்சனங்களை எடுத்து ஆய்கின்றார். தமிழ் நாட்டின் சமூக வரலாற்றுடன் தொடர்புப்படுத்திப் புதுக்கவிதையின் தோற்ற வளர்ச்சியை அளவிடும் முதல் நூலாக இது விளங்குகிறது எனலாம். இந்நூலாசிரியர் வானம்பாடி இயக்கக் கவிஞராகவும் திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1993-இல் நா. கிருட்டிணமூர்த்தியின் 'பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களில் மார்க்சியத் தாக்கம்' என்ற நூல் வெளிவந்தது. இந்நூலும் முனைவர் பட்ட ஆய்வேட்டின் நூலாக்கமாகும். இந்நூல் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களில் மார்க்சியக் கலை இலக்கியக் கூறுகள் எவ்வாறு விரவிக் கிடக்கின்றன என்பது பற்றி ஆய்கின்றது.

### பிற துறைகளில் மார்க்சியத் திறனாய்வு வரலாறு

நவீன இலக்கியங்களில் நாவலை மட்டும் அதிகமாக ஆய்வு செய்த மார்க்சியத் திறனாய்வாளர்கள் புதுக்கவிதை போன்றவற்றைக் காலம் தாழ்த்தியே ஆய்வுக்கு உட்படுத்தத் தொடங்கினர். 1968இல் நாவல் இலக்கியத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட க. கைலாசபதி தன்னுடைய முனைவர் பட்ட ஆய்வுக்குச் சங்க இலக்கியங்களைத் தெரிவு செய்தது குறிப்பிடத்தக்கது. 'தமிழில் வீர யுகப் பாடல்கள்' (1968) (Tamil Heroic Poetry) என்ற ஆய்வு, சங்க இலக்கியங்களையும் கிரேக்க இலக்கியங்களையும் ஒப்பிட்டு ஆய்வு செய்ததாகும். 'பண்டைய தமிழர் வாழ்வும் வழிபாடும்' (1966) என்ற இவரது நூல் தொன்மைத் தமிழ் இலக்கியங்களை மார்க்சியப் பார்வையில் அணுகியதாகும். இந்நூலில் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களின் காலப் பகுதியை வணிக வர்க்கத்தின் எழுச்சிக்காலமாகக் கைலாசபதி காண்கிறார். பக்தி இயக்கக் காலத்தையும் நிலவுடைமை வர்க்கத்தின் எழுச்சியாகக் காண்கிறார்.

க. கைலாசபதிக்கு முன் ப.ஜீவானந்தம் சங்க இலக்கியத்தை மார்க்சியப் பார்வையில் ஆய்வு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவரது 'சங்க இலக்கியத்தில் சோஷலிச யதார்த்தவாதம்' என்ற நூல் 1973இல் வெளிவந்தது. இதற்கு முன்னரே ஜீவானந்தம் சங்க இலக்கியம் தொடர்பான ஆய்வுகளைத் 'தாமரை' இதழில் எழுதியிருக்கிறார். அதனைத் தொடர்ந்து தொ.மு.சி. ரகுநாதனின்'இளங்கோ அடிகள் யார்?' என்ற நூல் 1984இல் வெளிவந்தது. இந்நூலில், வணிக வர்க்கத்திற்கும் நிலவுடைமைச் சமுதாயத்திற்கும் இடையே நிகழும் போராட்டங்களைப் பற்றி மார்க்சியக் கண்ணோட்டத்தில் ஆராய்கின்றார்.

கு.மா. பாலசுப்பிரமணியத்தின் 'பண்டைத் தமிழ்ச் சமுதாய வளர்ச்சி- ஒரு மார்க்சியப் பார்வை' (1987) என்ற நூல் பழைய இலக்கியங்களை மார்க்சியப் பார்வையில் அணுகுகின்ற போக்கிற்கு ஏற்ற சான்றாகும். அதே ஆண்டில் நா. வேலுச்சாமியின் 'மார்க்சிய லெனினியப் பார்வையில் சங்க இலக்கியம்' என்ற நூல் வெளி வந்தது. இந்நூல் மார்க்சிய லெனினிய சித்தாந்தங்கள் எந்த அளவிற்குச் சங்கப் பாடல்களில் பரிணமித்துள்ளன என்பதை ஆராய்கின்றது.

சிற்றிலக்கியங்களில் மார்க்சியத் திறனாய்வாளர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தவில்லை. எனினும், கோ. கேசவன் போன்றோர் சிற்றிலக்கியம் பற்றிய தங்களுடைய சிந்தனைகளை வெளியிட்டுள்ளனர். 'பள்ளு இலக்கியம் - ஒரு சமூகவியல் பார்வை' (1981) என்ற நூல் மார்க்சியப் பார்வையில் தான் வெளிப்பட்டுள்ளது. வட்டாரம் தழுவிய பிரபந்த வகைகளும் சமூகத்தின் கடைநிலையில் வைக்கப்பட்டிருந்தவர்களின் உணர்வுகளும் எழுந்ததற்கான பின்னணிகள் இந்நூலில் விரிவாக் ஆராயப்படுகின்றன.

நா. வானமாமலை தன்னுடைய 'ஆராய்ச்சி' என்ற இதழ் மூலம் நாட்டுப்புறவியல், மானிடவியல் ஆய்வுகளை வளர்த்தெடுத்தார். பல்கலைக்கழகங்களில் நாட்டுப்புறவியல் தொடர்பான ஆய்வுகள் எழுந்ததற்கு 'ஆராய்ச்சி' தன் பங்களிப்பை நல்கியுள்ளது. கோ. கேசவனின் 'கதைப்பாடல்களும் சமூகமும்' (1985) என்ற நூலும், அமார்க்ஸின் 'கதைப்பாடல்களும் துன்பியலும்' (1986) என்ற நூலும் இத்துறையில் எழுந்த குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

நாடகத்தைப் பொறுத்த வரையில், நாடகத்தைப் பற்றிய கட்டுரைகள் தான் வெளிவந்துள்ளனவே தவிர நூல்கள் அதிகம் வரவில்லை எனலாம். இருப்பினும், கா. சிவத்தம்பி நாடகத்தைப் பற்றிய முனைவர் பட்ட ஆய்வு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவரது 'தமிழில்-இலக்கிய வரலாறு' (1987) என்ற நூல் இதுவரை

தமிழில் வெளிவந்த இலக்கிய வரலாறுகளையும் அவற்றின் உள்ளடக்கப் பகுப்புகளையும், அப்பகுப்புகளுக்கான அரசியல், சமய, சமூகப் பின்புலன்களையும் சுட்டிச் செல்வது குறிப்பிடத்தக்கதாகும். இலக்கியத்தின் வரலாற்றிற்கும் இலக்கிய வழி வரலாற்றிற்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விளக்கி, இலக்கிய வரலாற்றின் காலப் பகுப்பை மார்க்சியப் பின்னணியில் கா.சிவத்தம்பி ஆராய்ந்திருக்கிறார்.

எண்பதுகளின் இறுதியில் பின்நவீனத்துவச் சிந்தனைகள் தமிழில் எழத்தொடங்கின. மார்க்சியக் கண்ணோட்டமுடைய தமிழவன், அ. மார்க்ஸ் போன்றவர்கள் பின்நவீனத்துவப் பார்வையில் மார்க்சியத்தை மறுபரிசீலனைக்குட் படுத்தினர். இதனால் திக. சிவசங்கரன், நரவீந்திரன், பி. இரயாகரன் போன்றோர் பின்நவீனத்துவப் பார்வையில் உள்ள குறைபாடுகளைச் சுட்டும் போக்கிலும் மார்க்சியத்தின் பரிணாம வளர்ச்சியின் போக்கை உணர்த்தும் வகையிலும் கட்டுரைகள், நூல்கள் எழுதிவருகின்றனர். இத்தகு மார்க்சியப் பார்வைகளும் கருத்துகளும் கோட்பாட்டுரீதியாக, பின்நவீனத்துவச் சிந்தனைகளின் பலமின்மையை எடுத்துக் காட்டும்வண்ணம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

### அடிக்குறிப்பு

1. சிவத்தம்பி, கா. 'தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்' ப.7.

## மார்க்சியக் கோட்பாடுகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட ஆய்வுகள்


1. 1948 தொ.மு.சி. ரகுநாதன் 'இலக்கிய விமர்சனம்', ஸ்டார் பிரசுரம், சென்னை.

2. 1967 கா. சிவத்தம்பி 'தமிழில் சிறுகதைகள் தோற்றமும் வளர்ச்சியும்', பாரி நிலையம், சென்னை.

3. 1967 ச. செந்தில்நாதன், 'தமிழ்ச் சிறுகதைகள் ஒரு மதிப்பீடு', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

4. 1968 க. கைலாசபதி, 'தமிழ் நாவல் இலக்கியம்', பாரி நிலையம், சென்னை.

5. 1973 ப. ஜீவானந்தம், 'இலக்கியத்தில் சோஷலிஸ்டு எதார்த்தவாதம்', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

6. 1973 ப. ஜீவானந்தம், 'சங்க இலக்கியத்தில் சமுதாயக் காட்சிகள்', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

7. 1975 நா. வானமாமலை, 'புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும்', மக்கள் வெளியீடு, சென்னை.

8. 1976 எஸ். தோதாத்ரி, 'ஜெயகாந்தன்-ஒரு விமர்சனம்', அன்னம், சிவகங்கை.

9. 1977 நா. வானமாமலை, 'தமிழ் நாவல்கள் ஒரு மதிப்பீடு', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்', சென்னை.

10. 1977 தமிழவன், 'புதுக்கவிதை நாலு கட்டுரைகள்', கோமதி அச்சகம், திருநெல்வேலி.

11. 1978 கா. சிவத்தம்பி, 'நாவலும் வாழ்க்கையும்', தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

12. 1978 ஆ. செகந்நாதன், 'புதுக்கவிதை - ஒரு திறனாய்வு', ஸ்ரீ வேலன் பிரஸ், சிதம்பரம்.

13. 1980 எஸ். தோதாத்ரி, 'தமிழ் நாவல் - சில அடிப்படைகள்', அகரம், சிவகங்கை.

14. 1981 கோ. கேசவன், 'பள்ளு இலக்கியம் ஒரு சமூகவியல் பார்வை', அன்னம், சிவகங்கை.

15. 1983 ஆ. செகந்நாதன், 'புதிய கவிதைகளில் மார்க்சியம்', மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

16. 1984 தொ.மு.சி. ரகுநாதன், 'இளங்கோவடிகள் யார்?' மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

17. 1984 'யதார்த்தவாதமும் தமிழ் நாவல்களும்' (தொகுப்பு)- இலக்கு, காவ்யா வெளியீடு,சென்னை.

18. 1985 கோ. கேசவன், 'கதைப்பாடல்களும் சமூகமும்', தோழமை, சென்னை.

19. 1986 அ. மார்க்ஸ், 'கதைப்பாடலும் துன்பியலும்', சுயம்வரம் தொகுப்பு, அன்னம், சென்னை.

| | | |
|---|---|---|
| 20. | 1986 | தா.வே. வீராசாமி, 'தமிழ் நாவல் இயல்', தமிழ்ப்புத்தகாலயம், சென்னை. |
| 21. | 1987 | ந. வேலுச்சாமி, 'மார்க்சிய லெனினியப் பார்வையில் சங்க இலக்கியம்', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. |
| 22. | 1987 | கு.மா. பாலசுப்பிரமணியன், 'பண்டையத் தமிழ்ச் சமுதாய வளர்ச்சி-ஒரு மார்க்சியப் பார்வை', தமிழ்ப் புத்தகாலயம், சென்னை. |
| 23. | 1988 | கோ. கேசவன், 'தமிழ்ச் சிறுகதைகளில் உருவம்', அன்னம், சிவகங்கை. |
| 24. | 1988 | கோ. தான்யா, 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் மார்க்சிய கொள்கைகளின் தாக்கம்', ஐந்திணைப் பதிப்பகம், சென்னை. |
| 25. | 1988 | எஸ். தோதாத்ரி, 'தமிழ் நாவல்கள் சில ஆய்வுகள்', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. |
| 26. | 1991 | க. அரங்கராசு (அக்னிபுத்திரன்), 'தமிழ்ப் புதுக்கவிதை ஒரு திறனாய்வு', உலகப் பதிப்பகம், சென்னை. |
| 27. | 1992 | இரா. சம்பத், 'புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம்', உமா பதிப்பகம், புதுவை. |
| 28. | 1993 | ந. கிருஷ்ணமூர்த்தி, 'பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களில் மார்க்சியத் தாக்கம்', விழிச்சுடர் பதிப்பகம், சென்னை. |
| 29. | 1994 | ஞானி, 'எண்பதுகளில் தமிழ் நாவல்', விஜயா பதிப்பகம், கோவை. |
| 30. | 2000 | சு.துரை, 'தமிழ் இலக்கிய ஆய்வில் மார்க்சிய நோக்கு', காவ்யா, பெங்களூர். |
| 31. | 2000 | சோ.முத்துமாணிக்கம், 'இயக்கவியல்: தமிழ்ப்புதினங்களின் வழி', காவ்யா, பெங்களூர். |
| 32. | 2002 | ஞானி, மார்க்சிய அழகியல், காவ்யா, பெங்களூர். |

## ஆ. அமைப்பியல் பின் அமைப்பியல் ஆய்வுகள்

1980களில் அறிமுகமான அமைப்பியல் சிந்தனைகள் 1990களில்தான் அதிக அளவில் பேசப்படலாயின. கோட்பாட்டு நிலையில் அறிமுகமான அமைப்பியல் சிந்தனைகள் பயன்பாட்டுநிலையில் மிகக்குறைந்த விழுக்காட்டிலேயே இடம்பெற்றுள்ளன.

இந்தியமொழிகளில் தமிழில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது அமைப்பியல். 1981இல் தமிழவன் 'ஸ்ட்ரக்சுரலிசம்' என்ற நூலை எழுதினார். இதைத்தொடர்ந்து பல கட்டுரைகள் எழுதிய அவர் 1984இல் 'அமைப்பியல் வாதமும் தமிழ் இலக்கியமும்' என்ற பல்வேறு கட்டுரைகள் கொண்ட நூலினை வெளியிட்டார். இந்நூலின் கட்டுரைகள் சிலவற்றில், அமைப்பியல் கண்ணோட்டத்தில் இலக்கியங்களைப் பார்க்கின்ற முறை பின்பற்றப்பட்டுள்ளது.

1980களில் ஒரு கோட்பாட்டு நூலும் அதைப் பயன்படுத்திச் சில கட்டுரைகளும் தமிழில் வெளிவந்துள்ளன. பின்நவீனத்துவச் சிந்தனைகளின் வெளிப்பாடாக, நவீனத்துவம் பற்றிய மீள்பார்வைகள் எழத்தொடங்கின. அவ்வகையில் அ.மார்க்ஸ், ராஜ்கௌதமன், பிரேம்-ரமேஷ், ரவிக்குமார் போன்றோரின் எழுத்துகள் அமைப்பியல் மற்றும் பின் அமைப்பியல் தன்மை கொண்டவையாக வெளிப்பட்டன.

பின் நவீனத்துவம் என்பது அண்மையில் மேலைநாடுகளில் ஏற்பட்ட மனோபாவம். பின்நவீனத்துவ அறிமுகத்தாலும், 1985களின் இறுதியில் ரசியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களாலும், 1991இல் அம்பேத்கார் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டதும் இம்மேலை மனோபாவம் தமிழகத்திலும் ஒரு புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இலக்கியத்துறையில் மார்க்சியரால் முன்வைக்கப்பட்ட சோசலிச எதார்த்தவாதம் என்பதும் இலக்கியத்தில் எதார்த்தம் அப்படியே எதிரொலிக்கின்றது என்பதும் ஆட்டம் காணத் தொடங்கியது.

இந்தப் பின்னணியில் அமைப்பியல், மார்க்சிய அமைப்பியல் சார்ந்த இலக்கியச் சிந்தனைகள் வலுவாகப் பரவத்தொடங்கின. தமிழவன், நாகார்ஜுனன், எம்.டி. முத்துக்குமாரசாமி, அமார்க்ஸ், ரவிக்குமார், பிரேம் போன்றோரின் பார்வையில் அடிப்படை வேறுபாடுகள் இருப்பினும், புதிய இலக்கியக் கோட்பாடுக்ள் அறிமுகமாவதற்கு இவர்களின்

முயற்சிகள் காரணமாயின. மொழி எதார்த்தத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு மாறாகக் குறியீடு செய்கிறது என்றனர்.

எனவே, மரபுரீதியான விமர்சனமுறையிலிருந்து மாறுபட்டு, இத்தகு அமைப்பியல் விமரிசனங்கள் குறிப்பிட்ட பிரதியில் செயல்பாடுகளுக்குப் பின்னணியாக உள்ள மரபுகளுக்கும் பிரதிகளுக்குமிடையேயான உறவையும் அர்த்த உருவாக்கத்தில் இருந்த உறவின் பங்கையும் வலியுறுத்துகின்றன. மரபு விமரிசனம் அர்த்தம் என்பதை படைப்பின் ஒரு பண்பாகக் கருதுகிறது. அமைப்பியல் விமரிசனமோ அர்த்தம் என்பதைப் பிரதிக்கும் வாசகனுக்கும் இடையேயான மோதலின் விளைவாகப் பார்க்கிறது.

அமைப்பியல் மற்றும் பின் அமைப்பியல் சிந்தனைகளின் வெளிப்பாடாக 90களுக்குப் பின்வரும் பெண்ணிய, தலித்தியக் கட்டுரைகளும் நூல்களும் அமைந்துள்ளன. குறிப்பிட்ட அமைப்பியல் கோட்பாட்டைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட ஆய்வுகள் என்பது தமிழில் அதிகம் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட கோட்பாடுகளைக் கொண்டு அணுகுதல் பின் நவீனத்துவச் சிந்தனைக்கு ஏற்றதல்ல என்ற கருத்தும் இத்தகு நிலைக்குக் காரணமாகலாம்.

இரண்டு அல்லது மூன்று நூல்களும் சில கட்டுரைகளுமே அமைப்பியல் கோட்பாடுகளைப் பயன்படுத்தி வெளிவந்தவையாக விளங்குகின்றன. அ.மார்க்ஸின் 'உடைபடும் புனிதங்கள்' (1997) 'உடைபடும் மௌனங்கள்' (1994) என்ற இரண்டு நூல்களிலுள்ள கட்டுரைகளுமே கட்டுடைத்தல் என்ற பின்அமைப்பியல் நெறிமுறையைப் பின்பற்றியவையாக வெளிப்பட்டுள்ளன.

'உடைபடும் மௌனங்கள்' என்ற நூலுக்கு முன்னுரை எழுதிய ரவிக்குமார்,

> **உண்மையைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தி விருதுவாங்கும் துப்பறிபவரின் செயல்பாட்டையொத்ததாக விமர்சகரை ஆக்கிவந்த மாடர்னிச அணுகுமுறையைக் கடந்ததாகவே அ.மார்க்ஸின் அணுகுமுறை அமைந்துள்ளது**

என்று கூறிவிட்டு, இவரது அணுகுமுறையை மார்க்சியம் கடந்த இடதுசாரி அணுகுமுறை என்கிறார்.[1] எனவே, பின் நவீனத்துவம் என்பது நவீனத்துவத் திறனாய்வுமுறையிலிருந்து மாறுபட்டதாகவும் மார்க்சியம் கடந்த அணுகுமுறையாகவும் விளங்குவதைக் காணலாம்.

மௌனி, எம்.வி. வெங்கட்ராம், கி.ரா. போன்றோரின் படைப்புகள் குறித்துப் பேசும் அ.மார்க்ஸ் 'மணிக்கொடியின் பரிணாமம்' என்ற கட்டுரையில்,

> முதற்கட்டத்தில் இருந்த கிளர்ச்சி மதிப்பீடும் இல்லாமல், இரண்டாவது கட்டத்தைப்போல இலக்கியப் பரிசோதனைக் களமாகவும் இல்லாமல், ஆனந்தவிகடன் போன்று வணிக நோக்கையும் பூர்த்திசெய்யாமல் மக்கள் பிரச்சினைகளைத் தவிர்த்ததால் மக்களுடன் ஐக்கியமுமாகாமல் போனதன் விளைவாக விரைவில் மணிக்கொடி செத்துப்போனதென்பது தவிர்க்க இயலாததாகியது

என்று முடிவுக்கு வருவது[2] சரியாக இருந்தாலும், இம்முடிவுக்கான காரணங்களும் விவாதங்களும் அமைப்பியல்முறையில் அமையாமல், மார்க்சியப் பார்வையினாலேயே அணுகப்பட்டுள்ளது தெளிவாகிறது. இக்கட்டுரை 1983இல் எழுதப்பட்டதும் ஒரு காரணமாயிருக்கலாம். அக்காலகட்டத்தில் மார்க்சியம் கடந்த அணுகுமுறை அ.மார்க்ஸிடம் ஏற்படவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

எண்பதுகளில் ஏற்பட்ட மார்க்சிய திறனாய்வுப் போக்கில் மாற்றங்களைக் குறிப்பிட்டு விமரிசனம் செய்த அ.மார்க்ஸ் 1990இல் ஒரு கட்டுரையை எழுதிப்படித்துள்ளார். எண்பதுகள் என்பது 1981-89 வரையிலுள்ள காலகட்டம்.. இந்தக் காலகட்டத்தில் தான் சோவியத்யூனியன் சிதறுண்டது. ஆனால், அ.மார்க்ஸ் 'சோவியத்யூனியன் சிதறுவதற்கு முன்பு எழுதப்பட்ட கட்டுரை இது' என்ற குறிப்பைத் தந்துள்ளார். அப்படியெனில் 1985க்கு முன் எழுதப்பட்ட கட்டுரையாக இருக்க வேண்டும். ஆனால் 1989இல் வெளியான எஸ்.வி. ராஜதுரையின் 'ரஷ்யப்புரட்சி இலக்கிய சாட்சியம்' என்ற நூலை அக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இக்கட்டுரையில்தான் மார்க்சிய அமைப்பியல் அணுகுமுறையை வலியுறுத்துவதோடு, சோசலிச எதார்த்தவாதம், எதிரொலிப்புக்கொள்கை மேற்கட்டுமானம், அடிக்கட்டுமானம் போன்றவை விமரிசனத்துக்குட்படுத்தப் படுகின்றன. மரபுவழி இலக்கிய விமர்சனத்தில் ஏற்பட்டுள்ள தேக்கம் போலவே மரபுவழி மார்க்சிய இலக்கிய விமர்சனத்திலும் சர்வதேசஅளவில் மட்டுமல்ல, தமிழ்ச்சூழலிலும் இன்று பெருந்தேக்கம் ஏற்பட்டுள்ளது.. இலக்கியத்தின் சமூகவேர்களைக் கண்டறியும் கோ.கேசவனின் மார்க்சியப் பார்வையும் இங்கு மறுக்கப்பட்டுள்ளது.

இலக்கிய ஆக்கங்களின் தரத்தை நிர்ணயிக்கும் கூறுகள் யாவை என்கிற கேள்வி எழுப்பப்பட்டு, அதற்கான பதிலில் மரபுவழி விமரிசனத்திலிருந்து வேறுபடவேண்டி, எல்லா இலக்கியங்களையும் அவற்றின் தோற்றத்தில் வைத்துப் பார்க்கும் பார்வை அமார்க்சால் வலியுறுத்தப்பட்டது.

ந. முத்துமோகன் தனது 'அமைப்பியல் பின் அமைப்பியல்' (1998) என்ற நூலில் மணிமேகலைக் காப்பியத்தில் இந்திரவிழா மற்றும் அமுதசுரபி என்னும் கட்டுரையில் லெவி-ஸ்டராசின் தொன்மைக்கதைக் குறியியல் கருத்தைக்கொண்டு இந்திரவிழா மற்றும் ஆபுத்திரனின் அமுதசுரபி குறித்த நிகழ்வுகளுக்கு விளக்கம் அளிக்கின்றார்.

பின் நவீனத்துவ நோக்கில் பண்டைய இலக்கியங்களை அணுகிய க.பூரணச்சந்திரன் சங்கஇலக்கியங்களுக்குப் புதிய விளக்கங்கள் கொடுத்துள்ளார். பின்நவீனத்துவம் இலக்கிய விமரிசனம் செய்யவில்லை என்று கூறிவிட்டுப் புதியநோக்கில் விமரிசனம் செய்திருப்பது எடுத்துக்கொண்ட பின்நவீத்துவக் கொள்கைக்கு முரண்பட்டதாகவே தோன்றுகின்றது.

அமைப்பியலைத் தமிழில் அறிமுகப்படுத்திய தமிழவன் ஆண்டாளின் திருப்பாவை பற்றி அமைப்பியல் அணுகுமுறை கொண்டு கட்டுரை எழுதியுள்ளார். கவிதையின் அமைப்பு என்ற நிலையில் இவ்வாய்வு அமைந்துள்ளதேயன்றி, பக்திஇலக்கியம் என்ற அடிப்படையைக்கொண்டு நிகழ்த்தப்பட்டதாகத் தெரியவில்லை.[3]

க. பஞ்சாங்கத்தின் 'சிலப்பதிகாரத் திறனாய்வுகள் ஒரு பார்வை' என்ற நூல் (1993) அமைப்பியல் அணுகுமுறையில் எழுந்தது எனலாம். காலந்தோறும் சிலப்பதிகாரக் காப்பியத்தை எத்தகு அரசியல், சமயக் கண்ணோட்டத்தில் நோக்கினர் என்பதும் தொடர்ந்து அக்காப்பியம் நிலவி வருவதற்கான காரணங்களும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

அமைப்பியல், பின் அமைப்பியல் போன்றவை தத்துவங்களை, மையங்களை விமரிசிக்க வந்தவையாகும் நவீனத்துவத்தின் சில அம்சங்களை இவை கேள்விக்குட்படுத்தின. எனவேதான், இத்தகு முறையைப் பின்நவீனத்துவம் என்றழைத்தனர். நவீனத்துவம் போன்று இதையும் ஒரு தத்துவமாக மாற்றிவிடக்கூடாது என்கிறார் அ.மார்க்ஸ்.[4] பன்மைத்தன்மைகள் பின்நவீனத்துவத்தால் வலியுறுத்தப்படுகின்றன.

ஜமாலன் பின் அமைப்பியல் சிந்தனையின் விளைவாகப் பல கட்டுரைகளைக் 'காலக்குறி' இதழில் எழுதி; புதிய சில

கட்டுரைகளையும் இணைத்து 'மொழியும் நிலமும்' என்ற பெயரில் 2003இல் நூலாக வெளியிட்டுள்ளார். பின் அமைப்பியல் கோட்பாட்டுச் சிந்தனைகளைச் சில கட்டுரைகளும் அக்கோட்பாடுகளைப் பயன்படுத்திப் புதுமைப்பித்தன், மௌனி தம் சிறுகதைகளை அணுகியிருப்பதும் அத்தத்துவப் பின்புலத்தில் தொல்காப்பியத்தை அணுகியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. மனிதன் கைக்கொண்ட தொழில்நுட்பமான மொழி பிறகு மனிதனையே எப்படிக் கட்டமைக்கத் தொடங்குகிறது என்பதை விளக்கியிருக்கும் விதம் சிந்திக்கத்தக்கது.

தொல்காப்பியத்தின் இலக்கண முயற்சியை மொழிக் கட்டமைப்பிற்கான முயற்சியாகவே ஜமாலன் காண்கிறார். தமிழில் பெண்ணும் நிலமும் பிரிக்கப்படுவதன் மூலம் பெண் அகமாகவும் நிலம் என்பது புறமாகவும் உருவமைக்கப்படுகிறது. பெண்ணை வெல்வதற்கான நுட்பங்கள் புறமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன என்று அவர் வைக்கின்ற கருத்து பின் நவீனத்துவச் சிந்தனையின் அணுகுமுறை வெளிப்பாடு எனலாம்.

'உடலரசியல்' என்னும் பகுதியில் அமைந்துள்ள 5 கட்டுரைகள் மொழி பற்றிய பின் அமைப்பியல் அணுகுமுறையில் அமைந்துள்ளன. பாசிசம் என்பது புதிதாகத் தோன்றிய ஒன்றாகவும் முதலாளித்துவத்தின் துணை விளைவாகவும் கூறப்பட்ட கருத்தை மறுத்து, மொழி அதிகார நிறுவனமான காலந்தொட்டுப் பாசிசம் உருவாகியுள்ளது என்ற கருத்து விவாதத்திற்குரிய களன்களை அமைத்துள்ளது.

புதுமைப்பித்தனின் 'சிற்பியின் நரகம்' என்ற சிறுகதையை வழக்கமான கோட்பாடுகளைக் கொண்டுபோய்ப் பிரதியை அதற்கு ஏற்ப கதறச் செய்யும் பழைய முறைக்குப் பதிலாக, ஒரு பிரதியின் வாசிப்பில் உருவான ஆய்வுத் தர்க்கத்தைக் கொண்டே அப்பிரதியை அணுகி அதிலிருந்து ஏதேனும் கோட்பாட்டை அடையமுடியுமா? என்று முயற்சிக்கின்றார். இவ்வாறே மௌனியின் சிறுகதைகளையும் மதிப்பீடு செய்கிறார். தீவிர உணர்ச்சிகளைக் கொண்ட அறிவை எழுப்பப் புதுமைப்பித்தன் முயல்கிறார் என்றால், தீவிர அறிவைக் கொண்டு உணர்ச்சிகளை எழுப்ப மௌனி முயல்கிறார் என்கிற முடிவுக்கு ஜமாலன் வருகின்றார். ஜமாலனின் இத்தகு கருத்துகள் எல்லாம் பின் அமைப்பியல், பின் நவீனத்துவ அணுகுமுறையின் விளைவாக எழுந்தவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அமைப்பியல் மற்றும் பின் அமைப்பியல் கண்ணோட்டத்தில் இலக்கிய ஆய்வு செய்வோர் முதலில் கோட்பாட்டு விளக்கங்களைத் தந்தும் பின்னர் மரபுவழி வந்த

விமரிசனமுறைகளில் நிலவிய குறைகளைச் சுட்டியும், இன்றைய சூழலில் புதிய கண்ணோட்டங்களில் விளக்கங்கள் கூறியும் தங்களது பணியைச் செய்துவருகின்றனர். இதற்கு அ.மார்க்ஸ், நமுத்துமோகன் போன்றோரின் நூல்களும், கட்டுரைகளும் சான்றுகளாகும்.

இலக்கிய ரசனைகளையும், இலக்கியத்தின் சமூகவேர்களையும் தேடிக்கொண்டிருந்த திறனாய்வுப்போக்கில், இலக்கியம் தான் என்னவாகிறது, வாசகர்கள் பார்வையில் காலந்தோறும் மாறுபடுவதற்கான கூறுகள் என்ன அடங்கியுள்ளன? என்பனபோன்ற கேள்விகளைக் கேட்கவைத்ததும் அந்தத் திசையில் தலித்திய, பெண்ணியப் பார்வைகளைக் கொண்டு செலுத்தியதும் அமைப்பியல் ஆய்வுமுறையின் பயன்பாடுகள் எனலாம்.

## அடிக்குறிப்புகள்

1. அ.மார்க்ஸ், உடைபடும் மௌனங்கள், (விடியல் பதிப்பகம், கோவை, 1994) முன்னுரையில் ரவிக்குமார்.
2. மேலது. ப.85.
3. தமிழவன், 'திருப்பாவை - ஓர் அமைப்பியல் விமரிசனம்' தமிழ்க்கவிதையும் மொழிதல் கோட்பாடும், காவ்யா, பெங்களூர், 1992, பக்.161-173.
4. அ.மார்க்ஸ், 'பின்நவீனத்துவம், இலக்கியம், அரசியல்', ப.7.

## அமைப்பியல் – பின் அமைப்பியல்


1. தமிழவன், ஸ்ட்ரக்சுரலிசம், பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி, 1981.
2. தமிழவன், அமைப்பியல் வாதமும் தமிழ் இலக்கியமும், காவ்யா, பெங்களூர், 1984.
3. க.பூரணச்சந்திரன், அமைப்பு மையவாதம், பின் அமைப்பு மையவாதம், நிகழ், கோவை, 1991.
4. அ.அ. மணவாளன், இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1995.
5. அ. மார்க்ஸ், பின்நவீனத்துவம் இலக்கியம் அரசியல், விடியல் பதிப்பகம், கோவை, 1996.
6. ஞானி, தமிழில் நவீனத்துவமும் பின்நவீனத்துவமும், காவ்யா, பெங்களூர், 1977.
7. அ. மார்க்ஸ், உடைபடும் புனிதங்கள், விடியல் பதிப்பகம், கோவை, 1997.
8. ந. முத்துமோகன், அமைப்பியல் பின் அமைப்பியல், காவ்யா, பெங்களூர், 1998.
9. தி.சு. நடராசன் (தொகுப்.) பின்நவீனத்துவம்; அ.ராமசாமி, கோட்பாடுகளும் தமிழ்ச்சூழலும், விடியல் பதிப்பகம், கோவை, 1998.
10. ஜமாலன், மொழியும் நிலமும், புதுமலர் பதிப்பகம், ஈரோடு, 2003.

# இ. தலித்திய ஆய்வுகள்

விளிம்புநிலை ஆய்வுகள் (Subaltern studies) தலித்திய வளர்ச்சிக்கு வித்திட்டது போலவே, தலித்தியச் சிந்தனையின் விளைவாகத் தமிழில் 'விளிம்புநிலை ஆய்வுகளும் அறிமுகப் படுத்தப்பட்டன. அடித்தள மக்கள், விளிம்புநிலை மக்கள், என்ற நிலையில் தலித்துகள், பெண்கள் மட்டுமின்றி, பாலியல் தொழிலாளர்கள், அலிகள், இடுகாட்டில் பணிபுரிவோர், குற்றவாளிகள், பதியிலார் போன்றோரின் நிலைப்பாடுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. 1980களில் ரணஜித் குகாவின் குழுவினரால் அறிமுகப்படுத்தப்பட்ட (Guha, Ranajit (Ed) 'Subaltern Studies' Oxford University Press, (Vol. I-VI), New Delhi, 1982) விளிம்புநிலை ஆய்வுகள் தமிழில் 1996இல் 'நிறப்பிரிகை' சார்பில் 'விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ் எழுத்துகளும்' என்ற தலைப்பில் ஆய்வரங்கம் நடத்தப்பெற்றது. அவ் ஆய்வரங்கில் பல கட்டுரைகள் கோட்பாட்டு நிலையிலும் அணுகுமுறை நிலையிலும் படிக்கப்பட்டன; பின்னர் 1998இல் 'விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும்' என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தது.

இதுவரையில் எழுதப்பட்ட வரலாறுகள் மேட்டிமைக் கண்ணோட்டத்தில் அணுகப்பட்டுள்ளன என்பதும் காலனிய, தேசிய, மார்க்சியக் கண்ணோட்ட ஆய்வுகளில் உள்ள குறைபாடுகளைச் சுட்டுகின்ற நோக்கில் அடித்தள மக்கள் ஆய்வுகள் அமைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கன. 'விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும்' (1998) என்ற நூலில் அடித்தள ஆய்வுகள் குறித்த கோட்பாட்டுக் கட்டுரைகளும், தமிழ் இலக்கிய மரபில், விமரிசன வரலாற்றில் இடம்பெற்ற அடித்தள மக்கள் பற்றிய பார்வைகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. பொன்னீலனின் 'புதிய தரிசனங்கள்' நாவலில் வெளிப்பட்டுள்ள வெள்ளாளர் - நாயர் வகுப்பினரின் ஆதிக்கமும் வர்க்கப் போராட்டம் என்ற பெயரில் ஆதிக்க சாதியினரைச் சாதீயக் கொடுமையிலிருந்து தூரநிறுத்தி, அடித்தளச் சாதியினரிடையே தான் சாதிக்கொடுமைகள் நிலவுவதாகக் காட்டுவதும் சுட்டிக்காட்டப்பட்டு, அடித்தள மக்களைப் பாத்திரங்களாக வைத்து எழுதப்பட்ட இந்த நாவல் முழுக்க முழுக்க அடித்தள மக்களின் யதார்த்தத்துக்கு எதிராக இருப்பதாக ஒரு கட்டுரை வெளிப்படுத்துகின்றது. இத்தகு அடித்தள ஆய்வுகள், தலித் என்ற சொல்லாடலுக்குரிய தளத்தில் அதாவது சாதியாலும் சாதிக்கு அப்பாற்பட்டு ஒதுக்கப்பட்டவர் என்ற நிலையிலும் விளங்குகின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றன எனலாம்.

1990களில் அதிகம் வெளிப்பட்ட தலித்தியக் கோட்பாடுகளும் அக்கோட்பாடுகளைப் பயன்படுத்தி இலக்கியங்களை அணுகுகின்ற ஆய்வுகளும் இணைந்தே செல்லலாயின. பெண்ணியக் கோட்பாடுகள் மேலைநாட்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் தலித்தியக் கோட்பாடுகள் என்று கூறப்படுபவை இங்குத் தலித்தியச் சிந்தனைகள் என்ற அளவிலேயே நிலவுகின்றன. கோட்பாடுகளாக உருவாகும் நிலை இனிமேல்தான் ஏற்படவேண்டும். 'படிகள்' என்ற இதழில் தமிழவன் 1982இல் தலித்இலக்கியம் பற்றிய அறிமுகம் செய்திருப்பினும், தலித் கதைமாந்தர்கள், அவர்தம் பிரச்சனைகள் குறித்து நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள் எழுதப்பட்டிருப்பினும், 1991இல் அம்பேத்கார் நூற்றாண்டு விழாவினால்தான், தலித்தியச் சிந்தனைகள் வீறுகொள்ளலாயின.

ராஜ்கௌதமன், அ.மார்க்ஸ், ரவிக்குமார் போன்றோர் தலித்தியக் கோட்பாடுகளை முன்வைத்ததோடு, தலித்தியக் கண்ணோட்டத்தில் தமிழ் இலக்கியம், தமிழக வரலாறு, தமிழக அரசியல், தமிழகப் பண்பாடு போன்றவற்றை அணுகிப் புதிய சிந்தனைகளை முன்வைக்கத் தொடங்கினர்.

இவர்களன்றி நிறப்பிரிகை, சுபமங்களா, நிகழ், சாரதா, மனுசங்கம், கோடாங்கி, மேலும் போன்ற சிற்றிதழ்களும் தினமணிசுடர், இந்தியாடுடே போன்ற பெருவணிக இதழ்களும் தலித்தியப் படைப்புகள் மற்றும் விமரிசனங்களுக்கு முதன்மையளித்தன. இதனாலும் தலித்திய அணுகுமுறை வளர்ச்சி பெறலாயிற்று.

தலித்திய ஆய்வுகள் இருநிலைகளில் செயற்பட்டுவருகின்றன எனலாம்.

1 **இதுவரையில் வந்த இலக்கியங்களில் தலித்துகள் எங்ஙனம் இடம்பெற்றுள்ளனர்? எங்ஙனம் பார்க்கப்பட்டுள்ளனர்? என்ற பார்வையில் அணுகுதல்.**

2 **எதிர்கால இலக்கியங்கள் எப்படி இருக்கவேண்டும்? எத்தகு பார்வையில் படைக்கப்படவேண்டும் என்று கருத்துக்களை முன்வைத்தல்.**

பின் நவீனத்துவச் சிந்தனைகளின் தாக்கத்தால் தலித்தியம் வளர்ந்து வருவதால், மரபுசார்ந்த இலக்கியக் கொள்கைகளும், இலக்கியப்படைப்புகளும் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுப் புதிய பார்வையில் இலக்கியக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

**"தலித் இயக்கங்கள் நுண் அரசியலின் வெளிப்பாடாகப் பார்க்கப்படுவது போலவே பெண்ணியம், தலித்தியம் ஆகியவை பின் நவீனத்துவத்தின் குறிப்பீடுகளாகக் கருதப்படுகின்றன"**

என்ற கருத்து இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது'.[1]

1992இல் ராஜ்கௌதமன் எழுதிய 'தமிழக தலித்தும் தமிழ் இலக்கியமும்' என்ற நூலின் கட்டுரைகள் தலித்தியப் பண்பாட்டை விளக்குவதோடு தலித்தியச் சிந்தனைகள் தமிழ் இலக்கியத்தில் எங்ஙனம் இடம்பெற்றுள்ளன என்பதை விளக்குகின்றது.

1992இல் வெளிவந்த 'தலித் விடுதலை இயல்' என்ற நூலின் பல கட்டுரைகள் தலித்தியச் சிந்தனை வரலாற்றைக் கூறுவதாக அமைந்துள்ளன. தலித் விடுதலைக்கான கருத்துகளும் பல கட்டுரைகளில் முன்வைக்கப்பட்டுள்ளன.

1993இல் ராஜ்கௌதமன் எழுதிய 'தலித் பண்பாடு' என்ற நூலில் 'தலித் பண்பாடு' மற்றும் 'தமிழ் தலித் இலக்கியம்' என்ற இரு கட்டுரைகளை எழுதியுள்ளார். சங்க இலக்கியத்திலிருந்து இன்றைய நாவல்கள்வரை தலித்தியப் பிரச்சனைகள் எங்ஙனம் தொட்டுக்காட்டப்பட்டுள்ளன என்பதை விளக்கியுள்ளார். முதல் கட்டுரையில் தலித் பண்பாடு என்பது எதிர்ப் பண்பாடாக மாறவேண்டும் என்றும் கலகப் பண்பாடாக எதிரொலிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றார்.

இந்நூலில் பெரியபுராணத்தைத் தலித்தியப் பார்வையில் ராஜ்கௌதமன் அணுகியிருப்பது குறிப்பிடத்தக்கது. பார்ப்பனராகிய திருஞானசம்பந்தர்க்கும் சைவவேளாளராகிய திருநாவுக்கரசருக்கும் தலித்தாகிய நந்தனார்க்கும் இறையருள் எங்ஙனம் கிடைக்கின்றது என்பதை விளக்கியிருக்கும் விதம், சைவர்களால் போற்றப்படும் பெரியபுராணம் தலித்துகளால் எங்ஙனம் நோக்கப்படுகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

1994இல் 'தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு' என்ற நூலினை ராஜ்கௌதமன் எழுதியுள்ளார். சங்ககாலத்தை மட்டும் எடுத்துக்கொண்டு ஆதித்தமிழர் பண்பாடு, வைதீகமயமான தமிழ்ப்பண்பாடு, ஆதித்தமிழ்ப் பண்பாட்டில் பெண் என்ற மூன்று பகுதிகளாகப் பிரித்து நூலினை எழுதியுள்ளார். மூன்றாம் பிரிவு பெண்ணியமும் தலித்தியமும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை என்பதை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளது. இந்நூலின் 'என்னுரை' என்ற பகுதியில் ராஜ்கௌதமன்,

'தமிழ்ப்பண்பாடு பற்றிய இந்த நூலை ஒரு கதைபோல, தலித் மொழியில் இடையிடையே உரையாடல்களாக எழுதவேண்டும் என்று தீர்மானித்தேன்"[2]

என்று கூறியுள்ளார். அணுகுமுறை மட்டுமல்லாது கூறும் முறையும் தலித்திய முறையாக அமைந்துள்ளது என்பதை இக்கூற்று உறுதிசெய்கிறது.

1996இல் வெளிவந்த 'தலித்தியம்' என்ற நூலில் பலர் எழுதிய பல கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 'தமிழ்நாட்டுப்புற இலக்கியம் ஒரு தலித்தியப் பார்வை' என்ற சு.சண்முகசுந்தரத்தின் கட்டுரை இங்குக் குறிப்பிடத்தக்கது. நாட்டுப்புற இலக்கியங்களிலும் எங்ஙனம் உயர்சாதிக்காரர்களின் எண்ணத்திகேற்ப மாற்றப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

1997இல் 'தலித் பெண்ணியம்' என்ற நூல் வெளிவந்தது. 1995இல் 'இந்துப் பெண்ணியம்' என்ற நூல் வெளிவந்ததும் அதற்கு முரணாக இந்நூல் வந்ததும் கவனிக்கவேண்டிய செய்தியாகும். தலித்தியமும் பெண்ணியமும் ஒடுக்கப்பட்டவர்களின், சுரண்டப்படுபவர்களின் பிரச்சனைகளைப் பேசினாலும், இந்துப் பெண்ணியம் என்பது உயர்சாதிப் பெண்களின் பிரச்சனைகளைப் பேசுவதாகத் தோன்றியதால் தலித் பெண்களின் பிரச்சனைகளைத் தனித்துப் பேசவேண்டிய நிலை ஏற்பட்டது எனலாம். மற்ற பெண்களின் பிரச்சனைகளிலிருந்து தலித் பெண்களின் பிரச்சனைகள் வேறுபட்டவை என்று வெளிப்படுத்துவதற்காகவும் இந்த நூல் எழுந்தது எனலாம்.

இந்நூலில் 'தலித் விடுதலையில் தலித் பெண்ணியப்பார்வை' என்ற கட்டுரையும் 'தலித் இயக்கங்களில் தலித் பெண்ணியப்பார்வை' என்ற கட்டுரையும் குறிப்பிடத்தக்கன. முதல் கட்டுரையில் அரசியல் கட்சிகளும், பெண்ணிய அமைப்புகளும் காட்டுகின்ற போலித்தனமான தலித்பெண்ணிய விடுதலை முழக்கங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன. இரண்டாவது கட்டுரையில் சமயச் சட்டங்கள் உள்ளவரை தலித்தியப் பெண்களுக்கு விடுதலை இல்லை என்பது முன்வைக்கப்படுகிறது.

இதே ஆண்டில் மேலும் இரண்டு நூல்கள் வந்துள்ளன. அவற்றுள் தணிகைச் செல்வனின் 'தலித்தியம் தமிழியம், இந்தியம்' என்ற சிறுநூலின் முன்னுரையில்,

"மார்க்சியம் தீர்வைத் தருவதில்லை. ஆனால்
ஒரு பார்வை தருகிறது. அந்தப் பார்வை
தீர்வைத் தேர்வுசெய்யத் திறன் பெற்றிருக்கும்"

என்று குறிப்பிட்டு[3] அந்தப் புரிதலோடு தலித்தியத்தை அணுகுவதாகக் கூறியுள்ளார்.

இந்நூல்களன்றிச் சில கட்டுரைகளும் தலித்தியப் பார்வையில் எழுதப்பட்டுள்ளன. அ.மார்க்ஸின் 'உடைபடும் புனிதங்கள்' (1997) என்ற நூலில் இரு கட்டுரைகள் மார்க்சியப் பார்வையில் உள்ள குறைகளைச் சுட்டுவதோடு, தலித் இலக்கியம் என்ன என்பதற்கான வரையறைகளையும் காட்டுகின்றது.

'கோவேறு கழுதைகள் - தலித்தியத்தின் இன்னொரு பரிமாணம்' என்ற அறிவனின் கட்டுரை அந்நாவலைத் தலித்தியப் பார்வையில் விமரிசனம் செய்கின்றது. அந்நாவலின் குறைபாட்டையும் சுட்டிக்காட்டுகின்றது.

'கண்காணிப்பின் அரசியல்' என்ற ரவிக்குமாரின் நூலில் இரு கட்டுரைகள் தலித்தியக் கட்டுரைகளாக அமைந்துள்ளன. இதில் தலித் நாடகங்களும் கறுப்பர் நாடகங்களும் ஒப்பிடப்பட்டுள்ளன. தலித்திய நிகழ்கலைகளுக்குரிய சிறப்பம்சங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட நூல்களிலும், கட்டுரைகளிலும் இழையோடும் கருத்துகளாவன தலித் இலக்கியம் மரபுசார்ந்த இலக்கியத்திலிருந்து முற்றிலும் வேறானவை; தலித் பண்பாடு பண்டைக்காலந்தொட்டுப் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது; மார்க்சியப் பார்வையைவிட தலித்தியப் பார்வையே பயனுடையது. தலித்தியப் பார்வையில் பழைய இலக்கியங்களின் மரபுசார்ந்த கருத்துகளும் அண்மைக்கால நவீன இலக்கியங்களின் புதுமைசார்ந்த கருத்துகளும் விவாதத்திற்குட்படுத்தப்பட்டு, நிறைகுறைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. தலித்தியக் கோட்பாடுகளும், தலித்தியப் படைப்புகளும் இணைந்து வளர்ந்துவருகின்ற போக்கையும் காணமுடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. தணிகைச்செல்வன், தலித்தியம், தமிழியம், இந்தியம், பல்கலைப் பதிப்பகம், சென்னை, 1993, ப.4
2. ராஜ்கௌதமன், தலித் பார்வையில் தமிழ்ப்பண்பாடு, என்னுரை, ப2.
3. தணிகைச்செல்வன், தலித்தியம், தமிழியம், இந்தியம், ப2.

## தலித்தியம் (நூல்கள்)

1992 - ராஜ்கௌதமன், 'தமிழக தலித்தும் தமிழ் இலக்கியமும்', ஐடியாஸ் வெளியீடு, மதுரை.

1994 - ராஜ்கௌதமன், 'தலித் பார்வையில் தமிழ்ப்பண்பாடு' கௌரி பதிப்பகம், புதுவை.

1996 - இராசேந்திர சோழன், 'தலித்தியம்', உதய வெளியீடு, மயிலம்.

1996 - சு. சண்முகசுந்தரம் (தொகுப்), 'தலித்தியம்', காவ்யா, பெங்களூர்.

1998 - கோ. கேசவன், 'தலித் இலக்கியம் சில கட்டுரைகள்', புலமைப் பதிப்பகம், மதுரை.

1998 - அ.மார்க்ஸ், பொ. வேல்சாமி (தொகுப்) விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும், நிறப்பிரிகை, கும்பகோணம்.

1999 - தே. ஞானசேகரன், 'தலித் சிந்தனை விவாதம்', மாமன்னர் பதிப்பகம், கோவை.

## தலித்தியம் (கட்டுரைகள்)

1995 - ரவிக்குமார், 'கண்காணிப்பின் அரசியல்' (விளிம்பு, கோவை, 1995).

- 'தலித் கதையாடல்கள் - சில சந்தேகக் குறிப்புகள்', பக்.149-157.

- 'கறுப்பர் நாடகங்களும் தலித் நாடகங்களும்', பக்.176-185.

1995 - ராஜ்கௌதமன், 'பொய் அபத்தம் உண்மை', விளிம்பு - டிரஸ்ட், கோவை, 1997

- 'தமிழ்க் கதைகளில் தலித்தியம்', பக்.28-61.

1997 - அறிவன், நவீனத்தமிழ் இலக்கியம் - சில பார்வைகள், வைகறை, கோவை, 1997.

- 'கோவேறு கழுதைகள் - தலித்தியத்தின் இன்னொரு பரிமாணம்', பக்.149-150.

1997 - அ. மார்க்ஸ், 'உடைபடும் புனிதங்கள்', (விடியல் பதிப்பகம், கோவை, 1997

- 'சோசலிச எதார்த்த வாதத்திலிருந்து தலித் இலக்கியத்தை நோக்கி, பக்.66-83.

'மறுபக்கம் : இதுதான் தலித் இலக்கியம்', பக்.104-111.

## ஈ. பெண்ணிய ஆய்வுகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பெண்விடுதலை குறித்த எண்ணங்கள் வெளிப்பட்டிருப்பினும், தமிழில் பெண்ணிய இயக்கம் என்பது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் வீறுபெறலாயிற்று. பெண்கல்வி என்பது வற்புறுத்தப்பட்டபின்னர் விதவைகளின் திருமணம் போன்ற சீர்திருத்தக் கருத்துகள் பல எழுத்தாளர்களாலும் (வ.ரா) சிந்தனையாளர்களாலும் (பெரியார்) முன்வைக்கப்பட்டன.

மேலைநாட்டுப் பெண்ணியக் கோட்பாடுகள் தமிழில்அறிமுகம் ஆனதும் அதனால் இலக்கியக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களும் இவ்வியலில் விளக்கப்படுகின்றன. பெண்ணியப் பார்வையில் இலக்கியங்களை அணுகுதல் என்பது எண்பதுகளில் தமிழில் ஏற்பட்டது. பெண்ணிய இலக்கியத்திறனாய்வு என்பது தமிழைப் பொறுத்தவரையில்,

1. பழைய இலக்கியங்களைப் பெண்ணியப் பார்வையில் அணுகுதல்.
2. புதிய பெண்ணியக் கோட்பாடுகளைக்கூறி அவற்றைக்கொண்டு இலக்கியப் படைப்புகளை எழுதத் தூண்டல்

என்ற இருநிலைகளில் பெண்ணியத் திறனாய்வு செயற்பட்டு வருகின்றது.

1969இல் லோகநாயகி நன்னிதம்பி என்பவர் மலாயாப் பல்கலைக்கழகத்தில் Women in Modern Tamil Literature- என்ற நூலில் பெண்ணிய அணுகுமுறையைப் பின்பற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

1986இல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் 'பெண்கள் படைப்பில் பெண்கள்' என்ற கருத்தரங்கை நடத்திய தமிழ்த்துறை அக்கட்டுரைத் தொகுப்பை நூலாகவும் வெளியிட்டுள்ளது பெண்ணியத் திறனாய்வு வரலாற்றில் ஒரு திருப்புமுனை எனலாம். அம்பை, ராஜம்கிருஷ்ணன், செகணேசலிங்கன் போன்ற படைப்பாளர்கள் தங்களது முயற்சியால் பெண்ணியச் சிந்தனைகளை முன்வைத்தபோது, ஒரு பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கு நடத்தி, விவாதித்து, நூலாக வெளியிட்ட முயற்சி, ஒரு கல்வி நிறுவனத்திற்குள் பெண்ணியம் தொடர்பான சிந்தனைகள் ஏற்கப்பட்டுள்ளன என்பதைத் காட்டுகின்றது.

இதைத்தொடர்ந்து பெண்ணிய ஆய்வுகள் முனைவர்பட்டங்களுக்குத் தெரிவுசெய்வதும் ஏற்படுகின்றது. ஜெயராணி ராஜதுரை என்பவரின் 'பெண்கள் படைப்பில் சமூகம் (1992) என்பது முனைவர்பட்ட ஆய்வு முயற்சி என்பது குறிப்பிடத்தக்கது. 1993இல் ஹரி விஜயலட்சுமி 'ராஜம் கிருஷ்ணன் புதினங்களில் பெண்மாந்தர்' என்ற முனைவர்பட்ட ஆய்வை நூலாக வெளியிட்டுள்ளார். 1994இல் சிதம்பர சுப்பிரமணியன் 'தமிழ்நாவல்களில் பெண் கதைமாந்தர்' என்ற முனைவர்பட்ட ஆய்வை நூலாக வெளியிட்டுள்ளார். முனைவர்பட்ட ஆய்வுகள் நல்ல தரவுகளை, ஆய்வுநெறிமுறைகளைக் கொண்டிருந்தாலும் பெண்ணிய அணுகுமுறை என்பது தெளிவான பார்வையோடு செய்யப்படவில்லை என்றே தோன்றுகின்றது.

1997இல் எழுதப்பெற்ற 'தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்ணியநோக்கு' என்ற நூல் சீரிய கண்ணோட்டத்தில் அணுகப்பட்ட கட்டுரைகளைக் கொண்டிருக்கின்றது. அந்நூலில் 'கற்பும் கண்ணகியும்' என்ற கட்டுரையில் நீதிகேட்கும் வீரப்பண்புமிக்க சிலப்பதிகாரக் கண்ணகியின் சிறப்புத்தன்மை மழுங்கடிக்கப்பட்டுக் கற்பு வலியுறுத்தப்பட்டுப் பத்தினியாக்கப்பட்டுவிட்டாள் என்ற பெண்ணியப்பார்வை குறிப்பிடத்தக்கது.

வரலாற்றையும் மானிடவியலையும் இணைத்து மார்க்சிய நெறிமுறையில் பெண்நிலை நோக்கில் செய்யப்பட்ட இவ்வாய்வு ஒரு முன்முயற்சி எனலாம். இத்தகு பார்வைகளை முனைவர்பட்ட ஆய்வுகளில் காணஇயலாது என்பதும் கல்வியாளர்களிடையே இத்தகு நோக்கு அதிகரிக்கப்படவேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரா.பிரேமாவின் பெண்ணிய ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. 1994இல் 'பெண்ணியம்' என்ற கோட்பாட்டு நூலை எழுதிய இவர் 1998இல் 'பெண்ணியம் அணுகுமுறைகள்' என்ற நூலில் பல பயன்பாட்டுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இத்தகு கடடுரைகளே அணுகுமுறை ஆய்வுகளாகக் கொள்ளப்படுகின்றன. ஒரு நாவலை இருபது ஆண்டுகளுக்குமுன் அணுகியதற்கும் இன்று பெண்ணியப்பார்வையில் அணுகியதற்கும் உள்ள வேறுபாடுகளை இத்தகு கட்டுரைகள் வெளிப்படுத்தும்.

1995இல் 'இந்துப் பெண்ணியம்' என்ற நூல் வெளிவந்தது. இந்துப் பெண்களுக்குரிய சிக்கல்கள் இதில் விரிவாக அலசப்பட்டன. தி.ஜானகிராமன் நாவல்களை அடிப்படையாகக் கொண்டு, பிராமணியம் அல்லது உயர்சாதி இந்துக்களின்

பார்வையில் பெண்ணியம் எவ்வாறெல்லாம் கொச்சைப் படுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்குகின்ற ஆய்வாக இந்நூல் வெளிப்பட்டுள்ளது.

1997இல் 'தலித் பெண்ணியம்' என்ற நூல் வெளிவந்தது. பெண்களுக்குரிய பொதுவான சிக்கல்களோடு தலித்திய பெண்களுக்குரிய தனித்த சிக்கல்களையும் வெளிக்காட்டுவதே இந்நூலின் முயற்சியாகும். மேலும், இந்துப்பெண்ணியம் என்பது பிராமணப்பெண்கள் என்ற கருத்தை வெளிப்படுத்த அதற்கு மாறாகத் தலித்தியப்பெண்கள் என்ற சிந்தனை உருவாகியதை இங்குச் சுட்டலாம்.

இந்தியாவில் மார்க்சியம் அறிமுகமாவதற்கு முன்பே பல எழுத்தாளர்களும் சீர்திருத்தவாதிகளும் பெண்விடுதலை குறித்துப் பேசியுள்ளனர். எனினும், மார்க்சியப் பெண்நிலைவாதம் என்ற கருத்து, பெண்ணியக் கோட்பாட்டடிப்படையில் எழுந்த பலவித சிந்தனைகளை முன்வைத்துள்ளது. தாய்வழிச் சமுதாயம் மேம்பட்டிருந்த காலத்தில் வாரிசுரிமைக்காகவும், சொத்திற்காகவும், ஆண், பெண்ணை ஒருநபர் மணத்தின்மூலம் கட்டுப்படுத்தியதன் விளைவாக முதல் வர்க்க நசுக்குதல் உண்டாயிற்று என்றும் இங்குதான் பெண் அடிமையாக்கப்பட்டாள் என்றும் ஏங்கல்ஸ் கூறியது[1] மார்க்சியப் பெண்ணியத் திறனாய்வாளர்களுக்கு ஒரு வழிகாட்டுதலாக அமைந்தது.

படைப்பாளராகவும், பெண்ணியத் திறனாய்வாளராகவும் விளங்கும் ராஜம்கிருஷ்ணன் காலந்தோறும் பெண் (1989), காலந்தோறும் பெண்மை (1990) ஆகிய இருநூல்களை எழுதியுள்ளார். பெண்ணியக் கண்ணோட்டம் இந்நூல்களில் இடம்பெற்ற கட்டுரைகளில் இடம்பெற்றிருப்பினும் அவை பெண்ணியக் கோட்பாடுகளைக்கொண்டு அணுகப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவரே 1995-இல் 'இந்தியச் சமுதாய வரலாற்றில் பெண்மை' என்ற நூலை எழுதியுள்ளார்.

1989இல் சாந்தி சச்சிதானந்தம் எழுதிய 'பெண்களின் சுவடுகளில்' என்பது பெண்களின் சமூக, பண்பாட்டு வரலாற்றையும் பிரேமா அருணாசலம் எழுதிய 'பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும்' (1993) என்பது பழைய இலக்கியங்களில் இடம்பெற்ற பெண்களின் நிலைகளையும் பெண்ணியப் பார்வையில் விளக்குவனவாகும்.

பின்நவீனத்துவச் சிந்தனைகளின் விளைவாகத் தீவிரம் பெற்ற பெண்ணிய ஆய்வு, தலித் பெண்ணியம் (1997) பெண் மொழி

புனைவு (1999) அரசு-குடும்பம்-பெண்ணியம் 1994 போன்ற நூல்கள் எழக் காரணமாகியது. இந்நூல்களில் இடம்பெற்ற கருத்துகள் இந்தியச் சூழலுக்கேற்ற பெண்ணியச் சிந்தனைகளை முன்வைப்பதோடு, பின் நவீனத்துவக் கோட்பாடுகளில் ஒன்றான, மையப்பார்வையையும் உலகந் தழுவிய போக்கையும் நிராகரித்துள்ளதைக் காணலாம்.

தமிழக, இந்திய அளவில் வாழ்கின்ற சூழலில் உணரப்பட்டதும், மேலை நாடுகளிலிருந்து பெறப்பட்டதுமான பெண்ணியச் சிந்தனைகளின் வெளிப்பாடுகளாகவே பெண்ணிய ஆய்வுகள் வெளிவந்துகொண்டிருந்தன. இப்போக்கிலிருந்து மாறுபட்ட கோணங்களில் பெண்ணியப் பார்வைகள் கொண்ட படைப்புகளும், திறனாய்வுக் கட்டுரைகளும் 1990களில் வெளிப்படலாயின. 1980களில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் காரணமாகப் பல நாடுகளுக்கும் சென்று வாழக்கூடிய கட்டாயநிலை, இலங்கைத் தமிழ் மகளிர்க்கு ஏற்படுகின்றது. மேலைநாடுகளுக்குச் சென்ற அவர்கள் தமிழ்ப்பண்பாட்டோடு அயலகப் பண்பாட்டையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆட்படுகின்றனர். பெண்ணியம் குறித்த சிந்தனைகள் மிக்கோங்கி ஒலிக்கும் பிரான்சு, ஜெர்மனி, சுவிஸ் போன்ற நாடுகளில் வாழும் தமிழ் மகளிரின் அனுபவங்கள் தமிழக மகளிரின் அனுபவங்களைக் காட்டிலும் நேரடியானவை மற்றும் பரந்துபட்டவை. அந்நாடுகளில் வாழ நேர்ந்த மகளிரின் செயற்பாடுகளும், எண்ணங்களும் பல்வேறு படைப்புகளாகவும் திறனாய்வுக் கட்டுரைகளாகவும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவ்வகையில் 2002இல் வெளிவந்த 'ஊடறு' என்ற தொகுப்பு நூல் படைப்புத் தளத்திலும், திறனாய்வுத் தளத்திலும் பெண்ணியச் சிக்கல்களை வெளிப்படுத்தியுள்ளன. வேசிகள், தேவதாசிகள் பற்றிய கட்டுரையும், பூப்பு நீராட்டு விழாவைச் சென்ற நாடுகளிலும் நடத்துகின்ற முயற்சியில் ஏற்படுகின்ற உளவியல் சிக்கல்களும், பாலியல் தொடர்பான அரசியலும், தொழில்நுட்ப வளர்ச்சியும் பெண்விடுதலையும் போன்ற பல்வேறு நிலைப்பாடுகளின் சிக்கல்கள் பெண்ணியப் பார்வைமூலம் விவாதிக்கப்பட்டுள்ளன. முழுமையும் பெண்களே உருவாக்கிய கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், ஓவியங்கள் கொண்ட "ஊடறு" பெண்ணியச் சிந்தனை வளர்ச்சிக்குச் சான்றான தொகுப்பாகும்.

சிறுபத்திரிகைகளில் பெண்ணியம் தொடர்பான பலகட்டுரைகள் எழுதப்பட்டிருப்பினும், குறிப்பிட்ட பெண்ணியக் கோட்பாட்டைக்கொண்டு விளக்கிய கட்டுரைகள் அரிதாகவே தென்படுகின்றன. இதில் க. பஞ்சாங்கத்தின் பெண்ணெனும்

படைப்பு (1994) என்ற நூலும் 'பெண்ணியத் திறனாய்வு' என்ற மொழிபெயர்ப்புக் கட்டுரையும் (1999) பெண்ணியக் கோட்பாடுகளை விளக்குவதோடு அதுபற்றிய சிந்தனைகளை முன்னெடுத்துச் செல்லவும் வழிவகுக்கின்றன.

பெண்ணிய ஆய்வுகள் தமிழில் பலதுறைக் கண்ணோட்டத்தில் ஏற்படாத குறையைப் போக்கும் வண்ணம் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் பெண்ணிய ஆய்வுகள் என்ற கருத்தரங்கை நடத்தி, அதில் படிக்கப்பெற்ற கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளது. 1998இல் வெளிவந்த இந்த நூலில் மொழியியல், மானிடவியல், இலக்கியவியல், நாட்டார் வழக்காற்றியல் ஆகிய அறிவுத்துறைகளின் பார்வையோடு ஆராய்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சிற்றிதழ்களில் 'நிறப்பிரிகை' தலித்தியம், பெண்ணியம் போன்றவற்றிற்கு முதன்மைதரும் இதழாகும். இவ்விதழ் நடத்திய பெண்ணியம் தொடர்பான கலந்துரையாடலும் கட்டுரைகளும் 1994இல் நூலாக வெளிவந்தன. ரவிக்குமார், ராஜ்கௌதமன், கோ.ராஜாராம் போன்றோரின் கட்டுரைகளும் பல மொழிபெயர்ப்புக் கட்டுரைகளும் அடங்கிய இந்நூல் மார்க்சியம் கடந்த பெண்ணியச் சிந்தனைகளை முன்வைப்பதாக அமைந்துள்ளது. பொருளியல், கருத்தியல், உடலியல், அரசியல் களங்களில் பெண்மீதான ஒடுக்குமுறை மேற்கொள்ளப்படுகிறது. குடும்பம், மதம், கல்வி போன்ற நிறுவனங்கள் வழியாக இது செயற்படுத்தப்படுகின்றது. இவற்றில் குடும்பத்தின் பங்கு மிகமுக்கியமானது போன்ற கருத்துகள் இக்கட்டுரையில் மையப்படுத்தப்பட்டுள்ளன.

இன்றைக்குக் கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பெண்ணியம் தொடர்பான ஆய்வுகள் அதிகமாக வெளிவரத் தொடங்கியுள்ளன. 1990களில் ஏற்பட்ட எழுச்சியே இதற்குக் காரணமாகும். மேலும், மேலைநாட்டுக் கோட்பாடுகள் பல அறிமுகப்படுத்தப்படினும், தமிழ்ச் சூழலுக்கேற்ற பெண்ணியச் சிந்தனைகள் வெளிவரத் தொடங்குவது நல்ல முயற்சியாகும்.

## பெண்ணிய ஆய்வுகள்

1969 - Loganayaki Nannithambi, Women in Modern Tamil Literature, University of Malaysia, Kualalumpur.

1982 - பெரியார், பெண் ஏன் அடிமையானாள், பெரியார். சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், சென்னை.

1985 - C.S. Lakshmi. The Face Behind the Mask, New Delhi.

1985 - கணேசலிங்கன், பெண்ணடிமை தீர, பாரிநிலையம், சென்னை.

1986 - பெண்கள் படைப்பில் பெண்கள், தமிழ்த்துறை வெளியீடு, அன்னதெரசா மகளிர்பல்கலைக்கழகம், கொடைக்கானல்.

1989 - சாந்தி சச்சிதானந்தம், பெண்களின் சுவடுகளில், தமிழியல் சென்னை.

1989 - ராஜம் கிருஷ்ணன், காலந்தோறும் பெண், தாகம், சென்னை.

1994 - அ.மார்க்ஸ், இ. ரவிக்குமார், பெ.வேலுசாமி (தொ) அரசு-குடும்பம்-பெண்ணியம், விடியல் பதிப்பகம், கோவை.

1994 - க. பஞ்சாங்கம் (தமிழாக்கம்) பெண்ணெனும் படைப்பு, செல்வன் பதிப்பகம், புதுவை.

1994 - கதிர் மகாதேவன், இரா.மோகன், பெண்ணியம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

1994 - எம்.ஏ. சுசீலா, விடுதலைக்குப்பின் தமிழ்நாவல்களில் பெண்கள், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.

1994 - ச.சிதம்பர சுப்பிரமணியன், தமிழ் நாவல்களில் பெண் கதைமாந்தர், குமரன் பதிப்பகம், சென்னை.

1994 - பி.எல். இராஜேந்திரன், பெண்கள் பார்வையில் பெண்கள், சங்கீதா பதிப்பகம், சென்னை.

1995 - க. பரிமளம், இந்துப் பெண்ணியம், சமுதாயச் சிந்தனை செயல் ஆய்வுமையம், மதுரை

1995 - சா. வளவன், பெண்படைப்பாளர் தம் படைப்புகள், ஆசிரியர் வெளியீடு,சென்னை.

1995 - ராஜம்கிருஷ்ணன், இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை, தாகம், சென்னை.

1996 - ச. சிவகாமி, காலச்சுழலில் பெண், மாதவி பதிப்பகம், சென்னை.

1996 - உதகை பொன்னழகன், பெண்பாற் களஞ்சியம், கங்கை புத்தக நிலையம், சென்னை.

1996 - பெண்ணியம் (தமிழியல் ஆய்வுக்கட்டுரை தொகுப்பு) ஞாலத்தமிழ்ப் பண்பாட்டு ஆய்வுமன்றம்,மதுரை.

1996 - ராஜகோபாலன் (பதிப்.) பெண்ணியப் பார்வைகள், சென்னை கிறித்தவக் கல்லூரி, தமிழ்த்துறை, சென்னை.

1997 - சித்து மா. சாலமன், பெண்ணியம் போட்ட பதியங்கள், கிரியேட் வெளியீடு, மதுரை.

1997 - செல்வி திருச்சந்திரன், நமது வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒருபெண்நிலை நோக்கு , குமரன் பதிப்பகம்.

1997 - ரா. விஜயலட்சுமி, தமிழக மகளிர் தொடக்ககாலம் முதல் ஆறாம் நூற்றாண்டுவரை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

1997 - அன்புக்கரசி, மோகன் லாபீர், தலித் பெண்ணியம், தலித் ஆதார மையம், மதுரை.

1997 - செ. சௌரிராஜ், சிவசங்கரி நாவல்களில் பெண்கள், காவ்யா, பெங்களூர்.

1998 - வெ. கோவிந்தசாமி நடராஜ், (மொழிபெயர்ப்பு) மார்க்சியம்-பெண்ணியம் உறவும் முரணும், விடியல் பதிப்பகம், கோவை.

1998 - எபி. வள்ளிநாயகம், மனோகரிதாஸ், எட்வர்டு எம்ஆரோக்கியதாஸ் பெரியார் - பெண்மானுடம், பெண்கள் முன்னேற்ற ஆதாரமையம், மதுரை.

1998 - இரா. பிரேமா, பெண்ணியம் அணுகுமுறைகள், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை.

1998 - பக்தவச்சலபாரதி, இரா. சம்பத் (பதிப்) பெண்ணிய ஆய்வுகள், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுவை.

1999 - க.பஞ்சாங்கம், பெண்-மொழி-புனைவு, காவ்யா, பெங்களூர்.

2001 - பி.இரயாகரன், ஆணாதிக்கமும் பெண்ணியமும், கீழைக்காற்று வெளியீட்டகம், சென்னை.

2002 - நிருபா முதலிய நால்வர் (தொகுப்.) ஊடறு, விடியல் பதிப்பகம், கோவை.

# முடிவுரை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வரலாற்றுத் துறையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த தமிழ் இலக்கியம், ஒப்பியல் இலக்கியம், உரக்கப் பேசப்பட்டபோது பிறதுறைக் கோட்பாடுகளைக்கொண்டு நோக்கப்பட்டது. மொழியியல், உளவியல், மானிடவியல் போன்ற துறைக் கோட்பாடுகள்வழி இலக்கியங்களை அணுகுதல் என்பது மிகக்குறைந்த விழுக்காடே தமிழில் எழுந்துள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து மார்க்சியக் கோட்பாடுகளைக் கொண்டு இலக்கியங்களை ஆராய்தல் என்பது முதன்மை பெறத் தொடங்கியது. மார்க்சிய ஆய்வுகள் தமிழ்த்திறனாய்வு வரலாற்றில் பல திருப்பங்களை ஏற்படுத்தின. இலக்கியநயங்களையும், இலக்கியங் காட்டுகின்ற சமூகங்களையும் வெளிப்படுத்துவதே திறனாய்வு என்ற நிலையை மாற்றி, இலக்கியத்திற்கான சமூகவேர்களைக் கண்டறிதலை மார்க்சியத் திறனாய்வாளர்கள் அறிமுகப்படுத்தினர். அடிக்கட்டுமானமாகிய பொருளாதாரத்திலிருந்து மேற்கட்டுமானமாகிய இலக்கியம் எவ்வாறு உருவாகிறது என்றும் உள்ளடக்கம்தான் உருவத்தைத் தீர்மானிக்கிறது என்றும் விளக்கினர். இதனால், இலக்கிய ஆய்வு என்பது இலக்கியத்திற்குப் புறம்பே காணப்படும் அரசியல், சமய, சமூகப் பண்பாடுகளின் ஆய்வாகவும் வெளிப்பட்டது.

மார்க்சிய ஆய்வுகளிலேயே கட்சிசார்பான கண்ணோட்ட ஆய்வுகளை விமரிசனம் செய்வதும், முதன்மை அளிக்கப்படாத அழகியல் போன்ற கூறுகளுக்கு முதன்மை அளித்தலும், சமூகம் இலக்கியத்தைப் பாதிப்பதைப்போல இலக்கியமும் சமூகத்தைப் பாதிக்கிறது என்ற சிந்தனையும் மார்க்சியத் திறனாய்வாளர்களிடையே பல வேறுபாடுகளை ஏற்படுத்தின. ரகுநாதன், க. கைலாசபதி, கோ. கேசவன் போன்றோர் கறாரான மார்க்சிய விமர்சகர்களாகச் சுட்டப்படத் தமிழவன், அ.மார்க்ஸ், ஞானி, எம்.ஏ.நுஃமான் போன்றோர் மார்க்சியப் புரிதல்களின் குறைபாட்டைச் சுட்டுகின்றவர்களாக வெளிப்பட்டனர்.

பின் நவீனத்துவச் சிந்தனைகளான அமைப்பியல், பின் அமைப்பியல் என்ற கோட்பாடுகளும், சோவியத் யூனியன் சிதறுண்ட சூழலும் மார்க்சியம் பற்றிய கருத்தின் மறுபரிசீலனைக்குப் பலரைக் கொண்டு செலுத்தியது. மார்க்சிய அமைப்பியல் என்பது புதிதாகக் கூறப்பட்டது. சோசலிச எதார்த்தவாதம், எதிரொளிப்புக்கொள்கை போன்றவை கேள்விக்குட்படுத்தப்பட்டன. உலகளாவிய கருத்து என்பதும் மையத்தை நோக்கிய ஆய்வு என்பதும் மறுக்கப்பட்டன.

விளிம்புநிலை மக்களும், ஒடுக்கப்பட்ட மக்களும், சிதறுண்ட மக்களும் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்துவதும், இலக்கியப்பிரதி என்பது வாசகர்களால் எங்ஙனம் கட்டமைக்கப்படுகிறது என்பதை விளக்குவதும் இன்றைய திறனாய்வின் முதன்மைப் பங்களிப்பாக உள்ளது. இதனால் பெண்ணியம், தலித்தியம் போன்ற இயக்க எழுச்சிகளும் அவற்றை அடியொற்றிய இலக்கியப் படைப்புகளும் தொண்ணூறுகளில் அதிகம் எழத்தொடங்கின. கோட்பாடுகளுக்கு முதன்மைதருகின்ற போக்கு உருவாகிக் குறிப்பிட்ட கோட்பாடுகளுக்கு முதன்மை அளித்தல் என்பது தேவைதானா? என்ற அளவிற்குப் பின்நவீனத்துவச் சிந்தனை எழுச்சி தமிழில் எழத் தொடங்கியுள்ளது. ஞானி, அ.மார்க்ஸ், ந.முத்துமோகன், பிரேம், ராஜ் கௌதமன், தமிழவன் போன்றோர் இத்தகைய ஆய்வு வளர்ச்சியில் முக்கியப் பங்களித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மார்க்சிய ஆய்வுகள் எழுந்தபின்னரே, மார்க்சியக் கோட்பாட்டு நூல்கள் தமிழில் வரத்தொடங்கின. இதற்கு மாறாக அமைப்பியல் கோட்பாட்டு நூல்கள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே அக்கோட்பாட்டைப் பயன்படுத்தி இலக்கியங்களைப் பார்க்கின்ற பயன்பாட்டு ஆய்வுகள் எழுந்துவருகின்றன. தலித்தியம், பெண்ணியம் போன்ற சிந்தனைகளில் கோட்பாடுகளும் பயன்பாட்டு ஆய்வுகளும் இணைந்து வருவதைத் தமிழில் வெளிவரும் நூல்கள் வெளிப்படுத்துகின்றன.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| இலக்கிய இதழ்கள் | 110.00 |
| தொல்காப்பியத் தொடரியல் | 120.00 |
| வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை | 25.00 |
| இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி | 35.00 |
| தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின்தமிழ்த்தொண்டும்மொழியியல்பங்களிப்பும் | 25.00 |
| இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும் | 40.00 |
| பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும் | 80.00 |
| தமிழெனப்படுவது | 115.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கணம் & மொழியியல் | 105.00 |
| வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும் | 70.00 |
| தொல்லியல் நோக்கில் சங்ககாலம் | 45.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு (தொன்மை முதல் கி.பி.500 வரை) | 45.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி.501 - கி.பி.900) | 70.00 |
| பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் | 35.00 |
| திருமணம் செல்வக்கேசவராய முதலியார் | 30.00 |
| அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார் | 55.00 |
| சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார் | 40.00 |
| மூதறிஞர் மு. இராகவையங்கார் | 40.00 |
| ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு | 30.00 |
| தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1 | 80.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2 | 85.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3 | 95.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 180.00 |
| நாவல்கலையியல் | 50.00 |
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி | 60.00 |
| சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |

**Pub.No. 530** **தமிழில் பிற துறைக் கோட்பாட்டாய்வுகள்** **25.00**